
# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-9 செப்டம்பர்-2024 ஸபர்-ரபியுலவ்வல் 1446


● நாளந்தா பல்கலைக்கழகம் தாக்குதல் ? - இன்னொரு ஆய்வு!




## வக்ஃப் சட்ட திருத்த மசோதா ஏன் பின்வாங்கப்பட வேண்டும்

## ஒரே நொடியில் சாதியை ஒழித்துவிட்டேன்

கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ்

நேர்காணல்






## பாலஸ்தீன மீட்புப் போரில்.... இஸ்லாமிய ஊடகங்களின் சாதனைகள்!


# வைகறை வெளிச்சம்


செப்டம்பர்-2024 ■ ஸபர்-ரபியுலவ்வல் 1446

■ தனிஇதழ் - ரூ. 40

■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480


■ வெளிநாடு - ரூ. 5000

மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





**வக்ஃப் சட்ட திருத்த மசோத ஏன் பின்வாங்கப்பட வேண்டும்** 4

**ஒரே நொடியில் சாதியை ஒழித்துவிட்டேன்**

**கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் நேர்காணல்** 23








**பாலஸ்தீன மீட்புப் போரில்.... இஸ்லாமிய ஊடகங்களின் சாதனைகள்!** 7

நாளந்தா பல்கலைக்கழகம் தாக்குதல் ? - 12

நாளந்தாவா? ஒடன்தபுரி பல்கலைக்கழகமா? - 17

வரலாற்றை முஸ்லிம்களுக்கு எதிராக திருப்புவது எப்படி..? - 20

ஸ்ரீரங்கம் வழக்கு : நவாப் நேரில் விசாரணை - 31

வேளாளர் குல தெய்வம் ராவுத்தர் - 34

வஃக்பு சொத்துக்களை கைப்பற்ற முயலும் பா.ஜ.க-வின் சதி - 35

ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - 39

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் - முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 42

மணிப்பூரில் நரவேட்டையாடிய முதல்வர் பிரேன்சிங்! - 45

மகளிர் மன்றம் - 48

மருத்துவம் - 53

பக்ரீத் பெருநாள் விருந்து நிகழ்ச்சி - 56

தலையங்கம் - 60



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

vaigarai velicham official




# வக்ஃப் சட்ட திருத்த மசோதா ஏன் பின்வாங்கப்பட வேண்டும்

**தற்போது** கொண்டு வரவிருக்கும் வக்ஃப் திருத்த சட்டம் பெரும் விவாதத்திற்கு உள்ளாகி யிருக்கிறது. இந்த சட்டம் என்ன மாற்றத்தை கொண்டு வரப்போகிறது என்பதனை விரிவாக பார்க்கலாம்.

முதலில் வக்ஃப் என்றால் என்ன?. வக்ஃப் என்பதன் அர்த்தம் இறைவனுக்காக அர்ப்பணிக் கப்பட்டது என்று பொருள். இதன்படி எதனையும் வக்ஃப் (இறைவனுக்காக கொடுக்க) செய்ய முடியும்.

இதிலேயே movable and immovable வக்ஃப் சொத்தெல்லாம் உண்டு. இப்படி இந்தியா முழுக்க இருக்கும் வஃக்ப் செய்யப்பட்ட சொத்துகளை நிர்வகிப்பதற்காக உருவாக்கப் பட்டதுதான் வக்ஃப் போர்டு. ஒருமுறை வக்ஃப் செய்யப்பட்ட சொத்து மீண்டும் தனி பயன்பாட்டுக்கு வராது என்பது தான் வக்ஃப் சட்டம். இதனை irrevocable என்று சொல்லலாம். அதாவது ஒருமுறை இறைவனுக்காக கொடுக்கப்பட்டது, கொடுக்கப்பட்டதுதானே தவிர அதனை திருப்பி கேட்டு பெற முடியாது. பொது பயன்பாட்டுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இப்படி இந்தியாவில் உருவாக்கப்பட்ட வக்ஃப் போர்டின் நிர்வாகத்தின் கீழ் 8.7 லட்சம் சொத்துகள் உள்ளன. அதன் நிலப்பரப்பு 9.4 லட்சம் ஏக்கர் பரப்பளவு கொண்டது. கிட்டத் தட்ட கோவா மாநிலத்தின் நிலப்பரப்பை ஒத்தது வக்ஃப் போர்டின் கைவசம் உள்ள நிலப்பரப்பு.

இவ்வளவு பெரிய சொத்தை கொண்டிருக்கும் மற்ற இரண்டு துறைகள் ஒன்று இந்திய அரசு, இரண்டாவது இரயில்வே, மூன்றாவது வக்ஃப்.

வக்ஃப் கைவசம் உள்ள இந்த நிலங்களை நிர்வகிக்க வக்ஃப் போர்டு மொத்தம் 32 வக்ஃப் போர்டு கிளை அமைப்பை கொண்டிருக்கிறது.

இந்தியாவில் இருக்கும் வக்ஃப்களை பராமரிக்க ஒவ்வொரு வஃக்ப்'க்கும் முத்தவல்லி ஒருவர் நியமிக்கப்படுவார். இந்த முத்தவல்லி தான் வக்ஃப் போர்டினால் குறிப்பிட்ட வக்ஃப் நிலத்தை பராமரித்து பாதுகாக்கும் பொறுப் பாளர். இந்த நியமனத்தை கண்காணிக்கும் பொறுப்பு இந்த 32 வக்ஃப் போர்டினுடையது.

ஆனால் இந்த வஃக்ப் சொத்துகள் பெரும் பாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் இந்தியாவில் வஃக்ப் துறையை பொறுத்தவரை மிகவும் ஊழல் படிந்த துறையாக மாறியிருக் கிறது. இதனை பலப்படுத்த வேண்டும் என்ற குரல் தொடர்ச்சியாக எழுந்து கொண்டிருந்தது.

வக்ஃப் போர்டின் செயல்பாடுகளை முறைப் படுத்த உருவாக்கப்பட்டதுதான் வக்ஃப் சட்டம். இந்த சட்டத்தில் 1955ல் கொண்டு வரப்பட்ட சட்டம் முக்கியமான சட்டத்திருத்தத்திற்கு உட்பட்டு தற்போது மற்றொரு சட்டத் திருத்தத்திற்கு தயாராக இருக்கிறது.

ஆனால், தற்போது கொண்டு வரவிருக்கும் சட்டத்திருத்தம் வக்ஃப் சொத்தினை பாதுகாக் காமல் அதனை அரசு பறிக்கும் வேலையை செய்யவிருக்கிறது என்பது தான் பொதுவான குற்றச்சாட்டு.


vaigarai velicham official

இந்த வக்ஃப் போர்டு நியமனம் இவையெல்லாம் அரசியலமைப்பு வழங்கியுள்ள மத உரிமைகளின் கீழ் வரக்கூடியது. குறிப்பாக article 26, மதம் தொடர்பான விசயங்களில் அரசு தலையிடுவதை தடுக்கிறது. இதனை freedom of religious affairs என்று குறிப்பிடுகிறது.

**தற்போது கொண்டு வரவிருக்கும் வக்ஃப் சட்டத்திருத்தில் இருக்கும் மிக முக்கிய பிரச்சனைகளாக கருதப்படுபவை**

1. வக்ஃப் போர்டுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தன்மை பெரிய அளவில் பறிக்கப் படுகிறது.

2. முஸ்லிமல்லாதவர்களுக்கும் வக்ஃப் போர்டில் பங்கு பெறும் உரிமை.

3. வக்ஃப் போர்டுக்கு இனி யாரெல்லாம் நிலம் கொடுக்க முடியும் என்பதில் வரையறை.

4. வக்ஃப் தீர்ப்பாயத்தின் கையில் இருந்த மிக முக்கியமான அதிகாரத்தை பறித்து அரசு இயந்திரத்திடம் ஒப்படைத்தல்.

இந்த நான்கு பிரச்சனைகள்தான் மிக முக்கிய பிரச்சனையாக தற்போது கொண்டு வரப்படிருக்கும் வஃக்ப் சட்டத்திருத்தம் குறித்து குறிப்பிடுகிறார்கள்.

**தற்போதைய சட்டத்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள்**

1. தற்போது கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டத்திருத்தத்தின் பிரிவு 40 வக்ஃப் வாரியத்தின் கைகளில் இருந்த அதிகாரத்தை பறித்து மாவட்ட ஆட்சியர் கைகளில் ஒப்படைக் கிறது. 1995 சட்டத்திருத்தத்தின் முறையில் வஃக்ப் சொத்து யாருக்கானது என்ற பிரச்சனை வரும் போது அதில் விசாரணை செய்து வக்ஃப் வாரியம் தான் இறுதியான முடிவு எடுக்கும். ஆனால், தற்போது இந்த அதிகாரம் மாவட்ட ஆட்சியரின் கைகளுக்கு செல்கிறது. வக்ஃப் வாரியத்தின் விசாரணை என்பது நீதிபதிகளால் நடத்தப்படுவது. ஆனால், அரசு அதிகாரிகளின் வசம் இந்த அதிகாரத்தை ஒப்படைப்பதன் மூலம் அரசுக்கு ஆதரவாகவே அதிகாரிகள் செயல்படுவார்கள் என்ற பார்வை முன் வைக்கப்படுகிறது.

2. இன்னொன்று இந்த வக்ஃப் சட்டத் திருத்தம் பெண்களுக்கு ஆதரவாக பெண்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துகிறது என்று சொல்வதில் உண்மையில்லை. ஏனென்றால் நடைமுறையில் இருக்கும் வக்ஃப் சட்டத்தில் குறைந்தது இரண்டு முஸ்லிம் பெண்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது புதிய திருத்தம் என்று பலரும் குழப்பிக் கொள்கிறார்கள். இது ஏற்கனவே நடைமுறை யில் இருக்கும் சட்டத்தில் இருக்கிறது. பெண்களின் பங்கேற்பில் எந்தவித மாற்றமும் புதிய சட்டதிருத்தத்தில் இல்லை.

3. அதேபோல் ஒவ்வொரு வக்ஃப்'ம் கட்டாயம் இந்த சட்டம் அமலுக்கு வந்த தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் பதிவேற்றம் செய்யப்பட்டு அனைத்து கணக்குகளும் மாவட்ட ஆட்சியரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும் குறிப்பிடுகிறது. 2024 வக்ஃப் சட்டத்திருத்தம் அமல்படுத்தப்பட்ட தேதியிலிருந்து இந்தியாவில் உள்ள அனைத்து வக்ஃப் சொத்துகளை பராமரிக்கும் முத்த வல்லிகளும் 1. வக்ஃப் சொத்தின் எல்லை அளவுகள், 2.வக்ஃப் தொடங்கப்பட்ட நபர் மற்றும் தேதியின் தகவல்கள். 3. முத்தவல்லி தொடர்பான தகவல், 4. வக்ஃப் சொத்தி லிருந்து வரக்கூடிய வருட வருமானம் இவற்றை யெல்லாம் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியரிடம் சமர்பிக்க வேண்டும்

4. ஒரு வக்ஃப் சொத்து அரசுக்கு உரியதா அல்லது வக்ஃப் சொத்தா என்ற பிரச்சனை எழும்போது மாவட்ட ஆட்சியர் அதனை விசாரித்து ஒரு அறிக்கை அரசிடம் சமர்பிக்க வேண்டும். அந்த அறிக்கை சமர்பிக்கும் வரையில் அந்த சர்ச்சைக்குரிய நிலம் வக்ஃப் நிலமாக கருதப்பட மாட்டாது.

5. முஸ்லிமல்லாதவர்கள் நியமனம்: ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் முஸ்லிமல்லாதவர்கள் வக்ஃப் போர்டுக்குள் நியமிக்கும் உரிமையை பெற்றிருந்தனர். ஆனால், இந்த சட்டத்திருத்தம் வக்ஃப் தலைவர் CEO கூட முஸ்லிமல்லாதவராக இருக்கலாம் என்று சொல்கிறது. 2022ல் பாஜக தலைவர் அஸ்வினி மகாஜன் என்பவர் உச்சநீதிமன்றத்தை நாடி வக்ஃப் சட்டத்தில் CEO முஸ்லிமாக இருக்க வேண்டும் என்பதை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்தார். ஆனால் அதனை உச்சநீதிமன்றம் இந்து அறநிலையத்துறை பராமரிப்புக்குள் மற்ற மதத்தவர்கள் அனுமதிக்கப்படாமல் இருப்பது போல முஸ்லிம்களுக்கு இந்த உரிமை இருக்கிறது என்று தள்ளுபடி செய்தது. ஆனால்,

உச்சநீதிமன்ற பார்வைக்கு நேரெதிரான சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

6. எப்பொழுது வேண்டுமானாலும் மத்திய அரசு நேரடியாக வக்ஃப் சொத்து குறித்து அதன் கணக்கு தணிக்கை (audit) குறித்து விசாரிப்பதற்கான அதிகாரத்தை புதிய சட்டத்திருத்தம் வழங்குகிறது.

7. நடைமுறையில் இருக்கும் வக்ஃப் சட்டத்தில் வக்ஃப்க்காக யார் வேண்டுமானாலும், முஸ்லிம்கள் அல்லாதவர்கள் கூட தானமாக நிலம் உட்பட விருப்பப்பட்டதை தானமாக கொடுக்க முடியும். ஆனால், இனி முஸ்லிம்கள் மட்டும் தான் வக்ஃப்க்காக தானமாக நிலம் கொடுக்க முடியும்.

இது மிக முக்கிய திருத்தங்களாக குறிப்பிடப்படுகிறது. மொத்தமாக புதிய சட்டத் திருத்தத்தில் 40 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

### ஏற்படவிருக்கும் பிரச்சனைகள் மற்றும் முரண்கள் அரசு VS வக்ஃப் (முஸ்லிம்)

ஒரு நிலம் யாருக்கு சொந்தம் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் Executive-க்கு கிடையாது என்பது உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டல். மேலும் இதற்கு சரியான உதாரணம் தற்போது தமிழ்நாட்டில் தமிழக அரசால் 2022-ல் கொண்டு வரப்பட்ட நிலத்தை ரத்து செய்யும் உரிமையை வழங்கியிருந்த மாவட்ட பதிவாளருக்கான உரிமையை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. இதை விசாரித்த நீதிபதிகள் S.S.Sundar மற்றும் N.Senthikumar, முன்வைக்கும் மிக முக்கியமான வாதம், ஒரு நிலத்தை யாருக்கு உரியதா, இல்லையா என்று முடிவெடுக்கும் அதிகாரம் Execcutiveகளுக்கு இல்லை. அவர்களுக்கு சட்ட அறிவு போதுமான அளவு கிடையாது. அவர்கள் நீதிபதிகள் இல்லை. அதிலும், Executiveகைகளில் இந்த அதிகாரம் கிடைக்கும்போது அரசு தொடர்பான வழக்கின் அரசுக்கு சாதகமாகவே முடிவெடுக்க வழிவகுக்கும். அதனால் ஒரு நீதிபதி மட்டும் தான் விசாரணை செய்து முடிவெடுக்க முடியும் என்று தீர்ப்பில் கூறி ரத்து செய்தார்கள்.

### நீதிபதிகளின் தீர்ப்பிலிருந்து,

…." The court noted that the power given to the Registrar was without restriction or a guideline which may lead to corruption and blackmailing by land grabbers resulting in serious injury to bonafide purchasers who would be deprived of their right without a statutory remedy….

….When the power of Civil Court is alternatively given to an executive authority without any guidelines to seek parallel remedy, this Court is unable to imagine the damages that are likely in the process," the court said….

….unlike judges, the District Registrar was not an independent authority but a government servant and as such it was possible that the District Registrar would show favoritism while dealing with disputes where the Government or revenue was making a rival claim…"

இதே வாதம் அப்படியே 100% வக்ஃப் சட்டத்திற்கும் பொருந்தும். இன்னும் அதி முக்கியமாக வக்ஃப் தனி நபர் நிலம் கிடையாது. பொது பயன்பாட்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நிலம். இதன் உரிமையாளர் பிரச்சனையில் Executive தலையீடு அரசுக்கு சாதகமாகவே முடியும். தற்போதைய உள்ள அரசு பழமையான பள்ளிவாசல்களை பார்த்தாலும், முஸ்லிம்களின் சொத்துக்களை குறிவைத்து பறிக்கும் சம்பவங்கள் வடநாட்டில் தொடர்ச்சியாக நடக்கிறது. இனி வக்ஃப் சொத்துக்களையும் சட்ட ரீதியாக கையகப்படுத்த வழிவகை செய்கிறது இந்த சட்டத்திருத்தம்.

### மற்ற பிரச்சனைகள்

கொண்டு வரவிருக்கும் சட்டத்திருத்தத்தில் இருக்கும் மற்ற திருத்தங்கள் பெரும் பாதிப்புகளை உருவாக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், வக்ஃப் வாரியம் மற்றும் வக்ஃப் போர்டு மேலும் அரசுக்கு சாதகமாகவே அனைத்து முடிவுகளையும் எடுக்கும் வகையில் அமைக்கப் பட்டிருக்கிறது.

பெரும்பாலும் வக்ஃப் நிலம் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பது என்பது அரசு மூலமாகவே நடந்திருக்கிறது. டெல்லியின் 70% நிலம் வக்ஃப்க்கு சொந்தமானது. இப்படி பல லட்சம் நிலங்கள் ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற சூழலில் மீதமுள்ள நிலங்களை கைகளில் தற்போது வக்ஃப் கைகளில் இருக்கும் அதிகாரம் முழுவதும் பிடுங்கப்பட்டு இனி செயல்படாத துறையாக மாற்றுவதற்கு இந்த சட்டம் வழிவகை செய்யும்.

**- அபூ சித்திக்**



# பாலஸ்தீன மீட்புப் போரில்....

# இஸ்லாமிய ஊடகங்களின் சாதனைகள்!

**நாம்** நமது வரலாற்றுக் குறிப்புகளில் ஓர் உண்மையைத் தெளிவுபடுத்தி வருகின்றோம். அது இன்று உலக மக்கள் அனைவரும் பாலஸ்தீன மக்களுக்காக ஓர் அணியில் நிற்கின்றார்கள்.

ஏனெனில் பாலஸ்தீனில் காஸா பகுதி, மேற்கு கரை இவற்றில் இஸ்ரேல் நடத்தும், படுகொலைகள் தினம், தினம் உடனுக்குடன் அவர்கள் தெரிந்துகொள்ள முடிந்தது.

இப்படி உலக மக்களை, அவர்கள் தொடர்ந்து அறிவுறுத்தி வந்ததால், மக்கள் இஸ்ரேலின் கோர முகத்தையும், அமெரிக்காவின் உண்மைத் தன்மைகளையும் புரிந்து கொண்டார்கள்.

இதனால், இஸ்ரேலின்மேல் உலக மக்கள் கொண்டிருந்த அனுதாபங்கள் அடியோடு அகன்றது. இஸ்ரேல் இதுவரைக்கும் தன்மீது ஓர் அனுதாபத்தை வளர்த்து வந்தது.

அது, "கோலேகோஸ்ட்" என்ற ஜெர்மனியின் *1939-1944* குறிப்பாக *1944*இல் நடந்த கூட்டுப் படுகொலைகள், இதில் ஜெர்மனியின் ஆட்சி யாளர் ஹிட்லர் யூதர்களை பல்வேறு வகை யாலும், சித்திவதைச் செய்து கொலை செய்தனர். இறந்த யூதர்கள் அறுபதாயிரம் என்றும், ஆறு லட்சம் என்றும் பேசப்பட்டது. ஆனால் யூதர்கள் அதனை ஆறு லட்சம் என்று பெரிதுபடுத்திக் காட்டினார்கள்.

இந்த ஆறு லட்சம் என்பதைப் பொய்ப் பிரச்சாரம் என்று ஈரானில் நடந்த ஒரு மாநாட்டில் நிரூபித்துக் காட்டினார்கள். காரணம் *1944*இல் உலகெங்கும்கூட ஆறுலட்சம் யூதர்கள் வாழ்ந்திடவில்லை. அப்படி இருக்க ஜெர்மனியில் மட்டும் ஆறு லட்சம் யூதர்கள் வாழ்ந்தார்கள் என்பது, எப்படி உண்மையாக இருக்க முடியும் என்பதே கேள்வி?

(அந்த மாநாட்டில் கலந்துகொண்ட யூதர்களாலம் அதை நிரூபிக்க இயலவில்லை)

எது எப்படி இருந்தாலும், ஜெர்மனியில் ஒரு பெரும் கூட்டுப்படுகொலை நடந்தது, அதில் யூதர்கள் கூட்டாக பல்வேறு வழிகளிலும் கொலை செய்யப்பட்டார்கள் என்பது உண்மை!

இதை பெரிதாகப் பிரச்சாரம் செய்துதான் யூதர்கள், குறிப்பாக யூத ஜியோனிஸ்ட்டுகளான யூதத் தீவிரவாதிகள் ஓர் பெரும் அனுதாப அலையை உருவாக்கி வைத்திருந்தார்கள்.

ஜெர்மனியில்கூட ஹிட்லரின் முழக்கம் ஐரோப்பிய யூதர்களைக் கொலை செய்ய வேண்டும் என்பதுதான். ஏதேனும் ஓரிரு யூதர்களைக் கொலை செய்தால் போதும் என்றிருக்கவில்லை. எல்லா யூதர்களையும் கொலை செய்ய வேண்டும் என்பதே ஹிட்ரின் பிரகடனம்.

அந்த யூதர்கள் கொலை செய்யப்பட்ட விதங்கள் மிகவும் கோரமானவை என்றே வரலாற்றில் சித்தரிக்கப்படுகின்றது.

இந்த கோரங்களை ஊதி பெரிதாக்கி னார்கள். ஆனால், இவர்கள் ஏன் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை மறைத்தே வந்தார்கள். ஏன் முற்றாகவே மறைத்து விட்டார்கள்.

அதனினும் இன்னொருபடி மேலேபோய் ஐரோப்பாவில் பல நாடுகளில் சட்டங்கள் இயற்றப்பட்டன. அந்தச் சட்டங்கள் கோலே கோஸ்ட் என்ற கூட்டுப்படுகொலைகள். யாராவது கேள்வி கேட்பதோ, மறுப்பதோ தண்டனைக்குரிய குற்றம் என பறைசாற்றின.

இந்தக் கோலேகோஸ்ட்-டை மறுத்தவர்கள், கேள்விக் கேட்டவர்கள் ஐரோப்பாவில் தண்டிக்கப்பட்ட வரலாறும் உண்டு.

(கோலேகோஸ்ட் பற்றி, ஈரானில் நடந்த மாநாட்டையும் ஐரோப்பாவில் கோலேகோஸ்ட் பற்றிக் கேள்விகளைக் கேட்டவர்களைத் தண்டித் ததையும் நாம் நிறுவி நடத்திவந்த, விடியல் வெள்ளி மாதஇதழில் இடம்பெறச் செய்துள் ளோம். இன்ஷாஅல்லாஹ் விரைவில் அவற்றை வைகறை வெளிச்சம் இதழில் மறுபதிப்புச் செய்வோம்)

இந்த அனுதாபத்தை, அதாவது ஜெர்மனியில் யூதர்கள் கூட்டுப்படுகொலை செய்யப்பட்ட தால் எழுந்த அனுதாபத்தை கொண்டே யூதர் களுக்கு ஓர் தனிநாடு வேண்டும் என்ற கோரிக் கையை வலுப்பெறச் செய்தார்கள்.

ஆனால் அந்த நாட்டை அவர்கள், ஐரோப் பாவிற்குள் கேட்டபோது அது மறுக்கப்பட்டது. அதையும் மக்கள் மன்றத்திலிருந்து மறைத்து விட்டார்கள். ஐரோப்பியர்கள் தங்களுக்குச் செய்த எல்லா அநியாயங்களையும், தங்களுக் கொன ஒரு வதியுமிடத்தை ஐரோப்பாவில் மறுத்ததையும் வரலாற்றிலிருந்து மறைத்தார்கள். ஐரோப்பாவின் உதவிகளைப் பெற்றி. அந்த உதவிகள், யூதத் தீவிரவாதிகள், காலமெல்லாம் செய்த மனித இனத்திற்கெதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் இவற்றை மக்கள் மன்றத் திலிருந்து மறைப்பதும், அந்த இனப்படு கொலைகளுக்கு உதவி செய்வதும் எனத் தொடர்ந்தது. இன்றளவும் தொடருகின்றது.

அத்தோடு நில்லாமல் வந்தேறிகள் அதாவது உலகமெங்குமிருந்து இஸ்ரேல் வந்த யூதர்களை குடியமர்த்த கட்டடங்களாக கட்டிட நிதியைத் தந்துகொண்டே இருக்கின்றன. இது சட்டங்களுக்கு எதிரானது. ஆனால் எந்த சர்வதேச விதிமீறலைத் தங்கு தடையின்றி செய்துகொண்டே இருந்தார்கள்.

இதையெல்லாம் இரும்புக் கரம் கொண்டு தடுத்திட வேண்டிய ஐக்கிய நாடுகள் சில நடைப்பிணமாய் ஆனது.

இந்த அநியாயங்களையும், யூதர்கள் செய்யும் கூட்டப்படுகொலைகளையும் உலகம் அறிந்திட இயலவில்லை.

உலக ஊடகங்கள் முழுமையாக மேலை நாட்டவர்களின் கைகளிலிருந்தன. அன்றைய நாட்களில் Print Media என்ற அச்சு ஊடகங்களே அதிகமாக ஆதிக்கம் செலுத்தின. அவையெல் லாம் இந்த உண்மைகளை உரக்க முழுங்கு வதற்குப் பதிலாக பாலஸ்தீன மக்களை தீவிர வாதிகளாகச் சித்தரிப்பதிலேயே கவனமாக இருந்தன.

இது அவர்கள் முழு மூச்சில் வளர்த்துவந்த இஸ்லாமோபோஃபியாவின் ஒரு பகுதி என்பதை உலகம் அறிந்திருக்கவில்லை. முஸ்லிம்களை இருட்டிலேயே வைத்திருந்தன இந்த ஊடகங்கள்.

அரபு நாடுகள் 1967 போரில், அதாவது இஸ்ரேலுக்கு எதிரான போரில் படுதோல்வி யைக் கண்டபின்பு, அமெரிக்காவின் அடிவருடி களாகவே ஆகிவிட்டன.

அத்தோடு அமெரிக்கா இந்த நாடுகளின் பாதுகாப்பையும், அந்த நாடுகளில் கோலோச்சிக் கொண்டிருந்த மன்னர்களின் பாதுகாப்பையும், தன் கைகளில் வைத்துக்கொண்டது.

அரபுலகத்தின் பாதுகாப்பைக் கையில் வைத்துக்கொள்ள அரபு நாடுகளை, அரபு நாடுகளின் நிலப்பகுதிகளை ஆக்கிரமித்தது. ஈராக்கின் 30% நிலப்பரப்பு அமெரிக்காவின் கைகளில் இருக்கின்றது என்பது 2024ஆம் ஆண்டு செய்தி. இதனால் அரபு நாடுகள் அறவே கையறு நிலைக்கு வந்துவிட்டன.

**அரபு நாடுகள் / முஸ்லிம் நாடுகளின் அவலம்**

அல்லாஹ் அள்ளி வழங்கிய எண்ணெய் வளத்தால் பொருளாதாரத்தில் கொழுத்துக் கிடக்கும் நாடுகள் அரபு நாடுகள்.

ஆனால் அவற்றால் உலக நிகழ்வுகளை, உலக முஸ்லிம்களுக்குத் தந்திடும் ஓர், பத்திரிகையை நடத்திட இயலவில்லை.

தொடக்கக் காலத்தில், உலக நிகழ்வுகளை


vaigarai velicham official

உலகுக்குத் தந்து கொண்டிருந்த பத்திரிகை "Impact International - இம்பேக்ட் இன்டர் நேஷனல்". இது இஸ்லாமியவாதிகளால் நடத்தப்பெற்ற நடுவு நிலையான பத்திரிகை. ஆனால் அதையே ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பிரிட்டனிலிருந்துதான் நடத்த முடிந்தது. இது 1970 மே திங்கள், 15ஆம் தொடங்கியது.

அதுவும் 2006இல் நின்றுபோய்விட்டது. காரணம் இஸ்லாமோஃபோபியா வளர்த்த நாடுகளில் ஒன்றான பிரிட்டன் என்ற ஆங்கில நாடு மாறிப்போனது. அதனால் இஸ்லாத்தை வளர்க்கின்ற பத்திரிகைகளையும் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்கின்ற பத்திரிகையையும் நிறுத்தியாக வேண்டும் என்ற முடிவு ஐரோப்பிய நாடுகளின் முடிவு.

இந்த முடிவை முன்னின்று செயல்படுத்தியது அமெரிக்கா. உண்மையைச் சொன்னால் அமெரிக்காவே இதற்கும் தலைமைத் தாங்கியது.

அடுத்து இந்த "Impact International - இம்பேக்ட் இன்டர்நேஷனல்" இதழ். முஸ்லிம் உலக நிகழ்வுகளை உலக முஸ்லிம்களுக்குக் கொண்டு செல்வதன் மூலம், முஸ்லிம் உலகை ஒன்றிணைத்தது என்பது அதனை நிறுத்திய தற்கான மிக முக்கியமான காரணம். ஏனெனில், முஸ்லிம்கள் ஒன்றிணைவது, முஸ்லிம் உலகை குறிப்பாக அரபு நாடுகளின் எண்ணெய் வளங்களையும், இதர இயற்கை வளங்களையும் சுரண்டி கொழுக்கும் மேலை நாடுகளுக்கு ஒரு பெரும் ஆபத்தாக முடியும்.

அதேபோல் ஓர் இஸ்லாமிய விழிப்புணர்வை, அதன் செய்தி விளக்கக் கட்டுரைகள் மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்குத் தந்து கொண்டிருந்தன. அதேபோல் அது வெளியிடும் ஆய்வுக் கட்டுரைகள், புதிய சிந்தனைகளையும், புதிய இலக்குகளையும் முஸ்லிம் உலகுக்குத் தந்தன.

இன்னும் அதின் புலனாய்வுக் கட்டுரைகள், முஸ்லிம்கள் மேல் போடும் பழிகளை துடைப் பவையாகவும், சகோதர சமுதாயங்களிடையே உண்மையைச் சொல்பவனாக இருந்தன.

முஸ்லிம்கள் எப்பொழுதுமே மனித இனத்தில் எதிரிகளாகவே காட்டிக் கொண்டிருக்க வேண்டும் என விரும்பிய அமெரிக்காவுக்கும் அதன் கைத்தடிகளாகமிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு அறவே பிடிக்கவில்லை.

அவை, முஸ்லிம் உலகில் தாங்கள் இழைக்கும் அநீதிகளை, அடிக்கும் கொள்ளைகளை முஸ்லிம் முஸ்லிம்கள் அறிந்துகொள்வதை விரும்ப வில்லை. இதனால் "Impact International - இம்பேக்ட் இன்டர்நேஷனல்" என்ற பத்திரி கையை முடியேவிட்டார்கள்.

இந்த "Impact International - இம்பேக்ட் இன்டர்நேஷனல்" என்ற பத்திரிகையின் ஆன்மீகப் பகுதி என அறியப்பட்ட First Thing First என்பதை நாம் நீண்ட காலமாக தமிழில் தந்து வந்தோம்.

இந்த ஆக்கங்களின் நாம் நிறுவி நடத்திவந்த விடியல் வெள்ளி மாதஇதழில் "இம்பேக்ட் பக்கம்" என்ற தலைப்பிலேயே தொடராக வந்தது. பின்னர் புத்தகமாகவும் வந்தது. இந்தப் பகுதி வாசகர்கள் மிகவும் அதிகமாக விரும்பி படிக்கும் பதியாக அன்று இருந்தது.

**இல்மான் ருஷ்டி விவகாரம் Vs இம்பேக்ட் இன்டர்நேஷனல் பத்திரிகை விவகாரம்**

பெருமானார் (ஸல்) அவர்களையும் அவர்களின் துணைவியாரையும், தகாத முறையில் வருணித்தான் சல்மான் இஷ்மான் ருஷ்டி என்ற எழுத்தாளன். சாத்தானின் வசனங்கள் என்ற புதினத்தில் இது இந்தத் துதியை மேல நாட்டவர்கள் அள்ளித்தெளித்த சில்லரைகளுக்காகவும், லண்டனில் வாங்கித் தருவோம் என வாக்களித்து, வீடு ஒன்றையும் ....... குறிப்பாக இஸ்லாமிய வெறுப்பாளர்களுக்காக எழுதிய புதினம்.

இந்த உண்மையை உலகறியச் செய்த பெருமை "Impact International - இம்பேக்ட் இன்டர்நேஷனல்" என்ற இந்தப் பத்திரிகையைச் சாரும். அது யாரையெல்லாம் ஓர் அணியில் நிறுத்தியது என்பதை இப்படிக் கூறுகின்றார்கள்.

ஷியாக்கள், சூபிக்கள், சன்னிகள் இவர்கள் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து ஓர் அணியில் இல்மான் ருஷ்டியின் அவதூறுகளுக்கு எதிராக நிறுத்த முடிந்தது. பின்னர் இந்த விவகாரம் உலகெங்கும் பரவியது.

இந்த பத்திரிகை எத்தயைதொரு உள் அடக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதை அப்போதே இப்படிக் கூறினார்கள் கள செய்திகள் ஆய்வாளர்கள் :

Reporting செய்திகளின் பின்னணிகளை விளக்கிச் சொல்லும் கட்டுரைகள், News




Analysis Education கல்வி, சமுதாயம் Society, பொருளாதாரம் Economic, செய்திக் கதம்பங்கள் Briefings, சிறப்புக் கட்டுரைகள் Atciles.

இப்படி பத்திரிகைகளின் உலகின் பார்வையை விரிவுபடுத்தியது. இதன் சாதனை களில் ஒன்றாக அன்றைய மேலைநாட்டு ஊடகங்கள் இப்படிச் சொல்லின...

A Recongnised World Indipendent current of-fairs puplications.

'உலகம் அங்கீகரித்த தனித்துவம் வாய்ந்த நிகழ்கால செய்தி ஊடகம்'

ஆனால், இது 35 ஆண்டுகாலம் மட்டுமே வாழ முடிந்தது. ஏனெனில் 2004-2006 வளர எழுந்த மேலை நாடுகளில் இஸ்லமோ ஃபோபியாவுக்குப் பலியானது.

இந்தப் பத்திரிகையின் பழைய கோப்பும் 'வைகறை வெளிச்சம்' நூலகத்தில் இருக்கின்றது. தொடக்க நாள்முதல் அதன் இறுதிஇதழ் வரை நம்மிடம் உண்டு. அல்ஹம்துலில்லாஹ்.

இன்றைய நிகழ்வுகளைப் பற்றி எழுதிடும் போடு அந்த இதழின் "Impact International - இம்பேக்ட் இன்டர்நேஷனல்"இன் பழைய பதிவுகளையும் பார்த்துக்கொள்கிறோம்.

**இந்தியா**

இப்படி புகழ்பெற்ற இந்தப் பத்திரிகையைத் தொடங்கியவர் இந்தியாவைச் சார்ந்தவர். பெயர் ஹஷிர் ஃபாருக்கி. ஜூலை 4இல் உத்திரப் பிரதேசத்தில் பிறந்தவர். பின்னர் லண்டன் மாநகரில் குடியேறியவர். இவருடைய சகோதரர் அப்துல் அஹத் அவர்களும், அப்துல் வாஹித், ஹமீத் என்பவரும் தந்த முதல் நிதியிலிருந்து இந்தப் பத்திரிகையை தொடங்கப் பெற்று. உலகெங்கும் பிரசித்திப் பெற்றது.

இல்மான் ருஷ்டி எழுதிய சாத்தினின் வசனங்கள் புதினத்தை முதன்முதலில் படித்தவர், நமது ஜாஸ் இஸ்லம் அஹ்மத் அவர்கள்தாம். சென்னையில் ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவராக இருந்தார்கள்.

லண்டன் போயிரந்தபோது அங்குள்ள IFT - என்ற Islamic Foundation Trust இஸ்லாமிய அறக்கட்டளை நிறுவனத்தில் தங்கியிருந்தார்கள். அப்போதுதான் இந்தப் புதினம் வெளியே வந்தது. படித்தார்கள், இம்பேக்ட் பத்திரிகை யின் அலுவலகத்தில் எடுத்துரைத்தார்கள். விவகாரத்தை விவகாரம் உலகை எட்டியது.

அவருடைய பேட்டியை எடுக்க, இந்தியாவி லிருந்து வெளிவந்து கொண்டிருந்த Illustrated Weekly என்ற ஆங்கில வாரஇதழ் முயற்சி செய்தது. லண்டனில் அவர், அங்கிருந்து விமானத்தில் ஏறிவிட்டார் என்ற செய்தியை அறிந்து, அவரை மும்பை விமான நிலையத்தில் வைத்து பேட்டியெடுத்து வெளியிட்டது.

அவர் ஓர் புத்தகப் பிரியர். லண்டன் சென்று வரும்போதெல்லாம், எனக்குச் சில நூல்களைக் கொண்டு வருவார். அதற்காக நான் அவரைக் காண சென்றிருந்தேன். ஜமாஅத்தே இஸ்லாமி சென்னை அலுவலகத்தில், அப்போது அவர்கள் என்னிடம் எல்லா விவகாரத்தையும் சொன்னார்கள்.

இப்போது டெல்லியிலுள்ள ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைமையகத்தில் தன் உழைப்பை தந்து கொண்டிருக்கின்றார். ஜமாஅத்தே இஸ்லாமியின் ஆங்கில இதழாகிய Radiance Views Weekly, இன் ஆசிரியராக இருந்து வருகின்றார். இந்த இதழின் நீணடகால சந்தாதாரர் என்றஅளவில் அவரை வாரந் தோறும் சென்னையில் சந்திக்கின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ்.

**Arabiya Islamic World Review**

அரேபிய இஸ்லாமிக் உலக மீட்பார்வை. இது 1984ஆம் ஆண்டிலிருந்து வெளியே வந்த மாதஇதழ். அமெரிக்காவிலிருந்து வெளியே கொண்டு வந்திட வேண்டிய அவலம். ஏனெனில் அரபு நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

உஸ்மான் என்ற இதழியல் துறை பேராசிரியர்


vaigarai velicham official

நடத்திவந்தார். இவர் அமெரிக்காவின், கேலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில், இதழியல் பேராசிரியராக பணியாற்றியவர். இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தோடு மிகவும் நெருங்கியத் தொடர்புடையவர்.

இந்த இதழ் வடிவமைப்பு உள்ளடக்கம், பயன்படுத்திய ஆங்கிலம் ஆகிய எல்லா வற்றிலும் மேலோங்கி நின்றது. அதாவது அமெரிக் காவின் பிரபல்யமான 'டைம் நியூஸ் வீக்' போன்ற பத்திரிகைகளைவிட மிக உயர்ந்தபடி நின்றது. பொது ஊடகங்கள் இதனுடைய கட்டமைப்பைப் பாராட்டின. இதழில் ஆங்கிலத்தில் சொல்லிட வேண்டும் என்றால் Get-up and Set-up இல் கவர்ச்சியாக அமைந்தது.

உள்ளடகத்தில் "Impact International - இம்பேக்ட் இன்டர்நேஷனல்" இதழின் அனைத்துப் பகுதிகளையும் கொண்டிருந்தது. அத்துடன் Islamic Finance - இஸ்லாமியப் பொருளாதாரம் என்றொரு பகுதியையும் Islamic Defence என்ற இஸ்லாமிய உலகின் ஆயுதங்கள் உலக நாடுகளின் ஆயுத வளர்ச்சி ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருந்தது.

மேலே நாம் குறிப்பிட்ட இரண்டு பகுதி களும், மேலை நாட்டவர்களுக்கும் அமெரிக்கா வுக்கும் எள் மூக்கின் முனை அளவும் பிடிக்க வில்லை.

இந்த இஸ்லாமிய நாடுகளின் பக்கம் Islamic Defence முஸ்லிம் நாடுகள் ஏன் ஆயுத ஆராய்ச்சி களில் பின் தங்கி நிற்கின்றார்கள் என்பதற்கான காரணங்களை ஆராய்ந்திடத் தொடங்கியது. அதில் ஒரு பகுதியாக, பல இஸ்லாமிய அறிஞர் களும், உலகில் பல நாடுகளைப் பற்றிய கூர்மை யான பார்வை உடையவர்களும் கருத்துக்களைச் சொன்னார்.

அரபு நாடுகள் ஆடம்பரங்களுக்கு அடிமைப் பட்டுக் கிடப்பதையும், இந்த ஆடம்பர செலவுகளுக்கும் உல்லாசங்களுக்கு மட்டுமல்ல சில்லபங்களும் ஆட்படுவதையும் - இந்த ஆடம்பரச் செலவுகள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் நிரம்பவே பொரு ளீட்டித் தருவதையும் சுட்டிக் காட்டினார்கள்.

ஆயுதங்களில்கூட அமெரிக்காவின் ஆயுதங்களையே - எந்த முகாந்திரமுமில்லாமல் வாங்கிக் குவிக்கின்றன. அப்படி வாங்கப்படும் ஆயுதங்களில் பலவற்றை எப்படி கையாளுவது என்பதைக்கூட அவர்கள் அறிந்திருக்கத் தேவை யில்லை. அமெரிக்கா அந்த நுணுக்கங்களைக் கற்றுக்கொடுப்பதுமில்லை. ஆயுதங்களை பயன்படுத்தும் தேவை எற்படும்போது நாங்கள் வந்து ஆயுதங்களை இயக்குகின்றோம். அதற்கான தட்சணையை நாங்கள் கேட்கும் அளவுக்குத் தந்து விடுங்கள் என பிடுங்கி வாங்கின.

இப்படி எண்ணற்ற உண்மைகளை வெளிச்சம்போட்டு காட்டியது.

இந்த உண்மைகள் எப்படி அமெரிக்கா வுக்கும் அதன் நிழலின்கீழ் அரபு நாடுகளைக் கொள்ளை அடித்துக் கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கும் ஒன்றுபோலவே பிடிக்கவில்லை.

அதனால் தீராத சதிகளைச் செய்து பத்திரிகையை மூடிவிட்டன. அதுவும் ஒரு 16 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்திட இயலவில்லை.

இந்த பத்திரிகையின் ஆசிரியர் சென்னை வந்திருந்தபோது அவரைச் சந்திருக்கின்றேன்.

இதேபோல் Enquiry, Focus-Interfaith Dialoque என்பன போன்ற பல பத்திரிகைகள் மூடப்பட்டன.

இன்று இந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஏதோ ஓர் மூலையில் அமர்ந்து தங்களால் இயன்றதைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்களின் சிந்தனை அறிவார்ந்த ஆராய்ச்சிகள் இவையெல்லாம் அந்தந்த வட்டாரங்களுக்குள்ளேயே சுழன்று கொண்டி ருக்கின்ற. அதைத் தாண்டி வெளியே வந்திட இயலுவதில்லை.

இந்நிலையில் முஸ்லிம்கள் தங்கள் சமுதாய நிலைகளை அறிந்திட இயலவில்லை. அதேபோல் மேலை நாடுகளின் சதிகளையும் தெரிந்திட இயலவில்லை.

பல இலக்கியங்கள் வெளிவந்தன. அவை அவ்வப்போது தடை செய்யப்பட்டன. உலக முஸ்லிம்களைச் சென்றடைந்திடாமல் தடுக்கப்பட்டன.

ஆண்டாண்டு காலமாக, மேலை நாடுகள் வளர்த்த இஸ்லாமோ ஃபோபியாவையும், முஸ்லிம் உலகம் அதிலுள்ள அறிவாளிகள் ஆகியோரும் அறிந்திருக்கவில்லை.

இந்நிலையில் 1970-1980களில் ஒரு பெரும் மாற்றம் இஸ்லாமிய உலகில் ஏற்பட்டது. அதனை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் காண்போம்.

**- MGM**



# நாளந்தா பல்கலைக்கழகம் தாக்குதல் ?

## இன்னொரு ஆய்வு!

**கிபி** *1193-1197-1200*ம் ஆண்டு. முஹம்மது பின் பக்தியார் கில்ஜி. இவர் இன்றைய பீகார் மாநிலத்தை நோக்கி பாய்கிறார். அன்று இப்பகுதி மகதா பிரதேசம் (Magadha Region) என அழைக்கப்பட்டது. இப்பகுதி சேனா வம்சத்தின் (Sena Dynasty) கீழ் இருந்தது. சேனா அரசை வீழ்த்த பக்தியார் கில்ஜி கிளம்பினார்.

கோரி வம்சத்தின் (Ghurid Dynasty) பரந்து விரிந்த ஆட்சியின் ஒரு பகுதியான இந்திய துணை கண்ட பகுதிக்கு வைஸ்ராய்யாக இருந்தவர் குத்புதீன் ஐபக் (பி.1150 - இ.1210 கிபி). இவரது நம்பிக்கைக்குரியவராக இருந்தவர்களில் ஒருவர் உளவு துறையின் தலைவர் ராணா. இவர் ராஜபுத்திர இனத்தை சேர்ந்தவர்.[1]

மற்றொருவர் கீழ்மட்ட தளபதிகளில் ஒருவரான முஹம்மது பின் பக்தியார் கில்ஜி. இவர் தான் இன்று நாளந்தா பல்கலைக்கழக வரலாற்றில் சர்ச்சைக்குரிய கதாநாயகன். ஆனால் அன்று அவர் அவ்வாறு பேசப்படவில்லை.

பல்கலைக்கழகம் இருந்த பகுதியின் மீது இவரின் இப்பாய்ச்சலுக்கு காரணமாகவும், உறுதுணையாகவும் இருந்தவர்கள் சில புத்த பிட்சுக்கள். இவர்கள் துருக்கிய ஆட்சியாளரிடம் தூது சென்றார்கள்.[3] காரணம், சேனா வம்சம் என்ற பிராமணிய அரசால் அன்று பௌத்த சமூகமும் அதன் பொருளாதாரமும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தது. [2]


பலநூறு ஆண்டுகளாக பாதுகாப்புடன் வாழ்ந்த மகதா (இன்றைய பீகாரின் வடபகுதி, நேபாளத்தின் பீகார் எல்லைப் பகுதி, வங்காளத்தின் வட பகுதி) பகுதியின் பௌத்த சமூகம் அச்சமயத்தில் அசௌகரியத்தை உணர்ந்திருந்த காலம். இவர்களின் இப்பகுதி இப்போது பிராமணிய அரசான சேனா வம்ச ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இவர்களுக்கு முன் பௌத்தர்களான பாலா வம்ச (Pala Dynasty) ஆட்சியாளர்கள் இப்பகுதியை ஆண்டு வந்தனர். இவர்களை வீழ்த்தி ஆட்சியை கைப்பற்றினர் சேனா வம்சத்தினர்கள்.

பல்கலைக்கழகம் அமைந்திருந்த நகரை நெருங்கியது கில்ஜியின் படை. அந்நகரம் சிறிய நகரம் தான். தொலைவில், அளவில் பெரிய கோட்டையின் தோற்றத்தில் கட்டுமானம் ஒன்றை கண்டனர். இவைபோன்ற பெரிய வேறு கட்டுமானங்கள் எதுவும் அங்கு இல்லை. பொதுவாக இத்தகைய பெரிய கட்டுமானங்கள் அரசுக்குரியதாகவே இருக்கும். பெரும் தோற்றத்தில் ஒரு கட்டுமானம் இருக்கவே, இது ராணுவ கோட்டை தான் என முடிவு செய்து, அதை நோக்கி மெதுவாக பதுங்கி பதுங்கி முன்னேறியது சுல்தானின் படை.

இராணுவ யுக்தியை அனைத்து படைகளும் அறிந்தேயிருக்கும். அந்த யுக்தி "குறைந்த இழப்பில் நிறைவான வெற்றி". இதற்காகவும் ராணுவ பயிற்சி தரப்படுகிறது. இதன்படி ராணுவ வீரர்கள் தங்கள் உயிரை அநாவசியமாக இழக்க விரும்பமாட்டார்கள். இது ராணுவ சூத்திரம். இதை கவனத்தில் கொண்டவர்கள்,


vaigarai velicham official

## Bakhtiyar Khilji




திடீரென தாக்குதலை நடத்தி கோட்டையை தங்கள் வசமாக்க முனைந்தனர். இதற்கு அங்கு நிலைக் கொண்டிருந்த ராணுவத்தின் தயார் நிலையை பற்றிய தகவலை அறிந்துக் கொண்டனர். அங்கு சேனா ஆட்சியின் ஒரு படை பிரிவு காவலுக்கு இருப்பதை அறிந்துகொண்ட சுல்தான் படை, சடுதியில் கோட்டைக்குள் சீறி பாய்ந்தது. வெறும் 200 பேர் கொண்ட சுல்தான் படை தனது வெற்றியை வசப்படுத்தியது. இப்போது கோட்டை இவர்கள் வசம்.

கோட்டையானது பிரமாண்டமான நில பரப்பை கொண்டிருந்தது. அநேக கட்டிடங்கள் அதற்குள் இருந்தன. கோட்டையின் வளாகத்தை தங்கள் முழு கட்டுபாட்டுக்குள் கொண்டுவர, 200 பேர் கொண்ட படையானது, குழுகுழுவாக பிரிந்து ஒவ்வொரு பகுதியாக தேடுதல் வேட்டையை தொடங்கியது. அங்கிருந்த பலரும் பிடிக்கப்பட்டு ஒரே இடத்தில் சேர்க்கப் பட்டனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட அனைவரும் மொட்டையடித்து மத சீருடையுடன் இருந் தாலும், வெற்றி பெற்ற படைக்கோ அவர்கள் மாறுவேட ராணுவ வீரர்களாக கண்ணில் பட்டார்கள் போலும். அல்லது அச்சிறிய போரில் இவர்களும் செய்வதறியாமல் பங்கெடுத்திருக்கலாம். இதனால், எடுத்தெடுப் பில் அனைவரும் வாளுக்கு இரையாயினர்.


இதற்கிடையில் ஒவ்வொரு அறையாக தேடுதலில் ஈடுப்பட்ட ஒரு குழு, அங்கு அரசின் கருவூலங்கள் எதனையும் கண்டுபிடிக்கவில்லை. கருவூலங்கள் ஏதும் அங்கில்லை. ஏனெனில் பிராமணர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் வழிபாட்டு தலங்களில் செல்வங்கள் குவிந்து இருப்பதை போன்று பௌத்த சின்னங்களில் செல்வங்கள் இருக்காது. பௌத்த கல்வி நிலை யங்கள் செல்வங்கள் குவிந்திருக்கும் இடங்களாக விளங்கின என குறிக்கும் எந்தவொரு குறிப்பு களையும் யுவான் சுவாங் போன்ற சீன பயணிகள் விவரிக்கவில்லை.

மாறாக, புத்தகங்கள் மலையளவு நிரம்பி இருந்ததையும், உணவு தானிய குவியலையும் மற்றும் கல்வி தொடர்பான அமைப்புகளையும் காண்கிறார்கள். சஞ்சலமடைந்தவர்களாக தாங்கள் கண்ணுற்றதை படைதளபதியிடம் எடுத்து சொன்னார்கள்.

அதுவரை இராணுவ மிடுக்கில் இருந்தவர் களின் மனநிலை லேசாக தடுமாறியது. நாம் இராணுவகோட்டையைதான்கைபற்றினோமா? அல்லது கல்வி கூடத்தை கைபற்றினோமா? என்ற குழப்பம் மனதின் ஓரத்தில் ஊஞ்ச லாடவே, சந்தேகத்தை சரிசெய்து கொள்ள முடிவு செய்தனர். அங்கிருந்த இலக்கியங்களின் மொழி அறியாத இவர்கள், ஒருவரை அழைத்து அங்கிருந்த சில புத்தகங்களை வாசிக்க செய்து அதில் இருந்த செய்தியை சொல்ல வேண்டினர். உதவ வந்தவரும் வாசித்தார். விளக்கினார். திகைத்து அதிர்ந்து நின்றது சுல்தானின் படை. தாங்கள் பெரிய தவறு இழைத்து விட்டதை உணர்ந்தனர்.[4,5] இராணுவ கோட்டைக்கு பதில் கல்வி நிலையத்தை தாக்குவதால் எந்த ஒரு பயனுமில்லையே...?

அறியாமல் நடந்துவிட்ட இத்தவறுக்கான காரணத்தை மனதோரத்தில் ஆய்வு செய்தனர். இந்நகரை நெருங்கும் போது இவ்வளாகத்தை ராணுவ கோட்டையாக புரிந்து கொண்டது எப்படி?. காரணம், இவ்வளாகத்தின் பிரமாண்ட மான சுவர் அமைப்பு.

எவ்வாறாயினும், ராணுவ நிலைகள் இவ்வளாகத்தில் உள்ளதா? இல்லையா? என அறிந்து ராணுவம் இருப்பதை உறுதி செய்த



பிறகு தானே நாம் தாக்கினோம் என நிம்மதி பெருமூச்சு விட்டு குற்ற மனநிலையிலிருந்து விடுபட நினைத்தாலும், கல்வி கூடத்தில் யாராவது ராணுவ படைகளை நிறுத்துவார்களா? என ஆச்சரியப்பட்டு குழம்பி நின்றனர்.

கடந்த பல நூற்றாண்டுகளாக உலகின் எப்பகுதியும் இவ்வாறான ராணுவ நடமாட்டத்தை தங்கள் கல்வி கூட கலாச்சாரத்தில் புகுத்தியிராத நிலையில், இந்த சேனா அரசு திடீரென ராணுவத்தை நிறுத்தி புதிய நடைமுறையை உருவாக்கியது ஏன்? எதிரிகளின் கவனம் பல்கலைக்கழகத்தை நோக்கி திரும்ப வேண்டும் என அறிந்தே செய்துள்ளனரா?.

இன்றைய நாளந்தா, பாட்னா போன்ற மாவட்டங்கள் உள்ளடங்கிய செழிப்பான கங்கை சமவெளி பகுதி மகதா பிரதேசமாகும். இங்கு பல நூற்றாண்டுகளாக அரசு ஆதரவில், பௌத்தர்கள் அடர்த்தியாக வாழ்ந்தனர். அவர்களது வாழ்வு வளம் பெற்றிருந்தது. இன்றைய அரசு சாரா அமைப்புகள் போன்று பல சமூக பங்களிப்புகளை செய்து வந்தனர். அனைவருக்கும் கல்வி என்ற முற்போக்கு சிந்தனையால் - எதிர் தரப்பின் பொறாமையை பொருட்படுத்தாமல் - பல சிறிய பெரிய கல்வி நிலையங்களை பல்லாயிரக்கணக்கில் நடத்தி வந்தனர். இந்நிலையில் தங்கள் ஆதரவு ஆட்சியான பாலா வம்ச ஆட்சியை சேனா வம்ச ஆட்சியிடம் இழந்தனர் பௌத்தர்கள்.

இப்புதிய ஆட்சி இப்பல்கலைக்கழகத்தை ராணுவ முகாமாக மாற்றுவதற்கு காரணம், மீண்டும் பௌத்தர்கள் ஆட்சியில் அமரக் கூடாது என்பதற்காகவா?

மற்றவர்கள் தங்களை வீழ்த்திடக் கூடாது என ஒவ்வொரு வம்ச ஆட்சியும் எண்ணுவது இயல்பு. ஆனால், ஒரு கல்வி நிலையம் சீறும் சிறப்புமாக நடந்துக் கொண்டிருக்கும் வேளையில் எதிரிகளின் கவனத்தை ஈர்க்கும் என அறிந்தே இக்கல்வி வளாகத்தில் இராணுவத்தை நிறுத்தியதேன்?

"நீங்கள் என்ன.... ஆண்ட பரம்பரையா?" என்ற தோரணையை அடிமனதில் வைத்துக் கொண்டு, பாதுகாப்பு என்ற வெளிக்காரணத்தை காட்டி தன் பிடியை இறுக்குவதற்கு சுருக்கு கயிறாக தன் படை பிரிவை நிறுத்தியதா சேனா அரசு?

இவ்வாறு ராணுவ முகாமை அனுமதிக்கும் போது, மாணவர்களுக்கும், நிர்வாகத்திற்கும், வருகை புரியும் புரவலர்களுக்கும், தினசரி தேவைகளுக்காக உதவிட வருபவர்களுக்கும் பல இன்னல்கள், தொந்தரவுகள் ஏற்படும்.

விசாரணைகளும், சோதனைகளும் நடத்தாமல் எவரும் எளிதில் பல்கலைக்கழகத்திற்கு வருகை தரமுடியாது.

வளாகத்திற்கு வெளியே இருந்து கவனிப்பவர்கள் இந்த கண்காணிப்பை, "பாதுகாப்பு நடவடிக்கை தானே. இது நல்லதொரு ஏற்பாடு" என யோசிக்கலாம். ஆனால், நிதர்சனத்தில் உள்ளே இருப்பவர்களை அச்சுறுத்துவதாகவே இது அமையும். ராணுவத்தினரின் சீருடையே மக்களை அச்சுறுத்தும் நிலையில், மேற்சொன்ன பல நடவடிக்கைகள் மக்களை பல்கலைக் கழகத்தை விட்டே தூரப்படுத்தும். இதனால் கல்வி படுத்துவிடும். இதற்கு தான் ராணுவப்பிரிவு இவ்வளாகத்தில் நிறுத்தப்பட்டதா? என பலவாறாக நமக்கு படிப்பினையை தருகிறது.

எவ்வாறாயினும், கல்வி கூடத்தின் வளாக அமைப்பு, இவ்வளாகத்திற்குள் நிலை கொண்டிருந்த ராணுவ முகாம் என இவ்விரண்டு காரணங்களும் இப்பல்கலைக்கழகத்தை சேனா ஆட்சியின் ராணுவ கோட்டை என புரிய வைத்துள்ளது. இதுவே சுல்தான் படையின் கவனத்தை ஈர்த்து விட்டதை மேலே சொல்லப் பட்ட வரலாற்றிலிருந்து அறியலாம். மேலும் கல்வி நிலையத்தை அழிக்கவேண்டும் என்ற நோக்கில் இத்தாக்குதல் நடைபெறவில்லை என்பதையும் நம்மால் அறியமுடிகிறது.



vaigarai velicham official

இராணுவ பயிற்சிக்கே உரிய விரைப்பான முடிவுகள் இம்மாதிரியான துயரமான தவறு களுக்கு இட்டு சென்று விடுகிறது. இத்தாக்கு தலின்போது மக்கள் நலனை கருத்தில் கொள்ளும் சிவில் நிர்வாகத்திற்கு பொறுப்பான சுல்தான் இப்படையை நடத்தி வந்திருந்தால், பேச்சுவார்த்தை, ஒப்பந்தம், மன்னிப்பு என சுமூகமான முடிவுக்கு வாய்ப்பு இருந்திருக்கும்.

ஆச்சர்யப்படுவீர்கள். இப்படியான உதாரணம் வரலாற்றில் உண்டு. கிபி 1453ல் துருக்கிய சுல்தான் முஹம்மது-II பைசாந்தி யத்திப் பேரரசின் கான்ஸ்டாண்டின்நோபிளை (இன்றைய இஸ்தான்புல்) வெற்றிக் கொண்டார். போரின் முடிவில் சுல்தானின் பெருந்தன்மை யால் எதிரி ராணுவ வீரர்கள் உட்பட பலருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டு விரைவான சுமூகமான நிர்வாகத்திற்கு கான்ஸ்டாண்டின்நோபிள் நகரம் திரும்பியது.[5A] இப்படியொரு நிர்வாக தலைமை இந்த துக்கமான சம்பவத்தின் போது இல்லை.

இங்கு ராணுவ முகாம் நிலைக் கொண்ட தால், பல்கலைக்கழகத்திற்குள் இருந்த அனை வரையும் எதிரிகளாக அல்லது பதுங்கும் ராணுவத்தினராக கணித்துள்ளது கில்ஜியின் சிறிய படை.

இதுதான் நாளந்தா பல்கலைக்கழகம் அழிக்கப்பட்ட வரலாறா? என நீங்கள் அவசரப் பட்டால், அது தவறு. ஏனெனில் கண்ணை மூடிக்கொண்டு குற்றச்சாட்டப்படும் பக்தியார் கில்ஜியோ அல்லது அவரது படையோ நாளந்தா என்றொரு பகுதிக்கு வரவே இல்லை. வராத படை, அங்கிருந்த பல்கலைக்கழகத்தை எவ்வாறு அழித்திருக்க முடியும்? அதுவும் எரித்து அழித்திருக்க முடியும்? [6,7]

உண்மையில், நாளந்தா பல்கலைக்கழகம் இழுத்து மூடப்பட்ட நேரமும், பக்தியார் கில்ஜியின் தாக்குதல் நேரமும் சமகாலம் அல்ல. [8]

பக்தியார் கில்ஜி கிபி 1205/1206ல் இறந்து விடுகிறார். இதற்கு பின்னும் நாளந்தா பல்கலைக் கழகம் கிபி 14ம் நூற்றாண்டு இறுதிவரை செயல்பட்டு வந்தது. அப்பகுதியின் சிற்றரசர்கள் சிலர் நாளந்தாவை நடத்தி வந்தனர். சளராஜா (chalaraja) போன்ற சிற்றரசர்கள் முக்கிய பங்காற்றினர். [9,10]

நாளந்தா பல்கலைக்கழகம் தொடர்ந்து செயல்பட்டதிற்கான ஆதாரங்கள் பல உள்ளன. பக்தியார் கில்ஜியின் (பி.1150-இ.1206 கிபி) மரணத்திற்கு பிறகும் நாளந்தா பல்கலைக்கழகம் சுமார் 200 வருடங்களாக செயல்பட்டு வந்த வரலாறு, "முஸ்லிம்கள் ஒர் அழிவு சக்தி" என கோர்க்க விரும்புவர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம்.

தியானபத்ரா (Dhyanabhadra, 1289-1363 AD) என்ற புத்த பிட்சு நாளந்தா பல்கலைக்கழகத்தில் பௌத்த மத கல்வியை கற்றார். கல்வியை கற்ற இந்த மாணவரின் சாட்சி நிச்சயமாக உள்நோக்கம் கொண்ட சிலருக்கு அசௌகரிய மாக இருக்கும். ஆனால் பக்தியார் கில்ஜியின் காலத்திற்கு பின்பும் இப்பல்கலைக்கழகம் நிலைத்திருந்தது என்ற உண்மைக்கு இந்த பிட்சு சாட்சியாவார். [11]

இவருடைய காலத்தையும், பக்தியார் கில்ஜியின் காலத்தையும் ஒப்பிட்டு பாருங்கள். பக்தியார் காலத்திற்கு பிறகு 80 வருடம் கழித்து பிறந்த இப்புத்த பிட்சு நாளந்தா பல்கலைக்கழகத்தில் படித்திருப்பதை அறியலாம்.

பக்தியார் கில்ஜியின் தீ வைப்பால், நாளந்தா பல்கலைக்கழகம் தொடர்ந்து மூன்று மாதம் / ஆறு மாதம் எரிந்ததால் தரைமட்டமானது என அவரவர் நோக்கத்திற்கு ஏற்ப பலரும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்கள். அச்சடிக் கப்பட்டதாலேயே புத்தகங்கள் ஆதார தன்மையை அடைந்துவிடுகிறது என நம்பும் பொதுமக்களின் பொது புத்தியில், இவ்வகை பொய் மூட்டைகளும் சிந்தனையில் அமர்ந்து பொதுமக்களது உளவியலை ஆட்டிப்படைக் கிறது.

எரிந்துபோன - அதுவும் 6 மாதம் தொடர்ந்து எரிந்து சாம்பலானதாம் - கட்டிடத்தில் கல்வி பணி தொடர்ந்தது எப்படி, என்ற அறிவுபூர்வ மான கேள்விக்கு வரலாற்றில் பதிலே இல்லை. "வரலாற்று திரிபு" என்பதே ஒரே பதில். உங்கள் பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளும். இதை சிலரது





மனம் ஏற்குமா? மனம் தான் மனிதனுக்கு மனிதன் வித்தியாசப்படுமே.

சரி. நாளந்தா பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் கிபி 1916 முதல் சில கட்டங்களாக நடத்தப்பட்டு வந்த பல கட்ட அகழ்வாராய்ச்சியில், சாம்பல் படிவங்கள் கிடைத்துள்ளதே என நியாயமான கேள்வி எழும். [12]

இந்த தொல்லியல் ஆராய்ச்சியில், இப்பல்கலைக்கழகம் அழிந்து போனதற்கு பல காரணங்கள் கூறப்பட்டுள்ளது. பல்வேறு காலகட்டத்தில் நடந்தபோர் பாதிப்பு, இயற்கை சீற்றங்களில் முக்கியமாக பூகம்ப பாதிப்பு பகுதியில் இது அமைந்திருப்பது, அருகே வசிப்பவர்களால் தங்கள் தேவைக்காக எடுத்து செல்லப்பட்ட செங்கல் மற்றும் மர சாமான்கள் உட்பட என வரிசையாக கூறப்பட்டுள்ளது. [13] எனினும் கிபி 1400 முதல் 1900 வரையான இயற்கை சீற்றங்களின் பாதிப்பை பட்டியலிடவில்லை.

இவ்வாறு அழிந்து போனதற்கு சொல்லப்படும் காரணங்களில் மற்றொன்று "எரிக்கப்பட்டது" என்பதாகும்.

யார் எரித்தார்கள்? இப்பல்கலைக்கழகத்தின் பெருமைக்கு உரிமை கொண்டாடும் பௌத்த இலக்கியம் குறிப்பாக திபெத்திய நூல், "இரு பிராமண பிச்சைக்காரர்கள் எரித்ததையும்", இதற்காக செய்யப்பட்ட முஸ்தீபுகளையும் விலாவாரியாக பதிவு செய்துள்ளது. இக்கோர சம்பவத்தால் அங்கிருந்த மூன்று நூலகங்கள் பாதிப்படைந்ததையும், அதில் ஒன்று ஒன்பது தளங்கள் கொண்டது என்ற தகவலும் இடம் பெற்றுள்ளது.[14-17] இதை திபெத்திய பிரபலமான பிட்சு தாரணாதா (பி.1575 - இ1634 கிபி) தனது இந்திய பௌத்த வரலாறு என்ற கிபி 1608-ல் எழுதிய நூலில் இடம்பெற செய்துள்ளார். பாவம் ஒருவர் செய்திருக்க அதற்கான பழியை மற்றொருவர் மீது சுமத்துவதா......

இவர் தனது நூலில் பொதுவாக அக்காலத்தில் பிராமணர்களை குறிக்க பயன்படும் 'திர்திகா' (Tirthika) என்ற பதத்தை பயன்படுத்தி யுள்ளார். ஆனால் பிராமண 'ஜாதி' பிரிவை இது குறிக்காது. மாறாக, பௌத்தத்தை அழிக்க துடிக்கும் கடும்போக்காளர்களான (fanatics) பிராமணர்களையே இது குறிக்கும். அச்சமயத்தில் கற்றறிந்தவர்களான பிராமணர்களே பௌத்தத்தை எதிர்த்து விவாத மேடைகளை நடத்தி வந்தார்கள்.

நாளந்தாவின் இத்துயர வரலாற்று முடிவை தான் இன்றும் உலகளாவிய பௌத்தர்கள் உறுதியாக நம்புகின்றனர். தங்கள் மத பிட்சுகளின் வரலாற்று பதிவை நிராகரிக்க பௌத்தர்கள் தயாரில்லை.

ஆனால் பௌத்த வரலாற்றை அறிய விரும்பும் பிற இன மத மக்களோ, வரலாற்றை அறிய எண்ணுகையில் பௌத்த மத நூலை அண்டுவதில்லை. இதற்காக பொது தலைப்பிலான வரலாற்று புத்தகங்களை பயன்படுத்துவதால், அதில் அனைத்திலும் நிரம்பி வழியும் முஸ்லிம் திரிபு வரலாறு இவர்களின் சிந்தனையை விஷமாக்குகிறது.

அண்மைகால இந்திய அரசியலில் அரசியலாக்கப்பட்ட வரலாற்று செய்தியில் நாளந்தா

பல்கலைக்கழகம் முக்கிய இடத்தை பெற்றுள்ளது. ஆனால், இன்று நாளந்தா பல்கலைக்கழகத்தை தற்போதைய இந்திய பல்கலைக் கழகங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக பார்க்கப்படுவதில்லை. ஏனெனில் அது போட்டி மதமென்று அழிக்கப் பட்ட பௌத்தத்தின் செழுமையை காட்டும் அடையாளம். குயுக்தியாக, அன்று அழிக்கப் பட்ட பௌத்தத்தை போன்று இன்று காணாமல் ஆக்கப்பட வேண்டியவர்கள் என பரப்பப்படும் இந்திய முஸ்லிம்களை குறி பார்த்து நாளந்தா வரலாறு திருப்பப்பட்டுள்ளது.

அப்படியென்றால் தொடக்கத்தில் விவரிக் கப்பட்ட சம்பவம் நாளந்தாவுடன் தொடர்பு இல்லையென்றால் பிறகு இது எங்கே நடந்தது? என உங்கள் உள்ளம் பரபரப்பாகி விடையை தேடும்.

**- ஜாஹிர் உசேன்**

# நாளந்தாவா?
# ஒடன்தபூரி பல்கலைக்கழகமா?

**இந்தியாவிலும்** பௌத்த நாடுகளிலும் கவனத்தை ஈர்த்த நாளந்தா திரிபு சம்பவம் ஒடன்டபுரி (Odantapuri) பல்கலைக்கழகத் தினுடைய வரலாறாக இருக்கலாம் என பலரும் தங்களது கருத்தை பதிவு செய்துள்ளனர். இந்த ஒடன்தபுரி பகுதி இன்று இந்தியாவின் பீகார் மாநிலத்தின் நாளந்தா மாவட்டத்தின் பீஹார் ஷெரீப் என்ற தாலுக்காவில் உள்ளது. இந்த பீஹார் ஷெரீபே பௌத்த இலக்கியத்தில் ஒடன்தபுரி என அழைக்கப்பட்டதாக கருதப் படுகிறது.

நாளந்தாவில் இருந்ததை போன்ற பெரிய பல்கலைக்கழகம் ஒன்று இங்கும் இருந்ததாக பௌத்த இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

மின்ஹாஜ் -இ -சிராஜ் (பி.1193 - 1265/1266) என்பவரால் எழுதப்பட்ட தபகத் இ நாசிரி (Tabakat-i-Nasiri) என்ற நூலில் மட்டுமே விவரிக் கப்படும் இத்தாக்குதல் சம்பவம் ஒடன்தபுரி பல்கலைக்கழகத்தினுடையது என வரலாற்று ஆய்வாளர்கள் யூகித்துள்ளனர். இச்சம்பவத்தை விவரிக்கும் இந்நூல், இச்சம்பவம் நடந்து சுமார் 50 வருடங்களுக்கு பின் தோராயமாக கிபி 1260-ல் எழுதப்பட்டதாகும். இவர் இச்சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சியில்லை. இவர் கிபி 1220க்கு பின் இந்தியாவிற்கு வருகிறார். இவர் டெல்லி சுல்தானால் நியமிக்கப்பட்ட அரசவை வரலாற்றாசிரியர். இவர் தனது நூலில்,

“அவர் (பக்தியார் கில்ஜி) பீகாரின் கோட்டை நகரை (Hisar-i-Bihar) தாக்கும் வரையிலும் பல பகுதிகள் மீது தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தார். அவர் 200 குதிரை வீரர் களோடு பீஹார் கோட்டையின் வாசல் வரை பாதுகாப்பு கவசங்களோடு வந்ததாகவும், திடீரென அவ்விடத்தைத் தாக்கியதாகவும் நம்பிக்கைக்குரிய நபர்கள் கூறுகின்றனர். அவர்கள் ஃபர்கானா (farghanah) பகுதியை சேர்ந்த இரு சகோதரர்கள். பக்தியார் படையில் பணியாற்றியவர்கள். ஒருவர் நிஜாமுதீன், மற்றொருவர் சம்சுதீன். இப்புத்தகத்தின் ஆசிரியர் (மின்ஹாஜ்) ஹிஜ்ரி 641ல் இவ்விரு வரையும் சந்தித்தார். அவர்களிடமிருந்து இத்தகவல் கிடைக்கப் பெற்றது. இவ்விரு சகோதரர்கள் அப்புனிதப்போரில் வீரர்களாக பணியில் இருந்தனர். அந்த போரில் அவர்கள் கோட்டையின் வாசலை அடைந்து தாக்கு தலைத் துவங்கியபோது, முஹம்மது-இ பக்தியார் அஞ்சாநெஞ்சுடன் அவ்வாயில் வழியாக உட்புகுந்து தாக்கினார். அவர்கள் கோட்டையை கைப்பற்றி பெரும் கொள்ளைப் பொருட்களை கைப்பற்றினர். அங்கிருந்தவர் களில் பெரும்பாலோர் பிராமணர்கள். பிராம ணர்கள் அனைவரும் மொட்டையிட்டிருந்தனர். மேலும் பிராமணர்கள் அனைவரும் கொல்லப் பட்டனர். அங்கே நிறைய புத்தகங்கள் இருந்தன. அவையனைத்தும் முஸ்லிம்களின் கவனத்திற்கு வந்தபோது, அந்த புத்தகங்கள்

**எதை குறித்தது என்பது குறித்துத் தகவல் அறிய ஹிந்துகள் (இந்திய துணைகண்ட பகுதியை சேர்ந்தவர்களை "ஹிந்த்-தை சேர்ந் தவர்கள்" என குறிக்க "ஹிந்துகள்" என்ற பதத்தை சிந்து நதிக்கு அப்பால் உள்ளவர்கள் பயன்படுத்திவந்தனர்) வரவழைக்கப்பட்டனர். ஆனால் இந்துக்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். அப்புத்தகங்களை பற்றி அறிவிக்கப்பட்டபின், அந்த கோட்டை மற்றும் அந்நகரமானது ஒரு கல்லூரி என்றும், அக்கல்லூரியை பிஹார் என்றும் அறிந்து கொண்டனர்."** [18]

*மேற்கண்ட செய்தியில் ஊரின் பெயர், பல்கலைக்க்கழகத்தின் பெயர் என எதுவும் இல்லை. கட்டிடம் சேதப்படுத்தப்பட்டதாக எந்தவொரு செய்தியும் இல்லை. மேலும் எரிக்கப்பட்டதாக தகவலும் இல்லை. மொட்டையாக தகவல்கள் இடம்பெற்றுள்ளன. பிற்காலத்தில் இது பல்வேறு இயற்கை சீற்றங்கள் மற்றும் அங்கிருந்த பாமர மக்களின் பயன்பாடுகளால் தரைமட்டமாகி இருக்கலாம்.*

*இத்தாக்குதலின்போது பௌத்த பல்கலைக் கழகமான நாளாந்தாவில் இருந்தவர்கள் "பௌத்த பிட்சுகள்."*

*இச்சம்பவத்தை எழுதியவர் தன் நூலில் இப்பௌத்தர்களை "பிராமணர்கள்" என தவறாக புரிந்துக் கொண்டு சித்தரித்துள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. இப்பகுதியின் கலை, கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை அறியாததால் இவர் எழுத்தில் குழப்பம் ஏற்படுகிறது. அல்லது அப்போதே பல பகுதிகளில் பௌத்தம் அழிக்கப்பட்டுவிட்டதால், இவருக்கு பௌத்தம் பற்றிய ஞானம் ஏற்பட வாய்ப்பில்லாமல் போயிருக்கலாம். மேலும் இச்சம்பவத்தின் போது கல்லூரியில் கையகப்படுத்தப்பட்ட பொருளை பற்றி குறிப்பிடும் போது "கொள்ளை பொருள்" என்கிறார். ஆனால், பௌத்த துறவிகளின் கல்லூரியில் செல்வங்கள் குவிந்து இருக்க வாய்ப்பில்லை. அநேகமாக ஆயுதக் குவியலை குறிப்பிடுகிறார் போலும்.*

*ஒடன்தபுரி சம்பவம் நடந்த சமகாலத்தில் எழுதப்பட்ட தாஜ்-வுல்-மசிர்* (Taj-ul-Ma'sir) *என்ற நூலில் இச்சம்பவம் இடம்பெறவில்லை.* [19] *இதை எழுதியவர் ஹசன் நிஜாமி நிஷாபுரி* (Hasan Nizami Nishapuri). *இவரும் டெல்லி சுல்தானால் நியமிக்கப்பட்ட அரசவை வரலாற்றாசிரியர்.*

*பொதுவாக கடந்தகால வரலாற்றை அறிய அக்காலத்தில் எழுதப்பட்ட ஆவணங்கள் முக்கியமானவை. இதில் அந்தந்த புவி சார்ந்த மொழியின் ஆவணங்கள் முக்கியமானவை.*

*இச்சம்பவத்தை பற்றிய செய்திகள் மின்ஹாஜ் எழுதிய ஒரே ஒரு ஆவணத்தில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. பல நூற்றாண்டுகளாக கல்வி சேவை செய்து பல்லாயிரம் மாணவர்களுக்கு எழுத்தறிவை கற்றுக்கொடுத்த பிரபலமான உயர்கல்வி கூடங்கள் பல இயங்கி வந்த வடஇந்திய பகுதியில் ஒடன்தபுரி சம்பவத்தை பற்றி கூறும் முஸ்லிம் அல்லாதவர்களால் அந்நேரத்தில் எழுதப்பட்ட பதிவுகள் ஏதும் கிடைக்கவில்லை என்பது ஆச்சர்யமாக உள்ளது. மிகவும் பிற்காலத்தில் எழுதப்பட்ட சில வெளி நாட்டு பௌத்த இலக்கியங்கள் இச்சம்பவத்தை பற்றி கோடிட்டு காட்டுவதோடு முடித்துக் கொள்கின்றன.*

*வட இந்திய துணைகண்டத்தின் மத்திய கால (சுமார் கிபி 1100-1500) வரலாற்றை விவரிப் பதில் முஸ்லிம்களின் பாரசீக மற்றும் அரபு ஆவணங்கள் மட்டுமே பெரும் பங்கு வகிக்கின்றன.* [20]

*முஸ்லிம்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் நமக்கு நமது நாட்டின் வரலாறு கிடைத்துள்ளது. பௌத்த சமஸ்கிருத இலக்கியங்களோ வெகுசிலவே உள்ளன. பெரும் பண்டிதர்களாக இன்று நாம் கணிக்கும் பிராமணர்களின் பங்களிப்பு அன்று இல்லை.* [21] *பிராமண சமஸ்கிருத இலக்கியமோ மத்திய கால இந்திய ஆட்சியின் வரலாற்றை சரிவர பேசுவதில்லை.*

*சனாதனிகள் தங்கள் குருகுல கல்வி மூலம் எழுத்தறிவை பெற்றிருந்தும், கோயில்களால் வளமும் பாதுகாப்பும் பெற்றிருந்தும், இச்சம்பவத்தை பற்றிய தகவல்களை இவர்களில் சிலர் கூட பதிவு செய்யவில்லை.*

*பொதுவாக, காலங்காலமாக எந்த போரிலும் பெரிதாக பாதிக்கப்படாமல் பத்திரமாக பாதுகாத்துக் கொண்ட அக்ரஹாரங்களும் அநேக சமஸ்கிருத குருகுலங்கள் பலப்பல இருந்தும், ஆவண பஞ்சத்திற்கு காரணம் அன்று கல்வி தன் முக்கியத்துவத்தை இழந்திருந்ததை*


vaigarai velicham official

யேகாட்டுகிறது. மாய மந்திரங்களும் புரோகித லாபமும் கல்வியின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்திருக்கலாம். இருந்த கொஞ்ச நஞ்ச ஆவணங்களும் பல வழிகளில் அழிந்திருக்கலாம். இந்த ஆவண பஞ்சத்திற்கான காரணத்தை ஒரு வரலாற்று உதாரணத்தின் மூலம் அறிய முயல்வோம்.

நாமெல்லாம் தமிழ்நாட்டை சேர்ந்த தமிழ்த் தாத்தா உ.வே.சா பற்றி அறிந்துள்ளோம்.

உ.வே.சாமிநாதர் அய்யர் (கிபி 1855-1942) என்பது அவரது பெயர். இவரது வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தில்,

" ஐயா..... ஐயா....

வெளியில் யாரோ அழைக்கும் குரல் கேட்டு வீட்டுக்குள் இருந்த முதியவர் வாசலுக்கு வந்தார். யாரோ உதவி கேட்டுத்தான் வந்திருப் பார் என்று நினைத்து வந்தவருக்கு வியப்பு. வாசலில் நின்றவரைப் பார்த்தால், அவர் பெரிய மனிதராகவும் நல்ல படிப்பாளியாகவும் தெரிந்தார். அவர் முகத்தில் அப்படியொரு தெளிவு இருந்தது.

என்ன வேண்டும்? என்று வீட்டுக்காரர் கேட்டார். "தங்கள் வீட்டில் பழைய ஓலைச் சுவடிகள் நிறைய இருப்பதாகக் கேள்விப்பட்டு வந்தேன். அவற்றில் தமிழ்மொழியின் சிறந்த இலக்கியங்கள் இருக்கலாம். ஓலைச்சுவடியில் உள்ளன வற்றை எல்லாம் எழுதி புத்தகமாக அச்சிட்டு வருகிறேன். உங்கள் வீட்டில் உள்ள சுவடிகளைக் கொடுத்தால், அவற்றைப் பார்த்து எழுதிவிட்டு திருப்பித் தந்து விடுவேன். இந்த உதவியை மறுக்காமல் தாங்கள் செய்தல் வேண்டும்" என்று வந்த பெரியவர் கூறினார்.

இதனை கேட்ட வீட்டுக்காரருக்கு சினம் வந்துவிட்டது.

" நாளை ஆடிப்பெருக்கு. விடியற்காலையில் ஆற்றில் விடுவதற்காக வீட்டில் கொஞ்சம் ஓலைச்சுவடிகள் வைத்திருக்கிறேன். அது பொறுக்கவில்லையா உமக்கு?" என்று கத்தினார்.

"ஓலைச்சுவடிகளைப் படிக்கவேண்டுமே தவிர அவற்றை ஏன் ஆற்றில் விடவேண்டும்.... ?" என்று வந்தவர் கேட்டார். வீட்டுக்காரர் மேலும் சினம் கொண்டார். "அஃது உமக்கு தேவையில் லாதது. ஆடிப்பெருக்கு நாளில் சுவடிகளை



உ.வே.சாமிநாதர் அய்யர்

ஆற்றில் விட்டால் புண்ணியம் என்பது சாத்திரம். அவற்றை எல்லாம் கொடுக்கக்கூடாது" எனக் கூறி வந்தவரை விரட்டினார்.

பெரியவர் வீட்டுகாரரிடம் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும், அவர் ஓலைச்சுவடிகளைத் தர ஒத்துக்கொள்ளவில்லை. வந்தவரோ அதற்காக மனம் தளரவில்லை.........' [21-A]

இப்படியாக பெரியவர் உ.வே.சா. அவர்களின் ஆவணப்படுத்தும் அனுபவ சம்பவம் தொடர் கிறது. சிறிது சிந்தித்து பார்ப்போம். இவ்வாறு பலப்பல நூற்றாண்டுகளாக இந்திய துணைக் கண்டத்தில் மூலை முடுக்குகளில் இருந்த பல்லாயிரம் அரிய பொக்கிஷங்கள் புண்ணியத் திற்காக காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றன. இதனாலேயே பல இந்திய மொழி ஆவணங்கள் கிடைப்பது அரிதாக உள்ளது போலும். கல்விக்கு எதிரான எந்த வடிவமும் முஸ்லிம்களுக்குரியது அல்ல.

**- ஜாஹிர் உசேன்**

# வரலாற்றை முஸ்லிம்களுக்கு எதிராக திருப்புவது எப்படி..?



**நாளந்தா** பல்கலைக்கழகம் முஸ்லிம் ஆக்கிரமிப்பாளர்களால் (Invaders) அழித்து ஒழிக்கப்பட்டது என்ற புரளிக்கு இப்புத்தகம் ஒரு முற்று புள்ளி வைக்கும் என வாசகர்கள் மகிழ முடியும். அதேநேரத்தில், ஒரு வரலாற்றை குறிப்பிட்ட சாராருக்கு எதிராக திருப்பி விடும் எழுத்து வன்முறை எவ்வாறு கட்டமைக்க முடியும் என்பதையும் அறிவது நமது அப்பாவித்தனத்தை முடிவுக்கு கொண்டு வரலாம். இதை எளிய பரிசோதனை முறையில் விளங்கி கொள்ள முடியும். நாளந்தா மற்றும் ஒடன்தபுரி வரலாற்றுக்காக தரப்பட்ட ஆதாரங்களில்,

1) "சுல்தானின் படைத்தளபதியிடம் தூது சென்ற சில புத்த பிட்சுகள்".

2) "ஒடன்தபுரி மற்றும் விக்ரமசிலா பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியை ராணுவ கோட்டையாக பயன்படுத்தினார் அப்பகுதியை ஆண்ட அரசன்."

3) "நாளந்தா பல்கலைக்கழகத்தின் வாசலில் இருந்த இரு தீர்திகா (பௌத்தத்தை எதிர்த்து வந்த பிராமணர்கள்) பிச்சைக்காரர்கள் பல்கலைக்கழகத்தை எரித்தார்கள்".

மேலே தரப்பட்டுள்ள இம்முக்கிய மூன்று ஆதாரங்களை தூர எறிந்து விட்டு, இதுவரை படித்தவற்றை மனதில் ஓட விட்டு பாருங்கள்.. . துருக்கிய இனத்தவர்கள் மீது உங்களுக்கு கோபம் வருகிறது அல்லவா?..... பிறகு அவர்களது மதத்தின் மீது வெறுப்பு ஏற்படுகிறது அல்லவா..... இது தான் வரலாற்று தந்திரம்.

இம்முக்கிய மூன்று ஆதாரங்களை தூர எறிந்து விட்டால், துருக்கிய இனத்தை சேர்ந்தவர்கள் (இன்றைய துருக்கி நாட்டை சேர்ந்தவர்கள் கிடையாது. மத்திய ஆசிய பகுதியை சேர்ந்த துருக்கிய இன மொழியை பேசியவர்கள்) மீது பழி சுமத்த ஏதுவான பாதை அமைந்து விடுகிறது. பிறகு அரசவை வரலாற்றாசிரியர் மின்ஹாஜ் தரும் மொட்டையான தகவலை கொண்டு கண் (நாளந்தா), காது (முஸ்லிம்கள் எரித்தார்கள்), மூக்கு (கல்வியை அழித்தார்கள்) வைத்து பொய்யை பரப்பி விட முடியும். மிகச் சில ஆங்கில நூல்களை தவிர மற்றவை அனைத்து நூல்களும் இப்படி தான் இவ்வரலாற்றை தருகின்றன. ஐ.ஏ.எஸ் முதல் அடிமட்ட வேலைக்காக நடத்தப்படும் அனைத்து அரசு தேர்வுக்கான பாடத்திட்டங்களில் (syllabus) இத்தவறான தகவலே இடம்பெற்றுள்ளன.

வரலாறு என்ற பெயரில் பொய்யை உண்மை போல பரப்ப முடியும் என்பதை வாசகர்கள் இப்போது புரிந்திருப்பார்கள்.

**- ஜாஹிர் உசேன்**



vaigarai velicham official

1) Book : Composite Culture under the Sultanate of Delhi.
Author : Igtidar Husain Siddiqui
Edition: 2016 Page- 33

2) Book : INDIANS: A brief History of a Civilization
Author : Namit Arora. Edition : 2021, Page- 118.
(Bengal and Bihar were then ruled by the orthodox Brahminical Sena Dynasty, which has introduced kulinism, or supremacist caste rules in society, and had began persecuting Buddhists, causing many of them to flee Bengal.)

3) Book : History of Buddhism in India
Author : Taranatha. Translated by : Lama Chimpa, Alaka chattopadhyaya
Edition : 2010 Page- 319
(Some of the monks acted as messengers for this king (Turuska).)

4) Book : The Princeton Dictionary of Buddhism.
Author : Robert E. Buswell Jr. Donald S. Lopez Jr Page - 601.
(when it (Odantapuri) and Vikramasila were destroyed in the1199 and 1200 CE invasion of the Ghurid Muslims, who were said to have mistaken the monasteries for fortresses.)

5) Book : History of Buddhism in India
Author : Taranatha. Translated by : Lama Chimpa, Alaka chattopadhyaya
Edition: 2010 Page- 318,443

[1). To protect Odantapuri and Vikramasila, the king even converted these partially into fortresses and stationed some soldiers there.

2). Ikhtiyar-ud-din and his companions had attacked the place under the impression that it was a fortress. It was only when they noticed books and became acquainted with their contents that they realised what they had destroyed were monasteries and libraries.]

5A) Book : துருக்கியின் அயா சோஃபியா பள்ளிவாசல் சுருக்கமான வரலாறு.
ஆசிரியர்கள் : ஜாஹிர் உசேன், ஹாஜா ஹமீதுல்லா
பதிப்பு : 2023, வெளியீடு-வேர்கள் பதிப்பகம்.

6) Book : The Power of the Islamic Sword in the Narrating the. death of Indian Buddhism
Author : Andrey Truschke Page - 421
(As Frederick Asher has recently noted, no premodern writer ever claims that there was a Muslim-led assault on Nalanda)

7) Book : INDIANS: A brief History of a Civilization
Author : Namit Arora. Edition: 2021, Page-120

(Nalanda...... lay not on the main route from Delhi to Bengal, but required a special expedition. Though a direct distance 12-15 km isnot prohibitive, there may also have been a forest then - with snakes, tigers, and black bears - between Nalanda and the army's main routes to Bengal via Bihar sharif, implying a longer detour.)

8) Book : The Power of the Islamic Sword in the Narrating the death of Indian Buddhism.
Author: Andrey Truschke. Page - 422
(Infact, the date of Nalanda's closing does not coincide with Muhammad bin Bankhtyar's presumed raid.)

9) Book : Excavated Remains of Nalanda Mahavihara By- Archaeological Survey of India.
Chapter-2, Page- 24

[It must be mentioned here that in the 14th century CE, Chalaraja and few other locals attempted to keep Nalanda functioning]

10) Book : The Power of the Islamic Sword in the Narrating the. death of Indian Buddhism
Author: Andrey Truschke Page - 423
(Chalaraja, ruler (petty chief) in Bengal, and his queen supported repairs to several temples and monasteries at Nalanda in the fourteenth and fifteenth centuries)

11) Book: The Princeton Dictionary of Buddhism
Author : Robert E. Buswell Jr. Donald S. Lopez Jr Page - 1056.
(Dhyanabhadra, 1289 -1363 AD, Indian monk...... later ...... came to live and teach in korea ......have studied at the famous Nalanda monastic University.)

12) Book : Excavated Remains of Nalanda Mahavihara By- Archaeological Survey of India.
Appendix-02, Page-7
(The destruction this structure by fire is evidenced by the remains of vitrified concrete debris and fused bricks.)

13) Book : Nalanda Mahavihara
Author : Mary L. Stewart
Edition : 2018 Page : Introduction, 97,170,173,241
1) Judging by the uneven topography and the number tanks (reservoirs) in the surrounding countryside, the present excavated site may have been but one many monastic complexes built over the centuries and at various times destroyed by warfare or natural causes as well as by the age-

old habit of the local villagers removing bricks and stone work from ruins for their own construction.

2) The building had collapsed in an earthquake. (This was happened before 1934 earthquake)

3) An earthquake that struck 15 January 1934 caused a great dead of damage to the site, especially to Stupa No.3' where major portions of the east facade of the fourth level stupa collapsed entirely.

4). Mention is made in the "Pag-sam jon-Zang" of the Nalanda University, with its grand library, located in an area called Dharmaganja. It was said to have consisted three grand buildings: Ratna sagara, Ratnodadhi, Ratnaranjaka. In the Ratno dadhi, which was reported to be nine -storeyed, there were kept the sacred scripts such as Prajna paramita- sutra, and tantric texts such as Sama jagubya. If may never be possible if Site - 1 was one of the these library buildings, but the thought is intriguing. Another possibility for the jumble, as we have said, could be conflagration caused either by man or by natural disaster. As the archaeologists discovered while working there, earthquakes were not an uncommon phenomenon. )

14) Book : History of Buddhism in India
Author : Taranatha, Translated by :
Lama Chimpa, Alaka chattopadhyaya
Edition: 2010, Page-141,142

15) Article : How history was unmade at Nalanda!
Author : D.N.Jha, Former President of Indian History Congress.

16) Book : Nalanda Mahavihara
Author : Mary L. Stewart.
Edition: 2018 Page: 67

[During the consecration of the temple built by kakutsiddha at Nalandra (Nalanda) " the young naughty sramanas threw stops at the two tirthika beggars and Kept them pressed inside door panels and set ferocious dogs on them ". Angered by this, one of them went on arranging for their livelihood and the other sat in a deep pit and "engaged himself in surya sadhana" (solar worship), first for nine years and then for three more years and having thus "acquired mantrasiddhi" he "performed a sacrifice and scattered the charmed ashes all around" which "immediately resulted in a miraculously produced fire", consuming all the eighty four temples and the scriptures some of which, however, were saved by water flowing from an upper floor of the nine storey Ratrodadhi temple.

இதுவே புத்த பிட்சு தாரணாதாவின் நூலிலும் ஆனால், விலாவாரியாக கொடுக்கப்பட்டுள்ளது. சுருக்கத்தை கருதி D.N.Jha அவர்களின் கட்டுரையிலிருந்து இப்பகுதியை இங்க இடம்பெற செய்துள்ளோம். இதில் 9 தளம் கொண்ட கோவிலில் பிரமாண்டமான நூலகம் இருந்துள்ளது.

17) Article : How history was unmade at Nalanda!
Author : D.N.Jha, Former President of Indian

History Congress. Neither Sumpa (author of : Pag Sam Jon Zang), nor Taranatha ever came to India. This should mean (Both authors mention same fate ie Brahmins destroyed Nalanda) that the idea of Brahminical hostility to the religion of the Buddha traveled to Tibet fairly early and became part of its Buddhist tradition, and found expression in the 17th-18th century Tibetan writings.

18) Book : Tabakat- i-Nasiri, English tr. H G Raverty,
Page: 551-52.

This above text quoted here, appears in D.N. Jha's 'How History was unmade at Nalanda !'. Downloaded from website.

19) Book : Ancient Indian History
Author : Sangh Mittra, S.R.Bakshi,
Page: 238, Edition: 2023

[The history of the fall of Bengal (Sena Dynasty) is the most marvellous that has been recorded by historians. The conquest was made by Mohammed, son of Bakhtyar khilji and not by kutubuddin and the account of it is to be found not in the Contemporaneous Taj-ul-Ma'sir but is given by the author of the Tabakat- i- Nasiri from admittedly hearsay reports.]

20) Book : BIOGRAPHY of DHARMASVAAMIN
Translator : Dr. George Roerich
Edition: 1959 Page: ii

[The history of northern India during the first half of the 13th century has been so far recon structed mainly from the accounts of Muslim historians. Non- Muslim sources are very few and the present work, which describes the condition of Bihar as actually seen by an Tibetan pilgrim, will rank very high among them.]

21) Book : INDIANS: A brief History of a Civilization
Author: Namit Arora
Edition: 2021 Page: 8

[Brahmanical Society was not exactly a picture of intellectual and moral well-being that many now fondly imagine it to be.]

21-A) ஆதார புத்தகம் : தமிழ்பாடம், 6 ம் வகுப்பு பாடப் புத்தகம்,
முதல் பருவம், தொகுதி-1
பக்கம் : 7,8. பதிப்பு : 2017.

தமிழ்நாடு அரசின் பொது பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல். ■


vaigarai velicham official

# ஒரே நொடியில் சாதியை ஒழித்துவிட்டேன்



**இஸ்லாத்தைத்தான்** ஏற்றுக் கொண்டதல்லாமல் அதனை அடுத்தவர்களுக்கும் எடுத்துச் சொல்லிடும் வண்ணம் “புறப்படு நீயும் இஸ் லாத்தை நோக்கி” என அன்போடு கட்டளை யிட்டவர் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள்.

மேலேகுறிப்பிட்ட அவர்களுடைய நூல் இதுவரை 50,000க்கும் குறையாமல் விநியோ கிக்கப்பட்டிருக்கும்.

ஆங்கிலம், கன்னடம் ஆகிய மொழிகளில் அதை நாமே வெளியிட் டுள்ளோம். ஹிந்தியில் அலிகர் பல்கலைக்கழக மாணவர்கள் வெளி யிட்டார்கள்.

அந்த நூல் கன்னட மொழியில் இலவச மாகவும் தமிழில் குறைந்த விலையிலும் நம்மிடம் கிடைக்கும்.

அண்ணன் கொடிக்கால் அவர்களைச் சந்திக்கச் சென்றபோது “தலித் முரசு” சகோ தரர்கள்: யாக்கன் அவர்களும், பாண்டியன் அவர்களும் பேட்டிக்காக தயாராகிக் கொண்டி ருந்தார்கள். பார்த்துவிட்டு வந்துவிட்டேன்.

பேட்டி வழக்கம்போல் ‘நச்’சென இருந்தது.

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பவர் களுக்கு இஃது பெரிதும் பயன்படும் என்பதால் அதனை இங்கே தருகின்றோம்.

இந்து சாதியத்தால் ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் - சமூக, பொருளாதார, அரசியல் சமத்துவத்திற்கானத் தேடலில் இன்றுவரை களைப்படையவில்லை. சமயம், தத்துவம், அரசியல் என தங்களின் விடுதலைக்கு உதவும் எந்த வழிமுறைக்கும் அவர்கள் செவிமடுத்திருக் கிறார்கள். அவற்றோடு இணைந்து நிற்கிறார்கள்; இரண்டறக் கலந்தும் விடுகிறார்கள். மிஞ்சிய தெல்லாம் ஏமாற்றமே!

ஆனால், தமிழகத்தின் தென்கோடியில் கன்னியாகுமரி அருகே கொடிக்கால் கிராமத்தில் பிறந்த கொடிக்கால் ஷேக் அப்துல்லா, ‘இஸ்லாம் ஏமாற்றவில்லை’ என்கிறார். அநீதியாகத் தம் சமூகத்தின் மீது சுமத்தப்பட்ட பிறவி இழிவைத் துடைத்தெறிய - இலக்கியம், ஊடகம், பகுத்தறிவு, பொதுவுடைமை, மனித உரிமை எனப் பயணப்பட்டு, வழியெல்லாம் ஏமாற்றத்தில் கரைந்து, இறுதியில் இஸ்லாத்தின் மூலம் தனது இழிவு நீங்கியதைப் பெருமை யுடன் விவரிக்கிறார். ஒடுக்கப்பட்ட இனங்களின் விடுதலைக்காக, அவர் அனுபவத்தில் தேக்கிய வற்றைத் தன் தாய்ச் சமூகத்திடம் வாஞ்சனை யுடன் பகிர்ந்து கொள்கிறார்.

நேர்காணல் : பாண்டியன், யாக்கன்

**கொடிக்கால் செல்லப்பாவாக இருந்த நீங்கள் எந்த ஆண்டு கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்வாக மாறினீர்கள்?**

1986ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக மாறினேன். 8,9 வயது இருக்கும்போது எங்கள் பகுதியில் தலித், அதற்கு அடுத்த படியாக நாடார்கள் தான் அதிகமாக இருந்தார்கள். 'உயர்சாதி' என்று சொல்லப்படுகிறவர்கள் மற்றும் பார்ப்பனர்கள் அறவே எங்கள் பகுதியில் இல்லை. நாடார்களும் தலித்துகளும் பல சா திக் கொடுமைகளுக்கு ஆளானவர்கள்தான். சாதிக் கொடுமையால் பாதிக்கப்பட்ட நாடார்களே, தலித்துகள் தங்களுக்குக் கீழ் இருக்க வேண்டும்; தங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று அவமானப்படுத்தினார்கள். நாடார்கள் தலித்துகளிடத்தில் நடந்து கொண்ட முறையும் செயல்பாடுகளும் எனக்குள் காயத்தை ஏற்படுத்தியது. இந்தத் தலைமுறை முடிந்து அடுத்த தலைமுறையாவது நம்மை மனிதர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது. கன்னியாகுமரியில் நடை பெற்ற தனித் தமிழ்நாடு விடுதலைப் போராட் டத்தில், 1954ஆம் ஆண்டு கலந்துகொண்டு சிறை சென்று வெளியில் வந்தோம். சிறைக்குச் சென்று வந்ததால் சமுதாயத்தில் என்னைப் பற்றி ஒரு பார்வை வருகிறது. இது, மிக முக்கியமான கட்டம். ஏனென்றால், சிறு வயதில் எனக்குப் படிக்கின்ற வாய்ப்பு இல்லை. பொது அறிவு எனக்கு அதிகமாக ஏற்படக்கூடிய நிலை வரும்போது, எங்கள் பகுதியில் இருக்கும் இளைஞர்களின் பார்வை மாறுகிறது. எந்தச் சமுதாயம் எங்களை அவமானப்படுத்தியதோ, என்னை ஒதுக்கி வைத்ததோ, அந்தச் சமுதாயத் தினுடைய அடுத்த தலைமுறை என்னை மதிக்கப் புறப்பட்டது.

அடிமை இந்தியாவில், ஒடுக்கப்பட்ட மக்கள் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு செய்தியை உங்களுக்குச் சொல்கிறேன். கலைஞர் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்தபோது, சட்டமன்றத்தில் ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையின் போது ஒரு செய்தியைச் சொல்கிறார்:

"எண்பது ஆண்டுகளுக்கு முன்னால் வெளி விடப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரம் எனக்குக் கிடைத்தது. அதில் சென்னை வால்டாக்ஸ் ரோட்டில் ஒற்றைவாடை தியேட்டரில் 'ஆரிய மாலா' என்ற நாடகம் நடத்த இருப்பதாகவும், அதுகுறித்த செய்திகளைக் குறிப்பிட்டுவிட்டு தொழுநோயாளிகள் மற்றும் பஞ்சமர்களுக்கு எக்காரண அடிக்குறிப்பொன்று அதில் சொல்லப்பட்டிருந்தது. ஆரியமாலா நாடகம் பார்ப்பதற்கு அனுமதி இல்லை என்று குறிப்பிடப் பட்டிருந்தது." ஒரு சமுதாயம் எவ்வாறு இழிவுபடுத்தப்பட்டிருந்தது என்பதைச் சொல்தற்கு வேறு வார்த்தைகளே இல்லை. இது. அடிமை இந்தியாவில் நடந்த விஷயம்.

இன்னொரு சம்பவத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஜெகஜீவன்ராம் அவர்கள், இந்தியாவில் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் மிகப் பெரிய தலைவர்களில் ஒருவர். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், செல்வாக்குமிக்கத் தலைவ ராகவும், துணைப்பிரதமராகவும் இருந்து, அவர் காசியிலே சம்பூராணந் சிலையை அவர் திறந்து வைத்து ராணுவ அமைச்சராக இருக்கும் போது, ஒரு சம்பவம் நடக்கிறது அங்கு இருக்கிற சனாதனவாதிகள் எல்லாம் கங்கைக்கும் விட்டு வந்த பிறகு, அவர் ஒரு தலித் என்ற காரணத்தால் போய் - தண்ணீர் கொண்டுவந்து சிலையை சுத்தம் செய்து கழுவி, உலகிற்கு பகிரங்கமாக தெரிவித்தார்கள். இதை உலகமே பார்த்தது. எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், இப்ப டிப்பட்ட செய்திகள் வந்தால் அவர்களுக்கு என்னென்ன தண்டனைகள் கொடுக்க வேண்டும் என்ற சட்டம் இருக்கக்கூடிய காலத்திலேயே இந்த சம்பவம் நடந்தது. அவர், மூப்படைக்கும் தளபதியாக இருந்த காலத்திலேயே இது நடந்தது.

**நீங்கள் மதம் மாறுவதற்கான சமூகக் காரணங்களைச் சொல்கிறீர்கள். சமூகக் காரணங்களால் நீங்கள் மதம் மாறினீர்களா? அல்லது உங்களுக்கு இருக்கக்கூடிய தனிப் பட்ட அனுபவங்களால் மதம் மாறினீர்களா?**

சமூகத்தில் நானும் ஒரு அங்கம்தானே! சமூகம் பாதிக்கப்படும்போது அதில்நானும் ஒரு ஆள்தானே! அதை நான் பிரித்துப் பார்க்கவில்லை. பல சம்பவங்களை என்னால் சொல்ல முடியும். ஒரு ஆளை சந்திக்கும்போது,


vaigarai velicham official



ஒரு வீட்டிற்குப் போகும்போது, என்னை நடத்திய நடைமுறைகள் எனக்கு ஒரு காயத்தை ஏற்படுத்தியது. அந்தக் காயம் நிரந்தரமாகவே உள்ள காயம். சமூகக் காரணங்களால்தான் நான் மதம் மாறினேன். முதன்முதலாக நான் மட்டும்தான் மதம் மாறினேன். நான் 'கன்வின்ஸ்' ஆனதால் மதம் மாறினேன்.

என்னுடைய மனைவி கிறித்துவப் பெண். கம்யூனிஸம் இயக்கத்திலேயே அந்தக் குடும்பத் திலேயே பிறந்து வளர்ந்ததனாலே, என்னுடைய மனைவி நார்த்திகவாதி. அவர் சர்ச்சுக்கு போவது கிடையாது. சடங்கு சம்பிரதாயங்களில் பங்கெடுத்தது கிடையாது. அப்போது நான் இப்படி ஒரு முடிவு எடுத்த பிறகு, அதை நான் என் மனைவியிடம் சொல்லும்போது, என்னைத் திட்டினாங்க. இருந்திருந்து ஒரு மதவாதியாக மாறிட்டீங்களே! பகுத்தறிவு ஊட்டின வங்க, காலம் முழுவதும் அதற்காகவே பாடுபட்டவங்க, சமூகத்தில் என்னென்னவோ செய்தீங்க. இருந் திருந்து மத வாதியாக மாறிட்டீங்களே என்று வருத்தப்பட்டார்.

**அதற்கு உங்களுடைய பதில் என்ன?**

அதற்குப் பிறகுதான் அவருக்குச் சில நூல்களை எல்லாம் கொடுத்தேன். நான் என் மனைவியிடம் சொன்னேன்; நாம் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருக்கிறோம். அதற்கு என்ன காரணம் என்றால், அந்த இயக்கம் ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் என்று நம்பினோம். அந்த நம்பிக்கையில் தான் நீயும், நானும் இரவு பகலாகப்பாடுபட்டோம், உழைத்தோம், கஷ்டப் பட்டோம், பலநாள் ஜெயிலுக்குப்போனோம். எல்லாம் நடந்தது. இதில் ஏதாவது ஒரு மாற்றம் உனக்கு வந்திருப்பதாகத் தெரிகிறதான்னு கேட்டேன்.

யோசித்த பிறகு, ஆமாம் நம்முடைய தோழர்கள் எல்லாம் தோழமையோடுதான் இருக்காங்க. ஆனால், அவங்க வீட்டில் அப்படி யில்லை. நம்ம வீட்டுக்கு வருகிற கட்சித் தோழர்கள் அக்கா, தங்கச்சி என்கிற உறவோடு, அந்த பந்தத்தோடு நம்மிடம் அன்பு செலுத்து றாங்க, அதெல்லாம் சரிதான். ஆனால், அவங்க அப்பாவோ, அம்மாவோ, தம்பியோ, தங்கச் சியோ நம்மள அப்படிப் பார்த்ததில்லையே! இதில் ஒரு உண்மை என்னவென்றால், இதை மாத்தணும்ங்கிறதுதானே எனக்கும் உனக்கும் நோக்கம். ஆமாம். அதற்கு ஒரு வழி என்னன்னு சொன்னா? மதமாற்றம்தான்.

நம்முடைய எல்லாவிதமான முன்னேற்றத் திற்கும் இங்கு தடையாக இருப்பது ஜாதிதான். இந்த ஜாதியை ஒழிக்கனும், இந்த ஜாதி மாறனும். இது எங்கு போனாலும் இருந்திட்டு இருக்கில்ல. இது மாறுவதற்கு ஏதாவது வழி உண்டா? அது கம்யூனிஸ்ட் மூலம் முடியும் என்று நம்பினோம். நம்பிக் கொண்டிருந்தோம். நான் நம்பிக்கையை இழந்துவிட்டேன். உனக்கு நம்பிக்கை உள்ளதா? என்று கேட்டேன். ஜாதி ஒழியாது. ஜாதி ஒழியவில்லை என்று சொன்னால், மக்களுக்கு அந்தஸ்து எப்படி கிடைக்கும்? அப்ப கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லையே, அது நம்ப இஸ்லாத்தின் மூலமாக கிடைக்குமா என்று ஒரு கேள்வியை என் மனைவி கேட்டார்.

அது கிடைக்கும். எப்படி கிடைக்கும் என்று சொன்னால், கம்யூனிசத்தின் மூலமாக இந்தியாவைப் பொறுத்தவரை சாதி ஒழியும் என்பது சாத்தியமில்லை. அந்தத் தத்துவம் சரியா, தப்பான்னு நான் அங்கு போகவில்லை. இந்தியச் சூழ்நிலையில எல்லா விதமான மாற்றத்திற்கும் தடையாக இருப்பது ஜாதி அமைப்பு முறை. இந்த ஜாதிகள் ஒழியாமல், இங்கு வர்க்கப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை. அப்படியிருக்கும்போது, நம் எண்ணங்கள் நிறைவேறாத ஒரு இயக்கத்திலே, ஒரு கொள்கையிலே ஏன் விடாப்பிடியாக நாம் இருக்கணும்? இதுதான் நான் அவருக்குச் சொன்ன பதில்.

**நீங்கள் சொல்கிற இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் உண்டா?**

கம்யூனிச இயக்கங்களின் செயல்பாட்டு முறை, சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டுவரப் போதுமானதாக இல்லை. அதற்குக் காரணம் ஜாதி அமைப்பு முறை. பொதுவாக ஒரு பிரச்சனை என்று வரும்போது, கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கக் கூடிய, மற்ற ஜாதியைச் சேர்ந்தவர்கள் தலைமை ஏற்க வருகிறார்கள். அவர்கள் ஒரு பொறுப்புக்கு வரும்போது, ஒரு சில தீர்மானகரமான தெளிவான முடிவு எடுக்காமல், ஒவ்வொரு காலகட்டத்திலும் தயக்கம் காட்டுகிறார்கள். அதுகுறித்துச் சொன்னாலும்கூட, அது எடுபடக்கூடிய நிலையில் இல்லை.

**நீங்கள் ஒரு பகுத்தறிவுவாதியாக இருந்தும், அம்பேத்கர் தழுவிய பவுத்த மார்க்கத்தைத் தேர்வு செய்யாமல் இஸ்லாத்திற்குச் சென்றது ஏன்?**

'நான் இந்துவாக சாகமாட்டேன்' என்று அம்பேத்கர் ஏற்ற உறுதிமொழியின் அடிப்படையில் அவர் பவுத்தராக மாறினார். பவுத்தம் சரியா, தவறா என்ற கருத்துக்குள் நான் செல்லவில்லை. ஆனால், நடைமுறையில் பவுத்தம் இந்து மதத்தின் ஒரு பிரிவாகத்தானே கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பெரியவர் சக்திதாசன், டாக்டர் சேப்பன் இவர்கள் எல்லாம் இந்து மதம் வேண்டாமென்று பவுத்தத்திற்குப் போனார்கள். ஆனால், பழையபடி மீண்டும் எங்களுக்கு சாதி ஒழிய வேண்டும் என்று போராடுகிறார்களே! கிறித்துவமும் பல நல்ல செய்திகளைச் சொன்னாலும், நடைமுறையில் சாதியத்தை வேரறுக்க முடியவில்லையே. பவுத்தத்தை ஏற்றால் சாதி ஒழியும் என்று சொன்னார்கள். ஆனால் ஒழியவில்லையே! இதற்கு யாரும் சரியான பதில் சொல்ல மறுக்கிறார்கள்.

**ஒரே நொடியில் சாதியை ஒழித்துவிட்டேன்!**

அந்தக் காலத்தில், அஜிதா என்ற நக்சல் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு போராளியிடம் பேசிக் கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் அவரைப் பற்றிய செய்தி வராத நாட்களே இருக்காது. அவ்வளவு பரபரப்பாக பேசப்பட்டவர். நீங்கள் பல்வேறு சிரமத்துக்கிடையில் பல தியாகங்களைச் செய்திருக்கிறீர்கள்; நானும் என்னுடைய சக்திக்கேற்றவாறு பல தியாகங்களைச் செய்திருக்கிறேன். ஆனால் நாம் விரும்பிய அந்த இலக்கை அடைவதற்கு சாதி அமைப்பு முறை தடையாக இருக்கிறதே அதை ஒழிக்காமல் நாம் எப்படி வெற்றி பெற முடியும் என்று நான் கேட்டேன். அதற்கு அந்தம்மா சொன்னார்கள்:

'இதை நான் நம்ப முடியாது' என்றார். நம்பூதிரியும், நாயரும் கேரளத்திலே உண்டா என்றேன். 'ஆம்' என்றார்கள்.

'தோட்டி' வேலை செய்கிறவர்கள் அங்கு உண்டா என்றேன் 'ஆம்' என்றார்கள்.

இந்த வேலையை நாயரும் நம்பூதிரியும் செய்வார்களா? என்றேன். 'இது அவர்களுடைய வேலை அல்லவே' என்றார்கள். அப்ப சொன்னேன் - ஜாதி நம்மிடையே பல வடிவங்களில் இருக்கிறது.

ஆனால், நாம் ஏதோ ஒரு வகையில் இதை எல்லாம் மறைத்துக் கொண்டிருக்கிறோம் என்றேன். ஆனால், இதை எப்படி ஒழிக்க முடியும் என்று கேட்டார். நான் சொன்னேன், ஒரே நொடியில் சாதியை ஒழிக்க முடியும். 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்று சொல்லிவிட்டால். ஒரே நொடியில் சாதி ஒழிந்துவிடும். நான் அப்படி ஒரே நொடியில் சாதியை ஒழித்து முஸ்லிமானேன்.

**இருப்பினும், நடைமுறையில் மதம் மாறியவர்களை ஏற்றுக் கொள்கிறார்களா?**


vaigarai velicham official

நானும் 'முரசொலி' அடியாரும் சென்னையில் இருந்து வேலூர் செல்கிறோம். அங்குள்ள இஸ்லாமிய மய்யத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம். அவர் இன்னும் இஸ்லாத்திற்கு வரவில்லை. ஆனால், தொப்பி அணிந்திருந்தார், பார்க்க முஸ்லிம் போலவே இருப்பார். நான் அவருக்குப் பின்னால் அமர்ந்திருந்தேன். அவருடைய தொப்பியை அணிய வேண்டும் என்ற ஆசையில், "உங்களுக்கு தாடி இருக்கிறது. எனவே, அந்தத் தொப்பியை எனக்குக் கொடுங்களேன்" என்றேன். அதற்கு அவர் "இன்னொரு நூல் தொப்பி இருக்கிறது அதை நீ வைத்துக் கொள்" என்று அதைக் கொடுத்தார்.

நான் பயணத்தின்போது, அதைக் கழற்றுவதும் போடுவதுமாக இருந்தேன், பிறகு, தொப்பியைக் கழற்றுவதில்லை என்று உறுதியாக இருந்தேன். ஊர் வந்ததும் அவருக்குப் பின்னால் நான் இறங்குகி றேன். நான் பேருந்திலிருந்து கீழே இறங்கியவுடன் அங்கிருந்த ரிக்ஷாக்காரர் முதல் முதலில் என்னைப் "பாய் உங்களுக்கு எங்க போகணும்?" என்றார்.

நான் 'கலிமா' சொல்லவில்லை முஸ்லிமாக மாறவில்லை. பெயர் மாற்றவில்லை. ஆனால், இந்தத் தொப்பி கொடுத்த அங்கீகாரத்தை வைத்து அந்த ரிக்ஷாக்காரர் "பாய்" என்று என்னை அழைக்கிறார்.

பிறகு அந்த இஸ்லாம் நிறுவனத் திற்குச் சென்றோம். அங்கு தென் மாவட்டங்களில் இருந்து முஸ்லிமாக மாறிய பலபேர் இருக்கிறார்கள். 5 லிருந்து 80 வயது பெரியவர்கள் வரை இருக்கிறார்கள். இந்தத் தொப்பியை அதற்குப் பிறகு தூக்கத்திலும் நான் எடுக்கவில்லை, எனக்குள் ஒரே பூரிப்பு. அடுத்த நாள் காலை வெளியே கிளம்பி, அங்குள்ள ரயில் நிலையத்திற்கு சென்றேன். அங்குள்ள டீ கடைக்குச் சென்றேன். அந்தக் கடையில் நிறைய இந்து சாமிப் படங்களை கடைக்காரர் வைத்திருந்தார் அங்கு போனதும், 'கல்லா'வில் இருந்தவர் "வாங்க பாய் உட்காருங்க! "டேய் பாய்க்கு ஒரு டீ போடு" என்றார். இதைத்தான் மிகப்பெரிய சமூக அங்கீகாரமாக நான் நினைக்கிறேன். இவை எல்லாம்தான் என்னை கொஞ்சம் கொஞ்சமாக பலப்படுத்தியது.

நான் இஸ்லாத்திற்கு வந்த பிறகு, எனக்கு சமூகத்தில் நல்ல அங்கீகாரம் கிடைத்தது. எங்கள் மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்கள் கல்லூரி, 46 ஜமாஅத்துகளுக்குத் தொடர்புடைய ஒரு கல்லூரி, அது 30 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய புகழ் பெற்ற கல்லூரி. அந்தக் கல்லூரியில் ஆட்சிமன்றத் தேர்தல் வருகிறது.

அப்போது நண்பர்கள், நீங்களும் ஆட்சி மன்றக் குழுவுக்கு வரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்று சொன்னார்கள். நீங்களும் போட்டிப் போடுங்கள் என்று வலியுறுத்தினார்கள், நான் தயங்கினேன். இருப்பினும், பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றிபெற்றேன். நான் இன்றளவும் அந்த ஆட்சிமன்றக் குழுவில் தொடர்ந்து இடம் பெற்று வருகிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் மிக முக்கியமாக அறியப்படக்கூடிய தலைவர்கள், இஸ்லாம் பற்றியும் அதன் தத்துவம் பற்றியும் அறைக்குள்தான் பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய சமூக, மதம், பொருளாதாரம் எல்லாம் அந்தப் பள்ளிவாசலுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தது. மற்ற சமூகம் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று யாருக்கும் விளங்காமல் இருந்தது. அவர்கள் எல்லாம் நான் முன்வைக்க கூடிய சமூக சீர்திருத்தத்திற்கான செயல்திட்டங்களை முழுமையாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

**இஸ்லாமை நீங்கள் ஏற்றுக் கொண்டதற்கான சமூகக் காரணங் களைக் கூறுங்கள்...**

ஒரு இஸ்லாமிய நிகழ்ச்சி கோவை யில் நடக்கிறது. அந்த நிகழ்ச்சி நடை பெற்றபிறகு மதியம் இரண்டு மணி இருக்கும். அந்த வழியா 'ஜனாஷா' ஒன்று கொண்டு வருகிறார்கள். 'ஜனாஷா' என்றால் சாவு. அந்த வழியே கொண்டு வருகிறார்கள். அதை அடக்கம் செய்யக்கூடிய நேரம் வந்தது. இந்த நிகழ்ச்சியை முடித்து விட்டு, அந்த அடக்கத்தில் நாங்கள் எல்லோரும் கலந்து கொள்கிறோம். அந்த நேரத்தில் ஒரு தகவல் சொல்லப்பட்டது. இறந்துவிட்ட அந்தப் பெரியவர் பேர் தெரியாது. எந்த ஊர் என்றும் தெரியாது. அப்படிப்பட்ட ஆளு அங்க ஒரு அனாதையா இறந்துகிடந்தார்.

அதுமாதிரி இறந்து கிடப்பவர். முஸ்லிம்

என்று தெரிந்தால், உள்ளூர் போலிசோ, அல்லது மருத்துவம ளையோ - அங்கிருக்கும் ஜமாத்திற்கு உடனடியாகத் தெரிவிப்பார்கள். உடனே ஜமாத்தில் உள்ளவர்கள் என்ன செய்வார்கள் என்றால் (இன்றும் எல்லா ஜமாத்திலும் கடைப் பிடிக்கக்கூடிய ஒன்று. நீங்கள் யாரை வேண்டு மானாலும் கேட்டுப் பாருங்கள்), ஒரு மனிதனுக்கு அடக்கத்திற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அவை அனைத்தையும் ஒன்றுவிடாமல் செய்து - அதற்கு மரியாதை செலுத்துவார்கள். அதே மாதிரி, அன்றைக்கு முழு மரியாதை அந்த இறந்துபோன பெரியவருக்குச் செய்யப்பட்டது.

ஆனால், அதேநேரத்தில். தஞ்சை மாவட் டத்தில் ஒரு பெரியவர் இறந்து போய்விட்டார். அந்தப் பெரியவரை அடக்கம் செய்வதற்கு எல்லோரும் போகிறார்கள். தேர்ந்தெடுக்கப் பட்ட ஆட்சி என்று ஒன்று இல்லை. இக்காலத்தில் ஆளுநர் ஆட்சி நடக்கிறது. அப்போது தமிழகத் தின் தலைமைச் செயலாளர் திரு. பத்மநாபன், மாவட்ட ஆட்சியர் திரு. ராமு, அம்மாவட்ட எஸ்.பி.யும் ஒரு தலித்து தான். இந்த மூன்று பேருக்கும் மாநில அளவில் முழுஅதிகாரம் இருக் கிறது. அதிலும் தலைமைச் செயலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

அப்படிப்பட்ட நேரத்தில், அந்தப் பெரிய வரின் உடலை அடக்கம் செய்யக் கொண்டு போகிறார்கள். அங்கிருந்த சாதி இந்துக்கள் சாலையை இடைமறிக்கிறார்கள். பெரும் பிரச் சினை ஏற்பட்டுவிட்டது. இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் கூடிவிட்டார்கள். கலவரம் ஏற்படக்கூடிய ஆபத்து ஏற்படுகிறது. இரண்டு நாளாகப் பிணம் கிடக்கிறது. புதைக்க ஆளில்லை. சாதி இந்துக்கள் புதைக்கவே அனுமதிக்க வில்லை. தோழர்களே என்ன நடந்தது தெரியுமா? எஸ்.பி.யும், கலெக்டரும் தலித் தலைவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து, "எங்களுக்காக, எங்களுடைய வேலையைக் காப்பாற்றுவதற்காக, தயவு செய்து விட்டுக் கொடுங்கள்;

நாங்கள்தான் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல வேண்டும். எனவே, நீங்கள் பிரச்சினை செய்யாதீர்கள்" என்று கெஞ்சுகிறார்கள். தெருவில் இருந்த பிணத்தை அவருடைய "வீட்டு முற்றத் திலேயே" அடக்கம் செய்தார்கள் என்பதுதான் கொடுமையான வரலாறு,

இந்தப் பிரச்சினை இன்று வரை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. யாராவது மறுக்க முடியுமா? ஆனால், ஒருவர் முஸ்லிமாகி விட்டால், அவருக்கு அந்தச் சமூகத்தில் அங்கீ காரம் இருக்கிறது. அவருக்கு முழு மரியாதை கிடைக்கிறது. அவன் ஒருபோதும் அனாதையாக சாக அந்தச் சமூகம் அனுமதிக்காது. ஆற்றங்கரை யிலோ, குளத்து 'ஓரத்திலோ, ரோட்டு ஓரத்திலோ அல்ல. அந்தக் குறிப்பிட்ட இடத்தில்தான் அவனை அடக்கம் செய்ய வேண்டும். இதுதான் மிக முக்கியமான சமூகக் காரணம், மதம் மாறிய தலித், ராவுத்தர் ஆகலாம் ஆனால், அய்யங்காரராக ஆக முடியுமா?

**இஸ்லாமை நீங்கள் ஏற்றுக் கொண்டதற்கான வேறு சமூக நிகழ்வுகள் உண்டா?**

இன்னொரு செய்தியையும் நான் உங்களுக்குச் சொல்கிறேன். தேனி மாவட்டத்தில் ஒரு பெரிய ஜாதிக் கலவரம் நடந்தது. இதில் தலித்துகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அங்குள்ள துரைராஜபுரம் என்ற கிராமத்தில் இருக்கக் கூடிய மக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு அறிக்கை வெளியிடுகிறார்கள். 'எங்க ஊர்ல ஒட்டு மொத்தமாக நாங்க எல்லோரும் முஸ்லிமாக மாறப் போகிறோம்' என்று அதில் பிரகடனப் படுத்தி இருந்தார்கள். இந்தச் செய்தி, தமிழ் நாட்டின் பிரபலப் பத்திரிகைகளில் வெளி வந்தது. அப்போது நாங்கள் அம்மக்களுடன் இணைந்து களப்பணிகளைச் செய்து வந்தோம். இந்தச்செய்தி வந்ததும் நாங்கள் அந்த இடத்திற்கு விரைந்தோம். அங்கு பத்திரிகையாளர்கள் குவிந்திருந்தனர். பத்திரிகையாளர்கள் மதமாற்றம் பற்றி பல்வேறு கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், குற்றாலம் பிள்ளை என்றோ, சுப்பிரமணிய அய்யர் என்றோ. அய்யங்கார் என்றோ, நாடார் என்றோ பெயர் வைக்க முடியுமா?

**ஒரு இஸ்லாமியர் இறந்து கிடந்தால்,**
**அவர் அனாதையாக இருந்தால்கூட,**
**அதை வாரி அணைத்துக் கொள்ளும் சமூகம்,**


vaigarai velicham official



**அதேவேளை முஸ்லிம் அல்லாத ஒருவர் எவ்வளவு துயரத்தில் இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாத போக்கு இந்தச் சமூகத்திடம் காணப்படுகிறதே?**

அப்படி இருந்தால், அது முற்றி லும் தவறு. இந்தச் சமூகத்தில் இத்த கைய மனோ பாவம் இருக்கிறது என் பதையும் நான் மறைக்கவில்லை. இதற்குக் காரணம், அவர்களின் அறி வின்மை தான்! குரான் இப்படியான மனோபாவம் தவறு என்றுதான் சொல்கிறது. நபிகள் நாயகம் (ஸல்) ஒரு யூதரின் பிணம் போவதைப் பார்க் கிறார். அவர் உடனே எழுந்து நின்று அதற்கு மரியாதை செலுத்தினார். சாதாரண மக்கள், 'நீங்கள் ஏன் இந்தப் பிணத் திற்கு மரியாதை செலுத்துகிறீர்கள்?' என்று கேட்டதற்கு நபிகள் நாயகம் பதில் சொல்கிறார். இதை எல்லாம் தெரிந்த பிறகும் சில முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் இஸ்லாத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ளவில்லை என்றுதானே அர்த்தம். அறைக்குள்ளேவும் மதராசாவுக்குள்ளேயும், பள்ளிவாசல் களிலும் உட்கார்ந்து கொண்டும் - பேசிக்கொண்டும் இருந்ததுபோக, இப்பொழுது அடுத்த தலைமுறை மக்கள் சமூகத்தோடு, அவர்கள் துன்ப துயரங்களில் பங்கெடுக்கக் கூடிய நிலை வந்திருக்கிறது. இப்பொழுது தான் எழுத, பேச, களத்திற்கு வரத் தொடங்கி இருக்கிறார்கள். இந்த நிலை விரைவாக மாற வேண்டும்.

**பெரியார் முஸ்லிம்களுக்கு எதிரானவர் என்றொரு சர்ச்சை கிளப்பப்பட்டது குறித்து தங்கள் கருத்து என்ன?**

இஸ்லாமியர்கள் பெரியாரை மிகவும் உயர்வாக மதிக்கிறார்கள். இஸ்லாமின் பல கருத்துகளைப் பெரியார் பிரச்சாரம் செய்திருக் கிறார். திருமண உறவு, ஒப்பந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என்ற இஸ்லாத்தின் கருத்தைப் பெரியார் வலியுறுத்தினார். திராவிட இயக்கம் பலப்படுவதற்கு இஸ்லாமியர்கள் பொருளாதார உதவி முதல் பல உதவிகளைச் செய்திருக்கிறார்கள்; தலித்துகள் அந்த இயக்கத் திற்குக் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். பெரியார் மீது குற்றம் சுமத்துவதற்கு எந்தவித நியாயமும் இல்லை. இது, என்னுடைய அழுத்தமான கருத்து. அவர் உள்ளும் புறமும் தெளிவாக இருந்தார். பெரியார் நிலப் பிரபுக் களுக்கு ஆதரவாக இருந்தார் என்று கம்யூனிஸ் டுகள்கூட, அவர் மீது ஒரு காலத்தில் குற்றம் சுமத்தினர். ஆனால், இது அவர்களின் அனுமானம்தானே தவிர, அப்படி எந்த நிலப் பிரபுவுக்கும் அவர் ஆதரவாக இருந்தார் என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை. பெரியார் கொள்கைகளை கம்யூனிஸ்டுகள்தான். பெருமளவில் பிரச்சாரம் செய்திருக்க வேண்டும். ஆனால், அதன் அவசியத்தை உணர்ந்து, அவர்கள் இன்று காலங்கடந்தாவது எடுத்திருக்கிறார்கள்.

**தலித் - இஸ்லாமியர் ஒற்றுமையை நீங்கள் வலியுறுத்துகின்றீர்களா?**

தலித்துகளிடம் நெருங்கி வருவதன் மூலம் மற்றவர்களின் கோபதாபங்களுக்கு ஆளாக வேண்டி வருமோ என்று முஸ்லிம்களிடையே ஒரு தவறான கருத்து நிலவுகிறது. தொழில் ரீதியாகவும், வியாபார நீதியாகவும் முஸ்லிம்கள் மற்ற சமூகத்தினரிடம்தான் அதிகளவு தொடர்பு வைத்திருக்கிறார்கள். களத்தில் அவர்கள் தலித்து களிடம் இணையாததற்கு இது ஒரு காரணம். ஆனால், இந்த உறவு பலப்படுத்தப்படவேண்டும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. தலித் - முஸ்லிம் கூட்டணியை எங்களைப் போன்றவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். தனியொரு சாதியோ, மதமோ ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. வாய்ப்புகள் மறுக்கப்பட்ட எல்லாரும் இணைந்துதான் அதைக் கைப்பற்ற முடியும். எனவே, இதை முஸ்லிம்கள் புரிந்து கொண்டு சில புதிய செயல்திட்டங்களை வகுக்க வில்லை எனில், நெருக்கடி நேரங்களில் அவர்கள்

தவிக்க வேண்டிவரும்.

**இஸ்லாத்திற்குச் சென்ற பிறகு தங்களின் தாய்ச் சமூகமான ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கு ஏதேனும் பணியாற்றி இருக்கிறீர்களா?**

1989 செப்டம்பர் மாதத்தில், தேனி மாவட்டக் கிராமங்களில் நடைபெற்ற கலவரத்தில், தலித் மக்கள் மீதான வன்கொடுமைகளைக் கண்டு நேரில் சென்று களப்பணியாற்றினேன். கண்டமனூர் கிராமத்தில் காவல் துறையால் சுட்டுக் கொல்லப்பட்ட தலித் இளைஞர்கள் குடும்பத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்தோம். வழக்குப் பதிவு செய்ய மறுத்த காவல் துறையை வழக்குப் பதிவு செய்ய வைத்தோம். அம்மா பட்டி கிராமத்தில், அருந்ததிய சமூகத் தோழர்கள் 3 பேர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். அங்கெல்லாம் மக்களைச் சந்தித்து தேவையான உத விகளை செய்திருக்கிறோம். கொடியங்குளம் கலவரத்தில் யாருமே ஊருக்குள் செல்ல முடியாதபோது - நான் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினேன்.

2004இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மதவெறி சக்திகளை வீழ்த்த முஸ்லிம் - தலித் ஒற்றுமையை வலியுறுத்தி, எஸ். நடராசன், ஏபி. வள்ளி நாயகம் ஆகியோருடன் இணைந்து சமூக விழிப்புணர்வு முகாம்களை நடத்தினோம். சுதந்திர இந்தியாவில் இஸ்லாமியர்களுக்காகவும், தலித்துகளுக்காகவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறேன்.


இப்பொழுது பரபரப்பான விற்பனையில்







நூலைப் பெற்றிட : 8148129887, 74012 13394



# ஸ்ரீரங்கம் வழக்கு :

# நவாப் நேரில் விசாரணை

**வணிகத்தின்** பொருட்டு மேற்குக் கடற்கரைக்குக் கி.பி.42ல் கொடுங்கலூர் முசிறிக்கு இஸ்லாமியர் வந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. சேர நாட்டிற்கு முதலில் வந்த இஸ்லாமியர் பின் பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் சென்றனர். காயல்பட்டினத்தில் கி.பி.ரா-லும், திருச்சியில் கி.பி.734-லும் இஸ்லாமியர் இருந்தமை தெளிவாக்கப்பட்டுள்ளது. சோனகர் பட்டினம்' எனப்பட்டது காயல்பட் டினம்

வணிகத்தின் பொருட்டு தமிழகம் வந்த அரே பியர் தமிழகத்தில் நிலையாகத் தங்கி வேறு பல நிர்வாகப் பணிகளையும் மேற்கொண்டனர். தமிழர் வாழ்வில் இஸ்லாமியர் இரண்டறக் கலந்து சிறப்பித்தனர். அறிவியலும், தத்துவங்களும் வளர்ச்சி பெறாத காலத்திலேயே, ஒருவரது மார்க்கத்தை அடுத்தவர் மதித்து அன்பொழுக வாழ்ந்துள்ளனர் நம் முன்னோர்கள். அதற்கான வரலாற்று ஆதாரங்கள் பலப்பல. இதோ, அவற்றில் சில.

**தஞ்சைக் கோயிலில் ஜாஃபர் ஏற்றிய திருவிளக்கு!**

முதலாம் இராசராசன் (985 - 1014) கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் (இசைக் கலைஞர்களான காந்தர்விகளுக்கும். தேவரடியாராகப் பணிபுரிந்த தனிச்சேரிப் பெண்டிர்களுக்கும் தலை மைப்பொறுப்பேற்று நாயகம் செய்யும்) உயர் அலு வலராக பணி ஏற்றவர் 'சோனகன் சாவூர் அக்காலத்தில் 'சோனகள்' என்ற சொல் இஸ்லாமியரையே குறித்தது. 'ஜாஃபர்' என்ற அரபுச் சொல்லின் தமிழ் வடிவமே சாவூர் அவர் இசை நாட்டிய நிபுணராக இருந்திருக்க வேண்டும்.

பிற உயர் அதிகாரிகள் போலவே நருவு பெருவுடையார் கோயிலுக்கு 32 காசுகள் அல்லது 96 ஆடுகள் கொடையாக வழங்கித் திருவிளக்கு வைக்க இவர் ஏற்பாடு செய்துள்ளார்.

இராசராசன் காலத்தில் தஞ்சைப் பெயார் கோயிலுக்கு அளிக்கப்பெற்ற பல்வேறு ணங்களில் 'சோனகச் சிடுக்கு' என்ற அணிக் ஒன்றாகும். சோனகன் சாவூருக்கு பாஞ்சோடு என்று பட்டம் அளிக்கப்பட்டது.

**குற்றால நாதருக்குத் திருவிழா எடுத்த இளமையில் :**

கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதி காசி அகமதுபேட்டையில் வாழ்ந்த இஸ்லாம் வணிகர்கள் பலர் செங்கோட்டை புளியறை, கடையநல்லூர், சிவராமப்பேட்டை சந்தை ஆகிய ஊர்களில் வணிகம் செய்து வந்தனர்.

அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இளமையில் அகமது ராவுத்தர் என்பார் தலைமையில் லாபத்தில் ஒரு பகுதியை வசூல் செய்து குற்றால நாதருக்குத் திருவிழாக் கொண்டாட கொடையளித்தனர். இதற்காக 6.1.1788-ல் ஒரு வெட்டித் தரப்பட்டது.

**திருமேனியைப் பிரதிஷ்டை செய்த நவாப் :**

*1688-ல் காஞ்சி அருளாளப் பெருமாள் என வழங்கப் பெறும் வரதராசப் பெருமாள் கோயில் வரதர் - தாயார் ஆகியோர் திருமேனிகள் பின் பொருட்டு உடையார்பாளையம் காட்டுக் கொண்டு சென்று மறைத்து வைக்கப்பட்டிருந்தர் காஞ்சிக் கோயிலில் பூசைகள் நடைபெற வில்லை, பக்தர்கள் ஏங்கினர்.*

*சீனிவாச அடியார் ஆன ஆத்தான் திருமேனி இராமானுஜ ஜீயர் வேண்டுகோள்படி நவாப் சாததுல்லாகான் 1710-ல் அந்த உருவச் சிலைகளை (திருமேனிகளை) மீண்டும் காஞ்சி பெருமாள் கோயிலில் கொண்டுவந்து வைக்க ஆணையிட்டார். அவரது சேனாதிபதி ராஜா ஸ்ரீ தோடர்மல்லர் நவாபின் உத்தரவை நிறைவேற்றினார். இந் நிகழ்ச்சியைக் வகையில் காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலில் ஆண்டுதோறும் 'உடையார்பாளையம் விழா நடைபெறுகிறது.*

**ஆண்டாளுக்குச் செப்புப் படிமம் செய்த கோயிலில் சூடிக்கொடுத்த நாச்சியார் (ஆண் பாதுஷா :)**

*(சோழிங்கர் பக்தவத்சலசுவாமி டாள்) செப்புப் படிமம் இல்லாமல் இருந்தது. 2.5.1716 புதன்கிழமை திருவோணத்தன்று புதிய செப்புப் படிமம் செய்யப்பட்டு கிரிப் பிரதட்ஷனம் ஆக (மலைச்சுற்று) எடுத்துச் செல்லப்பட்டது.*

*முகலாய மன்னர் (பாதுஷா) பரூக்ஷீயர் விருப்பத்தின்படியும் ஆனைப்படியும் வெங்காஜி பண்டிதர் என்ற அரசு அலுவலர் தவாதசி திருவேங்கட அய்யங்கார் மகள் திருவாலூர் அப்பய்யங்கார் மூலம் விழாவுக்கும். மலைச் சுற்று வரவும் ஏற்பாடு செய்தார்.*

**ஸ்ரீரங்கம் கோயிலில் நவாப் அளித்த தீர்ப்பு :**

*வைணவர்களால் கோயில் என்று சிறப் பித்துச் சொல்லப்படுவது ஸ்ரீரங்கம். சிறப்புமிகு ஸ்ரீரங்கத்தில் கந்தாடை அய்யங்கார் வர தாச்சாரியார் என்பவர் 1797-ல் ஆர்க்காடு மன்னர் அசரத் நவாப் சாயபுவிடம் 'பிராது' (புகார்) ஒன்றைக் கொடுத்தார். மதுரை நாயக்க மன்னர் சொக்கநாத நாயக்கர் காலத்தி லிருந்து (1659-1682) 10 தலைமுறை 120 ஆண்டுகள் தம் பரம்பரை உரிமையை, ரெங் காச்சாரியார் பரம்பரையினர் அனுபவித்து வருவதாகவும், அதைத் தமக்கு மீட்டுத் தரு மாறும் அதில் வேண்டிக் கொண்டிருந்தார்.*

*ஸ்ரீரங்கத்துக்கு நேரில் வந்து அவ்வழக்கை விசாரித்தார் நவாப் வழக்காளிகளையும் ஸ்ரீரங்கம் கோயில் தொடர்பான 12 பெருமக் களையும் அழைத்து விசாரித்தார்.*

*மக்கள் நீதிமன்றம் போல வழக்கு விசா ரணை நடைபெற்று நவாப் இறுதியில் தீர்ப்ப ளித்தார். அத்தீர்ப்பு முகத்திதிகள், தலத்தார். வழக்காளிகள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் படியாக இருந்தது.*

*வழக்காளிகள் இருவரும் தீர்த்தம், மரி யாதை, அனுபவ உரிமைகளில் பேர் பாதி யாக் (ஆளுக்கு 15 நாட்கள்) அனுபவிக்க ஆணை யிட்டார். தீர்ப்பை மீறுவோர் கோயில் உரிமையை இழந்து சர்க்காரின் தண்டனைக் கும் உட்படுவார்கள் என்று எச்சரித்தார் நவாப்.*

*திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் இன்னும் வழிபாட்டில் உள்ள உமாமகேசு வரர் படிமத்தைச் செய்தளித்தவர் அன்வருதீன் என்பவர் ஆவார்.*

**சங்கர மடம் முன் தம்பட்டம் வேண்டாம் :**

*கும்பகோணம் சங்கர மடம் வழியாக மேலக்காவேரி இஸ்லாமியர்கள் மொகரம் பண்டிகையின்போது தம்பட்ட வாத்தியம் வாசித்துக் கொண்டு ஊர்வலமாகச் செல்வர்.*

*1862 செப்டம்பர் 6-ஆம் தேதி இஸ்லாமியப் பெருமக் கள் சங்கரர் திருமடத்தின் தெற்கிலும், வடக்கிலும் ஐம்பது கஜ தூரம் வாத்தியம் வாசிக்காமலும், யாதொரு சப் தம் இல்லாமலும் ஊர்வலம் செல்ல முடிவு செய்தனர். இரு புறமும் அதற்காக எல்லைக் கற்களும் நடப்பட்டன.*

**கோயிலுக்குப்படி அமைத்த சாததுல்லாகான் :**

*விழுப்புரம் அருகில் உள்ள பனமலை தாலபுரீ சுவரர் கோயிலில் மண்டபம், படிகள் ஆகியவை 1674-ல் கட்டி முடிக்கப்பட்டது. அதைக் கட்ட ஏற்பாடு செய்தவர் நவாப் சாத துல்லாகான் ஆவார். அவர் மகா மண்டலீசுவ ரன், ராசாதிராசன், ராசபரமேசுவரன் என்று புகழப்படுகிறார்.*


vaigarai velicham official

**இலுப்பூர்க் கோயிலுக்கு சுல்தான் பணம் :**

திருச்சி மாவட்டத்தில் தேவும் திருவும் உடையார் கோயில் என்ற பெருமா தான்' (மதுரை சுல்தான்) ஆட்சியில் தச்சன் கோயில் உள்ளது. ஹிஜ்ரி 745-ல் ஆதிகாரக வயல் என்ற ஊர் 'வாளால் வழிதிறந்தான் ஏலம் விடப் பட்டது. அதை ஏலத்திற்கு எடுத்து தவர் அன்னவாசல் கூற்றத்தைச் சேர்ந்த இருக்மணி உடையான் பெரியவன் வழுவா தராயர் என்பவர். அப்பணம் 80ம் கோயிலுக்கு அளிக்கப்பட்டது.

**சிங்கிகுளம் கால்வாய்!**

திருநெல்வேலி மாவட்டம் சிங்கிகுளம் கைலாசநாதர் கோயில் அருகேயுள்ள வழுக்குப் பாறையில் 1721-ல் வெட்டப்பட்ட ஒரு கல்வெட்டு உள்ளது. மீரேகான் பட்டாயித்து மகனும், கான் அஜம்ஸா மகமதுகான் பட்டா யித்து தம்பியுமான அகமதுகான் இமான்கான் பட்டாயித்து நன்மைக்காக ஆற்றிலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டது என்ற செய்தி அதில் உள்ளது. அவ்வாய்க்கால் கோயில் நிலங்களுக்கும் மற்ற நிலங்களுக்கும் பாசனத்திற்கும் பயன்படுத்தப்பட்டது.

**கோயில் விளக்கேற்றிய குப்ளேகான்!**

கூவலூர் அகஸ்தீசுவரர் கோயிலுக்கு விளக்கெரிக்க இலுப்பைத் தோப்பு வழங்க ஊரார் விரும்பினர் (1728). அவ்வூர் முழுவதையும் ஆர்காட்டு நவாபிடமிருந்து குத்தகைக்கு எடுத்திருந்தவர் அசரத் குப்ளேகான் சாயிபு. அவர் அளித்த நிலத்தில் இலுப்பைத் தோப்பு ஏற்படுத்தி அக்கோயிலுக்கு விளக்கு எரிக்க ஊரார் கொடையாக அளித்தனர்.

**அய்யங்கார்களுக்கு கிணறு வெட்டித் தந்த முசாமியார்:**

பல்லாவரத்தின் பழம்பெயர் 'பல்லவர் புரமான வானவன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம்' என்பதாகும். அங்கு வேதங்கள் கற்றறிந்த அய்யங்கார்கள் வாழும் அக்ரஹாரத்திற்கு அவுபளம்ம சமுத்திரம் என்று பெயர். அந்த அக்ரஹாரத்தில் அய்யங்கார்கள் உபயோகத் துக்காக குடிநீர்க் கிணறு வெட்டித் தந்தார் ஷேக் அலாவுதீனின் மகன் ஷேக் முசாமியார்.



கிணறு வெட்டிய இடத்தையும், நாற்புறமும் 20 அடி நிலத்தையும் அங்கு வாழும் அய்யங் கார்களிடமே ஷேக் முசாமியார் விலைக்குப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்க செய்தி கிணற்றின் அருகில் உள்ள குத்துக்கல்லில் இவ்விபரம் எழுதப்பட்டுள்ளது.

**மதகு வெட்டித் தந்த மரைக்காயன் :**

இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி யில் உள்ள குளம் கைக்களான் குளம் அதன் பழம்பெயர் காளிகணத்தான் குளம் அக்குளத் திற்கு மருது சகோதரர்கள் காலத்தில் நீர் வரும். மதகு ஒன்றை அமைத்துத் தந்தவர் அபூப் சகா மரைக்காயர் என்பவர். மதகின் இருபுறமும் இரண்டு இடங்களில் கல்வெட்டுக்கள் உள்ளன.

**கொங்கணேசுவரருக்குக் கொடை தந்த முஸ்லிம்கள் :**

தஞ்சை மராட்டிய மன்னன் இரண்டாம் ஏலோஜி காலத்தில் தஞ்சைக் கவலரம் மேற்கு வீதியில் உள்ள கொங்கணேசுவரர் கோயிலுக்கு 6.12,1735இல் பாசிக்கடை மீராசாகிபுரம், 9.6,1756 பாசிப்பேட்டை, ராவுத்தன் அரசாங் கண்டு ராவுத்தர் சின்னபிள்ளை ராவுத்தன் மற்றும் இஸ்லாத்தை வணிகர்களும் மகமைக் கொடை அளித்துள்ளனர். இரண்டு செப்பேடுகள் இதை அறிவிக்கின்றன.

**காசியில் மடம் கட்ட உதவிய ராவுத்தர்கள் :**

கோயம்புத்தூரைச் சேர்ந்த சங்கரையுன் என்பாரின் மனைவி லிங்கம்மாள் காசியில் 1765ஆம் ஆண்டு மடம் ஒன்றைக் கட்டி அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்தார் வேட சந்தூர் இராவுத்தம்மார் என்னும் இஸ்லாமிய வணிகள்கள் பலர் அதற்குக் கொடையளித்தனர்.

# வேளாளர் குல தெய்வம் ராவுத்தர்

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சமய நல்லிணக்கத்துக்குச் சாட்ட மாகத் திகழ்ந்துள்ளது. தமிழ் நிலம் முஸ்லிம்கள் மீது பெருமதிய கொண்டு, பள்ளிவாசல்களுக்குப் பல்வேறு நன்கொடைகளைப் பிற மதத்தவர் அளித்துள்ள னர். இஸ்லாம் மீது அவர்கள் கொண்டிருந்த பாசம், பற்ற அன்பைப் பல வரலாற்று ஆவணங்கள் பறை சாற்றுகின்றன. காலத்தால் அழியாத சாட்சியங்கள் இதோ:

பள்ளிவாசலுக்குப் பதினான்காயிரம் பொன்: மதுரை மாநகரில் வைகையாற் றின் வடபுறம் கோரிபாளையம் உள்ளது. "கோர்" என்ற உருதுச் சொல்லின் பொருள் கல்லறையின் கூடு என் பது இஸ்லாமியர் அடக்கத் தலங்க ளைக் கோரி என்பர். மதுரையில் ஒருகோல் சுல்தான் பள்ளிவாசல் உள்ள இடமே இப்போதைய கோரிப்பாளையம்

இக்கோரிப்பாளையம் பள்ளிவாசலுக்கு மன்னன் கூன்பாண்டியன் பதினான்காயிரம் பொன் கொடுத் துச் சோனிகுடி, சொக்கிகுளம், பீவி குளம், கண்ணானேம்பல், சிறுத் தூர், திருப்பாலை ஆகிய ஆறு ஊர் களை விலைக்கு வாங்கிக் கொடை யாக அளித்தான்.

**சிவமயத்துடன் 6 ஊர் தானம் :** கோரி பாளையம் பள்ளிவாசலுக்குக் கூன்பாண்டியன் தானமளித்த ஊர்கள் பற்றிப் பிற்காலத்தில் அரசு அதிகாரிகளுக்கும் பள்ளிவாசல் நிர்வாகி களுக்கும் சர்ச்சை மூண்டது. அதைவி ரித்த மதுரை நாயக்க அரசன் விட்ட நாயக்கர் (1572-1595), மீண்டும் ஆறு ஊர்களையும் பள்ளிவாசலுக்கு அளிக்க உத்தரவிட்டான். இச்சேப்ர் யைக் குறிக்கும் கல்வெட்டு பன்னிவா சலில் உள்ளது. அதன் முதல் வாசலம் 'சிவமயம்' என்பது.

மார்த்தாண்டன் பெயரில் மசூதி நான்காம் நூற்றாண்டின் இறுதியில் திருச்செந்தூர் யாத்திரை சென்றார் கேரள நாட்டு மன்னன் உதைய மார் தாண்டவர்மன் காயலில் இருந்து திருக் செந்தூர் செல்லும் வழியில் வீரபான். யன் பட்டணத்தில் காட்டு மக்தூம் பசி எனப்படும் பெரிய பள்ளிவாசல் இயந்த சிதைந்திருப்பதைக் கண்டான். அரை- புதிதாகக் கட்டி அதற்கு 'உதைய மார் தாண்டப் பெரும்பள்ளி" என்று பெயரிட்டான்.

அங்கு தொழுகை நடத்தும் நாயக்கரின் காரியத்துக்குக் கர்த்தரான 'மதாறு ராவுத்தர், நாவூர் மீரா ராவத் தர்' ஆகியோர் ஆவர்.

**மராட்டியர் நலனுக்கு - பாதியா :** மராட்டியர் காலத்தில் படைக்காகவும். யூனானி மருத்துவத் தின் பொருட்டும், வணிகத்திற்காகவும் இஸ்லா மியர் பலர் தஞ்சைப் பகுதியில் குடியேறினர்.

அவர்களின் வழிபாட்டுக்காக 42 பள்ளி வாசல்கள் கட்டப்பட்டன. அவற்றைத் தஞ்சை மராட்டிய மன்னர்கள் நன்கு பராமரித்து வந்தனர். இன்றும் தஞ்சை வடக்கு அலங்கம் படே உசேன் தர்கா போன்றவை மராட்டிய மரபு இளைய இளவரசர் பரம்பரையினர் பராமரிப் பில் உள்ளது.

நாகூர் அசரத் குவாதிர் தர்காவின் முன்னர் உள்ள பதினொரு நிலைக் கோபுரம் (மினார்) கட்டுவதற்குத் தஞ்சை மராட்டிய மன்னர் துளசா நிலம் கொடையாக அளித்தார். மன் னர் பிரதாபசிங் 20.1.1755-ல் அந்தக் கோபுரத்தைக் கட்டி முடித்தார். இதைக் குறிக்கும் தமிழ், மராத்தி, பாரசீகம் ஆகிய மும்மொழிக் கல்வெட்டு அங்கு பொறிக்கப்பட்டுள்ளது. அக்கா லத்தில் மராட்டிய அரசின் சர்கேல்

ஆக அசரத் மீரா சாகிப், மத்தியஸ்தராக ஷேக் அப்துல் மாலிக் பணி புரிந்துள்ளனர்.

இன்றும் நாகூர் கந்தூரியின் போது தஞ்சை மராட்டிய மன் னர் அரண்மனையில் இருந்து சந்தனம். பட்டு வஸ்திரம் (சதாரா) ஆகியவை நாகூருக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. தர்காவில் மரியாதையுடன் அவற்றை வரவேற்று அரச குடும்பத்தினர் நலனுக்காக பாதியா ஓதுகின்றனர். ஈரோடு மாவட்டம், கொளா நல்லியில் திருவரங்கம் போல துலுக்க நாச்சியம்மனுக்குத் தனிக் கோயில் உள்ளது.

**கொங்கு வேளாளர் குல தெய்வம் ராவுத்தர்:** ஈரோடு வட்டம் காகம் என்ற ஊரிலும், பெருந்துறை வட்டம் காஞ்சிக் கோயிலிலும் வாழும் கொங்கு வேளாளர்களில் கண்ண குலத்தாரின் குல தெய்வத்திற்குப் பெயர் ராவுத்தர் சாமி. ராவுத்தர் என்பது அரேபியக் குதிரை வணிகர்கட்குப் பெயர் ராவுத்தர் சுவாமியை அவர்கள் 'டில்லி பட்டா ணித் துலுக்கர்' என்று கூறுகின்றனர்.

காங்கயம் வட்டம் காடையூரில் பொரு ளந்தை குலக் காங்கேயன் மனைவி வெள்ளையம்மாள் வழிவந்தவர்கள் தங்களுக்குக் காணியுரிமை பெற்றுக் கொடுத்த இஸ்லாமிய சர்தாருக்கு நன்றிக்கடன் காட்ட குழந்தை கட்குக் குறிப்பிட்ட காலம் காது குத்தாமலும், பிறை தொழுதும் வாழ்கின்றனர்.

**பட்டக்காரர் முடிசூட குடை பிடிக்கும் சாஹிப் :** பழையகோட்டைப் பட்டக்காரர்கள் முடிசூட்டு விழாவில் பட்டத்துக் குடை பிடிக்கும் உரிமை இன்றும் கமால்சாகிப் குடும்பத்தினருக்கு உரியது.


vaigarai velicham official

# வஃக்பு சொத்துக்களை கைப்பற்ற முயலும் பா.ஜ.க-வின் சதி

**இந்திய** நாடளுமன்றத்தில் கடந்த 8.8.2024-ம் தேதி வியாழக்கிழமை பா.ஜ.க- வின் நாடாளுமன்ற விவகார துறை அமைச்சரான கிரண் KTp அவர்கள் தாக்கல் செய்த வஃக்பு திருத்த மசோதா - 2024, இந்திய இஸ்லாமியர் களிடமும், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் மத நல்லினக்கத்தின் மீது ஆர்வம் கொண்ட மக்களிடம் பெரும் அதிர்ச்சியும், வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

வஃக்பு திருத்தம் மசோதா 2024ல் சுமார் 40 திருத்தங்களை கொண்டுவந்துள்ளனர். அதில் குறிப்பிட்டு சொல்லும் படியாக வஃக்பு வாரியத்தின் அதிகாரத்தை பறித்து மாவட்ட ஆட்சியரிடம் தரும் செயல், வஃக்பு வாரியத்தில் முஸ்லிம் அல்லாத மற்றவர்கள் உறுப்பினர் களாக நியமித்தல், வஃக்பு சொத்தை ஆக்கிர மிப்பில் வைத்துள்ளவர்களின் மீது 2 ஆண்டு சிறை தண்டனை என்பதை நீக்குதல், வஃக்பு வாரியத்துக்கான மானியத்தை 7 விழுக்காடு விலிருந்து 5 விழுக்காடாக குறைத்தல், சிறுபான்மை எதிர்ப்பு, வஃக்பு செய்ய அளவுகொள் நிர்ணயித்தல் மற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள மத வழிபாட்டு தளங்களை பாதுகாத்தல் என்பன போன்றதை நீக்கியுள்ளது. அமைச்சர் கிரண் KTp நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த வஃக்பு திருத்தம் மசோதா 2024-யை நாடாளு மன்றத்தில் எதிர்கட்சிகள் கடுமையாக எதிர்த் ததின் விளைவாக வஃக்பு திருத்த மசோத-2024, நாடாளுமன்ற கூட்டுக் குழுவிக்கு அனுப்பப் பட்டுள்ளது. (கூட்டுக் குழுவிலும் கூட முஸ்லிம் லீக்கிலிருந்து ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது) அமைக்கப்பட்ட கூட்டுக் குழுவானது வஃக்பு சட்டதிருத்த மசோதாவை ஆராய்ந்து அடுத்து வரும் நாடாளு மன்ற கூட்டத்தொடரின் முதல் வாரத்தின் இறுதிநாளில் தன் அறிக்கையை சமர்ப்பிக்க கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

**வஃக்பு சொத்து**

இறைப் பணிக்காகவும், ஏழை - எளிய முஸ்லிம் மக்களின் நலனுக்காகவும் முஸ்லிம் மன்னர்களும், செல்வந்தர்களும் பல சொத்துக் களைத் தானமாகக் கொடுத்து, அந்த சொத்து களை பராமரித்து, அதில் இருந்து கிடைக்கும் வருவாயை நிர்வகித்து, அதை கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் அறங்காவலர்கள் முத்தவல்லிகள் என அழைப்பார்கள்.

**வஃக்பு வாரியம்**

இந்தியாவில் சுமார் 8,40,000 வஃக்புகளும், சுமார் 9,40,000. ஏக்கர் அளவில் வஃக்புக்கு சொந்தமாக இடங்கள் உள்ளது. அனைத்தையும் முறைப்படுத்தி இந்திய அரசாங்கத்தின் நேரடிமேற்பார்வையில் செயல்படும் ஒரு அமைப்பே வஃக்பு வாரியம் ஆகும்.

இந்திய சுதந்திரம் அடைந்த பின் இஸ்லாமி யர்களின் வஃக்பு சொத்துகளை (பள்ளிவாசல், மதர்ஸா, தர்காஸ், அனாதை இல்லங்கள், கபர்ஸ்தான், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்) என பராமரிப்பதற்காகவும், சொத்துகளை ஒழுங்கு படுத்துவதற்காகவும் 1954-ல் வஃக்பு வாரியம் உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் 1958 ஆண்டு இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வஃக்பு வாரியம் அமைக்கப்பட்டது, அதன் தொடர்ச்சியாக 2004ல் வஃக்பு வாரியத்தின் நடவடிக்கையில் மாற்றம் கொண்டுவர வேண்டி நடாளுமன்றத்தால் ரஹ்மான்கான் MP., அவர்களின் தலைமையில் கூட்டுக் குழு அமைக்கப்பட்டு, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்துக்கும் சென்று வஃக்பு சொத்துகளை ஆராய்ந்தது, கூட்டுக் குழு இடம் பெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக்-ன் காதர் மொய்தீன் MP





அவர்களின் பெரும் முயற்சியால் இஸ்லாமிய சமூக அறிஞர்கள் தலைவர்கள், மக்கள் மற்றும் வஃக்பு வாரிய தலைவர்கள், உறுப்பினர்கள் என அனைத்து தரப்பினருடனும் கலந்து ஆலோசித்து, வஃக்பு சொத்தை பாதுகாக்க எந்த எந்த சட்ட வகைகள் அமைப்பது என்று ஒரு முழுமையான பரிந்துரையை நடாளுமன்றத்தில் ரஹ்மான்கான் MP., அவர்களின் தலைமையில் கூட்டுக் குழு, சமர்ப்பித்தது அதற்கு பின்னர் நீதியரசர் ராஜேந்தர் சர்ச்சாரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நீதியரசர் ராஜேந்தர் சர்ச் சாரின் அறிக்கையில் கணிசமான பகுதிகளில் இந்தியா முழுக்க உள்ள வஃக்பு சொத்துகள் எங்கு எல்லாம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது,

அந்த சொத்துகளை மீட்டு எடுக்கவும், ஆக்கிரமிப்புகளை தடுக்கவும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டு, அதன் அடிப்படையில், நாடாளுமன்றத்தால் மீண்டும் ரஹ்மான்கான் MP., அவர்களின் தலைமையில் கூட்டுக் குழு அமைத்து அதன் அடிப்படையில் கடந்த 2013-ம் ஆண்டு நாடாளுமன்றத்தால் வஃக்பு வாரிய சட்டம் -2013 அமல்படுத்தப்பட்டது.

மேலும் வஃக்பு வாரிய சட்டம் -2013-ல் வஃக்பு சொத்துகளை பாதுகாக்க அனைத்து வகையான கடுமையான பிரிவுகள் இருக்கிறது, அதில் பிரிவு 52கி- வஃக்பு சொத்துகளை சட்டத்துக்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்தவர் களுக்கு 2 ஆண்டு சிறை தண்டணை என்று இருப்பதை, வஃக்பு திருந்த மசோதா-2024-ல் பா.ஜ.க அரசு நீக்கியுள்ளது.

மேலும் பிரிவு 40-தின்படி வஃக்பு வாரிய அதிகாரத்தை பிடுங்கி மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்துள்ளது. வஃக்பு வாரிய சொத்து சம்பந்தமாக வாரியம் பிரிவு 40-ன் கீழ் எதேனும் தவறாக தீர்ப்பளித்தால் அந்த தீர்ப்பை மேல் முறையீட்டுக்கு தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரை எடுத்து செல்லலாம் என்று இருக்கும் நேரத்தில் அதை நீக்கி அதிகாரத்தை பிடுங்கி மாவட்ட ஆட்சியரிடம் கொடுப்பதின் அவசியம் என்ன?

மேலும் வஃக்பு வாரியத்தில் முஸ்லிம் அல்லாத மற்றவர்கள் உறுப்பினர்களாக நியமித்தல், வஃக்பு வாரியத்துக்கான மானியத்தை 7- விழுக்காடுவிலிருந்து 5 விழுக் காடாக குறைத்தல், சிறுபான்மை எதிர்ப்பு, வஃக்பு செய்ய அளவுகொள் நிர்ணயித்தல் மற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள மத வழிபாட்டு தளங்களை பாதுகாத்தல் என்பன போன்றதை நீக்கி வஃக்பு வாரியத்தை வெறும் அழங்கார அமைப்பாக வைக்கவே பா.ஜ.க அரசு திட்டம் தீட்டி யுள்ளதை புதிய வஃக்பு மசோதா காட்டுகிறது.

முஸ்லிம் பெண்கள் மீது அக்கறை உள்ளது போல் வேடம் போடும் பா.ஜ.க அரசு, பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் முஸ்லிம் பெண்களுக்கு என்ன செய்துள்ளது என்று இந்திய மக்களுக்கு நன்கு தெரியும். வஃக்பு சட்டம்-2013 சட்டத் திலேயே பெண்கள் வாரியத்தில் உறுப்பினராக இருக்க அனைத்து வழிவகையும் செய்துள்ளது. அதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டில் ஆசியா மர்யம் IAS, மற்றும் பாத்திமா முஸப்பர் ஆகிய இரண்டு பெண்கள் தமிழ்நாடு வஃக்பு வாரிய உறுப்பினராக இருக்கிறார்கள். பா.ஜ.க அரசுக்கு வஃக்பு வாரியத்தின் மீதும், வஃக்பு வாரிய சொத்துகளின் மீதும் உண்மை யான அக்கறை இருந்தால வஃக்பு சட்டம் 2013 படி வஃக்பு வாரியத்துக்கான மானியத்தை 7-விழுக்காடுளிலிருந்து உயர்த்தியிருப்பார்கள்.

ஆனால் 5 விழுக்காடாக குறைத்தும், மேலும் அதைபோல் முஸ்லிம் மாணவர்களுக்கு என்று pre matric, post-matric என்று காங்கிரஸ் அரசு கொண்டுவந்த மாணவர் உதவிதொகையை பா.ஜ.க அரசு முற்றிலும் நிறுத்தி முஸ்லிம் மக்கள் மீது உள்ள பா.ஜ.க. அரசின் அக்கறையை வெட்ட வெளிச்சமிட்டுள்ளனர்.

வெளிப்படுதன்மையற்ற பா.ஜ.க அரசு, மக்கள் அரசின் வெளிப்படுதன்மையைப்பற்றி தெரிந்து கொள்ளவேண்டி ஐக்கிய முற்போக்கு கூட்டனி கொண்டுவந்த தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005ஐ நீர்த்து போக வைத்துக் கொண்டுயிருப்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள், வெளிப்படுதன்மையை பற்றி பேச பா.ஜ.க அரசுக்கு எந்தவித உரிமையும் இல்லை.



vaigarai velicham official

## வஃக்பு சொத்தை விற்பதே பா.ஜ.க-வின் திட்டம்

இந்திய திருநாட்டின் சொத்துகளான பாதுகாப்புதுறை, ரயில்வேதுறை, நசுல் நிலம் (காலனித்துவ பிரிட்டிஷ் அரசிடமிருந்து பெறப்பட்ட நிலம்) போன்ற நிலங்களை பா.ஜ.க-வின் அரசு விற்றதும் அதுபோல தற்போது வஃக்பு சொத்துகளையும் விற்ப தற்கே இந்த புதிய வஃக்பு திருத்த மசோதா-2024. இதற்கு எடுத்துக்காட்டாக அம்பானியின் அட்டியால வீடு இருக்கும் இடம் மும்பை வஃக்பு வாரியத்துக்கு சொந்தம் ஆனால் 2002 -ல் மும்பை வஃக்பு வாரியம் சட்டத்துக்கு புறம்பாக அதை விற்ற வழக்கே, சிறந்த உதாரணம் மேலும் புதிய வஃக்பு திருத்த மசோதா -2024 சட்டமாக வந்தால் நாட்டில் உள்ள வஃக்பு வாரிய சொத்துகள் விற்கப்படும்,

மேலும் நாட்டின் பழமையான வஃக்பு சொத்துகளான பள்ளிவாசல்கள், நினைவு சின்னங்கள், கட்டிடங்கள், தர்காக்கள் அனைத்தும் விற்கப்படும்.


மேலும் இந்த புதிய வஃக்பு திருத்த மசோதா-2024-ல் கூட வஃக்பு சொத்துகள் விற்கப்படாது என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.

நாடாளுமன்றத்தில் புதிய வஃக்பு திருத்த மசோதா-2024-யை எதிர்த்து பேசுகையில் சமாஜ்வாடி கட்சித் தலைவரும். நாடாளுமன்ற உறுப்பிணருமான அகிலேஷ் யாதவ் அவர்கள் கூட, வஃக்பு திருத்த மசோதா -2024 என்பது அரசு நிலங்ககளை பா.ஜ.க-வின் அரசின் நலனுக்காக விற்றதின் சங்குலித் தொடரே இந்த அரசின் புதிய வஃக்பு திருத்த மசோதா-2024 என காட்டமாக விமர்சித்திருந்தார்.

மேலும் அவர் குறிப்பிடிகையில் பா.ஜ.க தொடர்ந்து நாட்டில் ரியல் எஸ்டேட் நிறுவனம் போல் செயல்படுகிறது. ஜனதா என்பதற்கு பதிலாக "ஜமீன்" என்று சேர்த்து அதன் பெயரை பாரதிய ஜமீன் கட்சி என மாற்ற வேண்டும் என விமர்சித்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் புதிய வஃக்பு திருத்த மசோதா-2024ஐ எதிர்த்து பேசுகையில் காங்கிரஸ் MP, கே.சி. வேணுகோபால் கூட இது ஒரு கொடூரமான சட்டம். அரசியலமைப்பின் மீதான அடிப்படைத் தாக்குதல், மதச் சுதந்தி ரத்தை அரசு மீறுகிறது. அதன்மூலம் கூட்டாட்சி அமைப்பைத் தாக்குகிறது.

அயோத்தி கோவில் வாரியம் ஒன்றை



அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது, அந்த வாரியத்தில் இந்துக்கள் அல்லாதவரை சேர்க்க பா.ஜ.க அரசால் முடியுமா என்றும் அதே போல் குருவாயூர் தேவஸ்தானத்தில் இந்து அல்லாதவர்கள் சேர பா.ஜ.க அரசு நடவடிக்கை எடுக்குமா? என்றும் இஸ்லாமியர்கள் அல்லாத வரும் வஃக்பு கவுன்சிலில் சேர்க்கப்படலாம் என்ற சட்டத் திருத்தம், மத நம்பிக்கையின் மீதும், சுதந்திரத்தின்மீதும் நேரடி தாக்குதல் என்றும் விமர்சித்திருந்தார்.

அதைபோல் திரிணாமுல் காங்கிரஸின் எம்.பி. சுதீப் பந்தோபாத்யாய்-இந்த மசோதா பிரித்தாளும் திட்டத்தின் ஒரு பகுதி, அரசிய லமைப்பு மற்றும் கூட்டாட்சிக்கு எதிரானது என விமர்சித்திருந்தார்.

திமுக எம்.பி கனிமொழி - இந்து, கிறிஸ்துவர் களுக்கான அமைப்பில் பிற மதத்தவர் நுழைய முடியுமா, அதைபோல் இஸ்லாமியர்கள் அல்லாதவரும் வஃக்பு கவுன்சிலில் சேர்க்கப் படலாம் என்ற சட்டத் திருத்தம், மத நம்பிக்கைக்கும், அரசியலமைப்புக்கும் சட்டத் துக்கும் எதிரானது என்று விமர்சித்திருந்தார். என அனைத்து எதிர்கட்சியின் எதிர்ப்பு காரணமாக புதிய வஃக்பு மசோதா-2024, நாடாளுமன்ற கூட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அமைக்கப்பட்ட கூட்டுக் குழுவானது வஃக்பு சட்டதிருத்த மசோதாவை ஆராய்ந்து அடுத்து வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரின் முதல் வாரத்தின் இறுதிநாளில் தன் அறிக்கையை சமர்ப்பிக்க கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூட்டுக்குளுவின் மொத்தம் 31 உறுப்பினர்களில் பா.ஜ.க 11. அதன் கூட்டணிகள் 5 என 16 எம் பிக்கள் உள்ளனர். நியமன எம்பிக்கள் 2 என அரசுக்கு ஆதரவாக மொத்தம் 18 உறுப்பினர்களும், எதிர்கட்சிக்கு 14 உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால், முக்கிய பழம்பெரும் முஸ்லிம் கட்சியும், இஸ்லாமியர்களுக்கு சரியத் சட்டத்தை பெற்று தந்த கட்சியுமான மக்களவையில் 2, மாநிலங்களவையில் 2 எம்.பிகள் கொண்ட ஐ.யூ.எம்.எல் (இந்திய யூனியன் முஸ்லிம் லீக்) கட்சியிலிருந்து ஒருவர் கூட சேர்க்கப்படவில்லை. யாரை திருப்திபடுத்த இந்த கூட்டுக் குழு என்றே நினைக்க தோன்றுகிறது.

வஃக்பு சட்டம் 2013 உருவாக்கப்பட்ட முக்கிய காரணமாக இருந்தவர்களில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்-ன் தற்போதைய தேசிய தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் Ex.MP என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கூட்டுக் குழுவின் புதிய வஃக்பு திருத்த மசோதா-2023 நிலுவையில் இருக்கும் சமயத்தில் தமிழ்நாடு வஃக்பு வாரிய தலைவர் அப்துல் ரகுமான் Ex.MP ராஜினாமா செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மக்களை பிளவுபடுத்தி அதில் அரசியம் லாபம் அடைய நினைக்கும் பா.ஜ.க-வுக்கு மக்கள் 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாடம் புகட்டியும், பா.ஜ.க திருந்தவில்லை, ஏக இறைவனின் சொத்தில் கை வைப்பவர்களை இறைவன் நிச்சயம் தண்டிப்பான்.

நாம், இந்த வஃக்பு திருத்த மசோதா 2024-ஐ தொடர் பிரச்சாரம், மொஹல்லா ஜமாஅத் களின் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு கூட்டங்கள் மூலமாக மத்திய, மாநில அரசு களுக்கு அழுத்தம் கொடுப்பதில் வாயிலாக இந்த புதிய வஃக்பு திருத்த மசோதா-2024-வின் மூலம் பாஜக-வின் முஸ்லிம் விரோத போக்கினை நாம் முறியடிக்க முடியும். இறுதியாக வஃக்பு திருத்த மசோதா-2024 -ல் உள்ள ஆபத்துகளை குறித்து ஒவ்வொரு மொஹல்லா ஜமாஅத்களும் தனது முதல் முயற்சியை எடுத்து வைக்க வேண்டும் என்றே இறைவனை நான் பிரார்த்திக்கிறேன்...

**A. அஹமது,** BBM.,BL., வழக்கறிஞர்
மேட்டுப்பாளையம், கோவை
*9566728134*

# நாகை, திருவாரூர் கிளை சார்பாக நாகை மாவட்டத்தில் தாஃவா






அல்லாஹ்வின் கிருபையால் இன்று தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் நாகை, திருவாரூர் கிளை சார்பாக நாகை மாவட்டம், ஒரத்தூர் அரசு மருத்துவமனை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வாழ்வின் நோக்கம் நோட்டீஸ் மூலம் இஸ்லாம் குறித்து அறிமுகம் செய்யப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்


vaigarai velicham official

# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

தொடர்...



ஜூலை மாத தொடர்ச்சி....

### பாலஸ்தீன் - பைத்துல் முகத்திஸ் இந்திய முஸ்லிம்களின் பங்கும் போராட்டங்களும்!

**ரமழான்** மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமை பைத்துல் முகத்திஸ் நாள். அல்குத்ஸ் தினம் என உலக முஸ்லிம்கள் அறிவித் துள்ளனர்.

வருடந்தோறும் இறுதி வெள்ளிக்கிழமை யில், பைத்துல் முகத்திஸ் என்ற நமது முதல் கிப்லாவின் மீட்பு, பாலஸ்தீனில் வாழும் முஸ்லிம்களின் அவலம், பாலஸ்தீனிலிருந்து விரட்டப்பட்டு உலகின் இதரப் பகுதிகளில் வாழ்ந்திடும் முஸ்லிம்களின் கையறு நிலை, இவற்றின் பக்கம் உலக மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றார்கள், இஸ்லாமிய இயக்கத் தவர்கள். தாருல் இஸ்லாம் - தமிழ்நாடு இதனை இடையறாது செய்து வருகின்றது.

பைத்துல் முகத்திஸ் விவகாரத்திலும், பாலஸ்தீன் முஸ்லிம்களின் விவகாரத்திலும் இந்திய முஸ்லிம்களின் தொடக்க நாள் தொட்டே அதிகக் கவனம் செலுத்தி வருகின் றார்கள். அதன் வரலாற்றை இளைய தலை முறை அவசியம் தெரிந்தாக வேண்டும்.

வைகறை வெளிச்சம் ஆகஸ்ட் 2009 இதழில் விடுதலைப் போரில் ஃபத்வாக்களின் பங்கு என்ற தலைப்பில் அட்டைப்பட கட்டுரை ஒன்றை இடம்பெறச் செய்திருந்தோம். அதில் இந்திய முஸ்லிம்கள் இந்தியாவின் விடுதலைக்காகத் தங்கள் உயிர்களையும் பொருள்களையும் தியாகம் செய்து கொண்டி ருக்கும் போதே உலக முஸ்லிம்களின் விவகாரத் திலும் நிறைவாக கவனம் செலுத்தி வந்தார்கள் என்பதை குறிப்பிட்டிருந்தோம்.

அதே போல்தான் இந்திய முஸ்லிம்கள் இந்தியாவின் விடுதலைப் போரில் தங்களை

முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்த அதே வேளையில் பாலஸ்தீன், பைத்துல் முகத்திஸ் ஆகியவற்றிலும் நிறைவாகக் கவனம் செலுத்தியுள்ளார்கள்.

ஆழமாகக் கவனம் செலுத்தி உள்ளார்கள். நிகரற்ற ஈடுபாட்டைக் காட்டி இருக்கின்றார்கள்.

**ஜெரூசலத்தில் இந்திய முஸ்லிம்களின் மாளிகை!**

இந்திய முஸ்லிம்களுக்கென ஒரு ஜாவியா, விருந்தினர் மாளிகை ஒன்று பாலஸ்தீனியிருந்தது. இஃது 13ம் நூற்றாண்டில் (ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டில்) நிர்மாணிக்கப்பட்டது. இஃது பைத்துல் முகத்திஸ்இல் (ஜெரூசலத்தில்) வீற்றிருக்கும் மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலுக்கு மிகவும் அருகாமையிலிருந்தது.

இந்த விருந்தினர் மாளிகையை ஷேஹ் பாபாஃபரீத் ஷிக்குர் கிங்(ரஹ்) அவர்கள்தாம் கட்டினார்கள்.

இந்த விருந்தினர் மாளிகை பல நூற்றாண்டுகளாக முறையான பரிபாலனத்தின் கீழ் இருந்தது. இந்தியாவிலிருந்து பைத்துல் முகத்திஸ் செல்வோர் இங்கே தங்கி இருப்பர். இதன் தெளிவான வரலாறு இன்றும் கிடைக்கின்றது.

1924 இல் அதாவது கிலாபத்தின் இறுதி நான்களில் ஷேஹ் நாதிர் அல் அன்சாரி என்பவர் மேலாளராக இருந்து பராமரித்து வந்தார். 1952இல் அவர் இறந்த பின் அவருடைய மகன் முஹம்மத் அந்த மாளிகையை மேலாளராக இருந்து பராமரித்து வந்தார். 1948 வரை இந்திய முஸ்லிம்கள் அடிக்கடி பாலஸ் தீனிலுள்ள ஜெரூசலம் சென்று வந்தார்கள். அப்போதெல்லாம் இங்கே தங்கினார்கள்.

13ஆம் நூற்றாண்டிவ் அதாவது ஹிஜ்ரி 7ஆம் நூற்றாண்டில் அது நிர்மாணிக்கப்பட்ட நாளிலிருந்து அந்த இந்திய விருந்தினர் மாளிகை முறையாக நிருவகிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு மேலே தாம் குறிப்பிட்டவை சாட்சி!

இந்தப் பராமரிப்பிற்கான பணம் இந்தியாவிலிருந்து தான் சென்றிருக்கின்றது.

இந்த அளவுக்கு இந்திய முஸ்லிம்களுக்கும் மஸ்ஜிதுல் அக்ஸா ஜெரூசலம் இவற்றிற்கும் நெருங்கிய தொடர்பும் உறவும் நெருக்கமும் இருந்தது. இஃது 1967 வரை தொடர்ந்தது. 1967இவ் யூதர்கள் இந்த விருந்தினர் மாளிகையை இடித்துத் தரைமட்டமாக்கினர். (Tasir Jbara: INdian Muslims and Palestenian Question P59)

**இஸ்ரேல் உருவாக்கமும் இந்திய முஸ்லிம்களும்**

முதல் உலகப்போர் (1917களில்) அதன் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. (1914 முதல் 1918 வரை முதல் உலகப்போர் நடைபெற்றது). அப்போது தான் ஆங்கிலேயே கூட்டுப் படைகளிடம் கிலாபத் படைகள் தோற்றன. உண்மையைச் சொன்னால் கீழறுப்பு வேலைகளின் வழி முஸ்லிம் படைகளைத் தோற்கடித்தனர்.

ஏற்கெனவே திட்டமிட்ட சதிகளின் கீழ் கிலாபத் வீழ்த்தப்பெற்றது.

இந்தக் காலக்கட்டத்தில்தான் போல்பர் பிரகடனம் (1917) என்ற ஆங்கிலேயர்களின் பிரகடனம் வெளிவந்தது.


இந்தப் பிரகடனந்தான் யூதர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்றும், அந்த நாட்டை ஆங்கிலேயர்கள், பாலஸ்தீனில் அமைத்துத் தருவார்கள் என்றும் பிரகடனப்படுத்தியது. (விரிவான விளக்கங்களுக்கு வைகறை வெளிச்சம், பிப்ரவரி 2009).

இந்த பின்னணியில் 1918இல் பாலஸ்தீன், ஜெரூசலம் நமது முதல் கிப்லாவான பைத்துல் முகத்திஸ் வீற்றிருக்கும் பூமி இவை அனைத்தும் பிரிட்டிஷ் நாட்டின் அதாவது ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் (Mandate) கீழ் விடப்பட்டன. இதனை செய்தது அப்போதைய உலக நாடுகள் சபை என்ற பெயரை பெற்ற 'லீக் ஆஃப் நேஷன்ஸ்' உலக நாடுகளின் கூட்டு சபை (League of Nations)

1918இல் இந்திய முஸ்லிம்கள் ஆங்கில அரசின் பரிபாலனத்தின் கீழ் பாலஸ்தீனை ஒப்படைத்திடக்கூடாது எனப் போராடினர். ஆங்கிலேயே அரசுக்கு தந்திகளை அனுப்பினர்.

1920ஆம் ஆண்டு பாலஸ்தீன் முஸ்லிம்கள் பாலஸ்தீனில் ஒருபெரும் போராட்டத்தை நடத்தினார்கள். இந்தப் பேராட்டம் பொதுவான வேலை நிறுத்தம் என்ற அளவில் அமைந்தது.


vaigarai velicham official



போராட்டத்தின் நோக்கம் பாலஸ்தீனைப் பிரித்து யூதர்களுக்கு ஒரு நாட்டை ஏற்படுத்துவதைத் தடுப்பதாகும். இந்தப் போராட்டம் பாலஸ்தீனை ஸ்தம்பிக்கச் செய்தது.

போராட்டத்தை அடக்கிட பல இடங்களில் ஆங்கிலேயர்கள் துப்பாக்கிச் சூடுகளை நடத்தினார்கள். 48 பாலஸ்தீன முஸ்லிம்கள் உயிரிழந்தார்கள். 73 பேர் காயம்பட்டார்கள்.

இந்தப் போராட்டத்தின் போது இந்தியாவில் நடந்து கொண்டிருந்த கிலாபத் இயக்கம் பாலஸ்தீன மக்களுக்காக இங்கே நமது இந்தியாவில் ஆங்கிலேயர்களை எதிர்த்து போராட்டங்களை நடத்திற்று.

ஆயிரக்கணக்கான தந்திகளை ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இருப்பிடமான லண்டனுக்கு அனுப்பியது. இந்தக் காலத்தில் முதலில் பாலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தது ஆங்கில அரசு. இப்போது அவர்களின் உயிர்களைப் பறிக்கின்றது. இப்படி பாலஸ்தீன மக்களுக்கெதிராக இரண்டு குற்றங்களைச் செய்தவர்களாக ஆங்கிலேய அரசு இருக்கின்றது என்று குற்றஞ்சாட்டியது இந்தியாவில் இயங்கிய கிலாபத் இயக்கம். இதனால் ஆங்கில அரசு ஓர் உலகளாவிய எதிர்ப்பு எதிர்படுமோ என அஞ்சியது.

கிலாபத் இயக்கம், பாலஸ்தீன் மக்களுக்கு இப்படி ஆதரவையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டிருந்த நாள்களில் பாகிஸ்தானும் பர்மாவும் இந்தியாவுடனிருந்தது. சிங்கப்பூர், மலேசியா, போன்ற நாடுகளிலும் இந்திய முஸ்லிம்கள் வியாபார அடிப்படையிலும், இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் அடிப்படையிலும் துடிப்பானதொரு உறவைக் கொண்டிருந்தனர். இந்த இடங்களிலும் ஆங்கிலேயர்களுக்கெதிராக எதிர்ப்புப் பரவிற்று.

அதிர்ந்துபோன ஆங்கிலேய அரசு பாலஸ்தீன் மக்கள் குழுமம் ஒன்றை லண்டன் வரவழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்திற்று. அப்போது லண்டன் வந்த பாலஸ்தீன் மக்கள் குழுமம், இந்திய கிலாபத் இயக்கத்தின் தலைவராக இருந்த ஹாஜி முஹம்மத் ஜஹுத் தானிக்கு (Jahutani) நன்றி சொன்னது. சிறப்பு நன்றி செய்தி ஒன்றை இந்திய முஸ்லிம்களுக்கு அனுப்பி வைத்தது.

**அடுத்த இதழில் தொடரும்...**



# பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

- தொடர்



# தில்சுக் நகர் (ஹைதராபாத்) குண்டுவெடிப்பு 2013

## உண்மையான குற்றவாளிகளின் இமெயில் முகவரியை எடுத்து அதை அப்பாவி முஸ்லிம்களின் மீது பொருத்திய வழக்கு

**ஜூலை மாத தொடர்ச்சி....**

5) மங்களூரில் உள்ள VRL டிராவல்சில் பயணச்சீட்டு விற்பவர். குற்றவாளி எண் 2 டேனிஷ் என்ற பெயரில் மங்களூரில் இருந்து ஹைதராபாத்திற்கு 9 பிப்ரவரி 2013 அன்று பயணம் செய்ய இந்த ட்ராவல்சையே பயன் படுத்தி உள்ளான். மேலும் அவன் அனி என்ற பெயரிலும் 15 பிப்ரவரி 2013 அன்று பயணம் செய்துள்ளான்.

இவர்கள் உண்மையான சாட்சியங்களாக இருக்கவில்லை. ஆதலால் அவர்கள் வற்புறுத்தப் பட்டதை தொடர்ந்து பின்வரும் பிழைகளையும் செய்தனர்.

1) அப்துல்லாபர்மேட்டில் உள்ள வீட்டை குற்றவாளி எண் 4 இற்கு வாடகைக்குக் கொடுத்த பெண்மணியின் கணவர். இவர் குற்றவாளி எண் 2, 3 ஆகியோரை பார்த்துள்ளேன் என்று கூறியவர். ஆனால் அடையாள அணிவகுப்பில் குற்றவாளிகள் இருவரையும் அடையாளம் காட்ட அவரால் முடியவில்லை.

2) குற்றவாளிகள் வசித்த அப்துல்லா பர்மேட்டின் வீட்டின் அருகில் குடி இருந்தவர் களில் ஒருவர் (PW60). இவரால் குற்றவாளி எண் 4ஐ நீதிமன்றத்தில் வைத்து அடையாளம் காட்ட முடியவில்லை.

3) குற்றவாளி எண் 2, 4 ஆகியோருக்கு மிதிவண்டியை விற்ற ஆட்டோ டிரைவர் (PW56). இவர் அடையாள அணிவகுப்பின் போது குற்றவாளி எண் 5 ஐ குற்றவாளி எண் 4 என அடையாளம் காட்டினார்.

4) பார்க்கிங் பகுதியில் வேலை செய்யும் ஊழியர் (PW67), குற்றவாளிகள் எண் 2,3,4 ஆகியோரைப் பற்றி விரிவான தகவல்கள் கொடுத்த அவரால்அடையாள அணிவகுப்பின் போது குற்றவாளிகளில் ஒருவரை மட்டுமே அடையாளம் காட்ட முடிந்தது.

5) குற்றவாளி எண் 3 இதற்கு பணம் கொடுத்த வெஸ்டர்ன் யூனியன் மணி நிறுவனத் தின் தலைமை அதிகாரி. அடையாள அணி



vaigarai velicham official

வகுப்பின் போதும் இவரால் குற்றவாளியை அடையாளம் காட்ட முடியவில்லை.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட சாட்சியங் களின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி உள்ளது. எனவே இந்த சாட்சியங்களை பயன் படுத்தி நிரூபிக்கப்பட வேண்டிய உண்மைகள் வழக்கில் நிரூபிக்கப்படவில்லை

## ஓ. முக்கியமான சாட்சியத்தை அலட்சியப்படுத்தி விடுதல்

சில முக்கியமான சாட்சியங்களை காவல் துறையும் நீதிமன்றமும் புறக்கணித்ததாகவே தெரிகின்றது. உதாரணமாக,

### I) குற்றம் நடந்த இடத்தில் இருந்து எடுக்கப் பட்ட சிம் கார்டுகள்

குற்றம் நடந்த இடத்தில் இருந்து சில முக்கியமான பொருட்கள் கண்டெடுக்கப் பட்டன. உதாரணமாக, A1 மிர்ச்சி கடையில் இருந்து எடுக்கப்பட்ட போன்களின் பாகங்கள் மற்றும் மதர் போர்டுகள். 107 பேருந்து நிலை யத்தில் இருந்து எடுக்கப்பட்ட இரண்டு சிம் கார்டுகள் (AIRCEL சிம் எண் 8991801071, 21449 07263 மற்றும் Idea சிம் எண் 8991070538, 00029 70430) மற்றும் சில உடைந்த சிம்கார்டுகள். இந்த சிம் கார்டுகள் சம்பவம் நடந்து முடிந்தவுடன் கிடைக்கப் பெற்றவை.

எனவே இவை மிகவும் நம்பத்தகுந்த சான்று களாகும். அஜ்மீர் சரீப் குண்டுவெடிப்பிலும் 2007ல் நடந்த மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப் பிலும் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற சிம் கார்டுகளே உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க காவல்துறைக்கு உதவியது. ஆனால் இவ்வழக்கில் இந்த சிம் கார்டுகளை பற்றி எந்த விசாரணையும் மேற் கொண்டதாக தெரிய வில்லை. உண்மையான குற்றவாளிகளின் முகம் வெளியே தெரிய தேசிய புலனாய்வு முகமை விரும்பவில்லை என்பதே உண்மை.

### 2) TV9 செய்தி நிறுவனத்தின் வீடியோ பதிவுகள் அடங்கிய சிடியை நீதிமன்றத்தில் போட்டுக்காட்ட வில்லை

நாகேஸ்வர ராவ் (PW143) என்பவரே TV9 செய்தி நிறுவனத்தின் நிருபர் ஆக இருந்தவர். குண்டுவெடிப்பு நடந்து முடிந்த உடன் சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்று அவர் வீடியோ பதிவுகளை எடுத்துள்ளார். அவர் இந்த வீடியோ பதிவுகளை எடுத்துக் கொண்டிருக்கும் போது அவரிடம் ஒரு மனிதர் வந்து குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் பெட்டியுடன் கூடிய ஒரு மிதிவண்டியை ஒருவர் நிறுத்தி விட்டு உடனடியாக சாலையை கடந்து சென்றதை தான் பார்த்ததாகவும் அதன் பின்னரே குண்டுவெடித்தது என்றும் கூறியுள்ளார். அந்த பெட்டியில் வெடி பொருட்கள் இருந்திருக்க வேண்டும் என்று சந்தேகித்து உள்ளார் அவர். வெளிப்படையாக பேட்டி கொடுக்க அவர் தயங்கியதால் TV9 நிருபர் அவரின் முகத்தை மறைத்து பேட்டி எடுத்துள்ளார். இந்தப் பேட்டி இரவு 10 மணிக்கு எடுக்கப்பட்டுள்ளது. பேட்டி எடுத்த அரை மணி நேரத்தில் இப்பேட்டி ஒளிபரப்பவும் பட்டுள்ளது. இந்த பேட்டி அடங்கிய சிடி (CD) ஆதாரமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இந்த பேட்டியை நீதிமன்றத்தில் போட்டு காட்டவில்லை விசாரணை தரப்பு.

பேட்டி கொடுத்த நபர் நேர்மையான சாட்சியாக தெரிகின்றார். மேலும் இந்தப் பேட்டி, சம்பவம் நடந்த மூன்று மணி நேரத் திற்குள் எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த சாட்சியத்தின் தரமானது நம்பிக் கைக்குரியது. இந்த சிடியை நீதிமன்றத்தில் போட்டு காட்டியிருந்தால் பேட்டியில் கூறப் பட்ட மிதிவண்டியை நிறுத்தும் நபரின் அடையாளத்தோடு கைது செய்யப்பட்ட குற்ற வாளிகளின் அடையாளம் பொருந்தி போகிறதா இல்லையா என்று அறிந்து இருக்கலாம். கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் ஒருவரின் அடையாளங்கள் கூட பேட்டியில் கூறப்பட்ட நபரின் அடையாளத்தோடு ஒத்துப்போகவில்லை என்பதனால் விசாரணை தரப்பு இந்த சிடியை நீதிமன்றத்தில் போட்டு காட்டிடவில்லை என்றே தோன்றுகிறது.

## தேவை மறுவிசாரணை

உண்மையில் தில்சுக் நகர் குண்டுவெடிப்பை நடத்தியது கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் அனைவருமா அல்லது வேறொரு கூட்டமா

என்பதை அறிய பின்வருபவற்றை மீண்டும் நாம் விசாரணை செய்ய வேண்டும்.

*1)* ஒவ்வொரு இமெயில் கணக்குகள், ஒவ்வொரு இமெயில்கள் மற்றும் உரையாடல் மெயில்கள் இவற்றின் IP முகவரிகள் MAC முகவரிகள், தேதி, நேரம், இருப்பிடம் ஆகிய வற்றை கண்டுபிடிக்க வேண்டும். பயன்படுத்தப் பட்ட கணினியை நோக்கியும் உண்மையான குற்றவாளியை நோக்கியும் இந்த விசாரணை இட்டுச் செல்லும்.

*2)* அஜ்மீர் சரீப் குண்டுவெடிப்பு, 2007 இல் நடந்த மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பில் நடந்ததைப் போன்ற விசாரணையை இந்த வழக்கில் மேற்கொள்ள வேண்டும். அதாவது குற்றம் நடந்த இடத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற சிம் கார்டுகளை பற்றிய முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.


*3)* இவ்வழக்கின் விசாரணையில் சம்பந்த மில்லாத மொபைல் போன்களின் அழைப்பு விபரங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஆனால் குற்றவாளிகள் தங்களுடைய பெயரில் மொபைல் போன்களை வைத்திருந்தார்களா மேலும் அதை பயன்படுத்தினார்களா என்று விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. இந்த கோணத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அப்படி அவர்களுடைய பெயரை பயன்படுத்தியே மொபைல் போன்களை வைத்திருந்தார்கள் என்றால் அதனுடைய அழைப்பு விபரங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும். கைது செய்யப்பட்டவர்கள் குண்டு வெடிப்பில் ஈடுபட்டார்களா அல்லது அவர்கள் அப்பாவிகளா என்பதை இந்த விசாரணை உறுதி செய்யும்.

*4)* TV9 செய்தி நிறுவனத்தின் உடைய வீடியோ பதிவுகள் அடங்கிய குறுந்தகடு நீதிமன் றத்தில் போட்டுக் காட்டப்பட வில்லை. இந்த வழக்கு மறுவிசாரணை செய்யப்பட்டால் இந்த குறுந்தகடை பார்த்து அதில் குற்றவாளி ஒருவரை நேரில் பார்த்ததாக சாட்சியம் கூறும் நபர் அளித்த விபரங்கள் குற்றவாளிகள் எண் 2,3,4 ஆகியோரில் ஒருவருக்காவது பொருந்திப் போகிறதா என்பதை கவனமாக ஆய்வு செய்ய வேண்டும்.

*5)* குற்றங்கள்பலசெய்யும்போதுஒவ்வொரு பெயரை குற்றவாளி பயன்படுத்தியதாக கூறப் பட்டுள்ளது. உண்மையில் அந்தப் பெயர்களை உடைய நபர்கள் இருக்கிறார்களா என்பதை காவல்துறை முழுமையாக விசாரணை செய்ய வில்லை. அப்பெயர்களை உடைய நபர்கள் இருந்திருக்க வாய்ப்பு உண்டு.

தங்கள் பெயரிலேயே பண பரிவர்த்தனை, இணையத்தில் உலாவுதல், பொருட்களை வாங்குதல் போன்ற செயல்களை செய்திருக்க வாய்ப்பு உண்டு. எனவே இதனை தீர விசாரணை செய்து அப்பெயரில் நபர்கள் இருக்கின்றார்களா மற்றும் போலியான ஆவணங்களை தயாரித்து அப்பெயர்களை கைது செய்யப்பட்ட வர்கள் மீது தேசிய புலனாய்வு முகமை திணித்ததா என்றும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**அடுத்த இதழில்....**





vaigarai velicham official

# மணிப்பூரில் நரவேட்டையாடிய முதல்வர் பிரேன்சிங்!

- ச.அருணாசலம்

‘‘**மணிப்பூர்** கலவரத்தை உருவாக்கி, நான் தான் குக்கி பழங்குடிகளின் குடியிருப்புகளில் குண்டு வீசச் சொன்னேன். ..”என பெருமையாக மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங் பேசிய ஆடியோ டேப் அம்பலமாகியுள்ளது. ஒரு முதலமைச்சர் இப்படியெல்லாம் செய்ய முடியுமா? ஆடியோ டேப் முழு விவரங்களும், அதன் பின்னணியும்;

கடந்த ஆண்டு (2023) மே மாதம் வெடித்துக் கிளம்பிய மணிப்பூர் வகுப்புக் கலவரம் இந்திய நாட்டு அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியது.

மணிப்பூர் பள்ளத்தாக்குகளை உறைவிடமாக கொண்ட மெய்தீ இன மக்களுக்கும், மலைப் பகுதிகளில் வாழ்ந்துவரும் குக்கி-ஜோ இன மக்களிடையே ஏற்பட்ட இந்த இன மோதலுக்கு காரணம் மெய்தீ இன மக்களுக்கு பட்டியலின அந்தஸ்து அளித்த அன்றைய மணிப்பூர் உயர்நீதி மன்றத்தின் சர்ச்சைக்குரிய தீர்ப்பு ஒருபுறம் என்றாலும், அது மட்டுமில்லை.

தமிழகத்தை சார்ந்த நீதீபதி எம்.வி. முரளீதரன் அளித்த அந்த தீர்ப்பை உச்ச நீதி மன்றம் ரத்து செய்து, நீதிபதி முரளீதரனை கொல்கத்தா உயர்நீதி மன்றத்திற்கு “பணியிடை மாற்றம்” செய்து கண்டித்தது இன்னும் நினைவிலி ருக்கிறது.

நூற்றுக்கணக்கான உயிர்களுக்கு மேல் காவு கொண்ட இந்த வகுப்பு கலவரம் ஒரே நாளிலோ அல்லது தற்செயலாகவோ ஏற்படவில்லை!

பிரதமர் மோடிக்கு மணிப்பூர் தீயை அணைக்கவோ, மணிப்பூர் சென்று அமைதி காக்கவோ, ஆறுதல் கூறவோ அன்றும் நேரமில்லை, இன்றும் நேரமில்லை!

**இத்தகைய பாராமுகதிற்கு பின்னால் ஒளிந்து இருக்கும் மர்மம் என்ன ?**

இதற்கு விடை கூறுவதுபோல், இந்த மர்மத்தை விலக்குவது போல், ‘ஒரு ஒலி நாடா(டேப்)’ சில தினங்களுக்கு முன், மணிப்பூர் கலவரத்தை விசாரிக்கும் ஓய்வு பெற்ற கௌகாத்தி உயர் நீதிமன்ற நீதிபதி. திரு. அஜய் லம்பா தலைமையிலான விசாரணை ஆணையத் திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 48 நிமிடங்கள் ஓடும் இந்த ஒலி நாடாவில் இருப்பது, மணிப்பூர் முதலமைச்சர் திரு. பிரேந்திர சிங், தனது அரசு அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் பேசிய பேச்சுக்கள்தான்.

இதன் சிறு பகுதி ஆகஸ்ட் 7 அன்று மணிப் பூரில் இருக்கும் சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலானது. இப்பொழுது இதன் முழு நீள டேப்பும் தில்லியில் இருந்து வெளிவரும் ‘தி வயர்’ என்ற ஆங்கில இணையதள



ஊடகத்தின் வசம் உள்ளது. டேப்பின் சாராம் சங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது!

மணிப்பூர் அரசு இந்த டேப் உண்மையான தல்ல என்று கூறியுள்ளது. ஆனால், அவை விசாரணை ஆணையத்திடம் 'சாட்சி ஆவணமாக' சமர்ப்பிக்கப்படுள்ளதால் அதன் சாராம்சங்கள் முக்கியம் பெறுகின்றன.

இந்த ஒலி நாடாவில் மணிப்பூர் முதல்வர் என். பிரேந்திர சிங், நான் தான் இந்த மெய்தீ குக்கி இன பிரச்சினைக்கு வித்திட்டு, குக்கி இன மக்களை தனிமைப்படுத்த காரணமானவன் என்று பெருமை பேசுகிறார்.

அவர் பெருமைப்பட்ட செயல்பாடுகளாவன;

கிறிஸ்துவர்களான குக்கி பழங்குடி மக்கள் படித்து ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் பதவிகளுக்கெல்லாம் வருவதா? என்று சொல்லி மெய்தீ மக்களை போராடத் தூண்டியது அதற்கு உதவியது எல்லாமே நான்தான்.


குக்கி இன மக்களுக்கு எதிராக கிராம குழுக்களை (village groups) ஏற்படுத்தியதிலும், மெய்தீ இன மக்கள் மட்டுமே உள்ள இத்தகைய கிராம குழுக்களுக்கு ஆயுதங்கள் அளித்து தாக்குதலை துவங்கியது நான் தான்!

குக்கி இன மக்கள் வாழும் இடங்களிலும், மாவட்டங்களிலும் 51 எம்.எம். மோர்ட்டார் வெடி குண்டுகளை வீச ( எதிரி நாட்டுப்படை மீது வீசப்படும் ராணுவ குண்டுகள்) உள்ளூர் காவலர்களுக்கு அனுமதி கொடுத்ததும், அவ்வாறு குண்டு வீசுவதை ஊக்குவித்ததும் நான்தான்.

மணிப்பூர் கலவரத்திற்கு, மெய்தீ - குக்கி இன மோதலுக்கு முழு முதல் காரணம் மணிப்பூர் முதல்வர் பிரேந்திர சிங்தான் என குக்கி இன மக்களின் அமைப்புகள் ஆரம்ப முதலே குற்றஞ்சாட்டி வருகின்றன.

பிரேந்திர சிங்கின் ஒரு தலை பட்சமான மெய்தீ இன பெரும்பான்மை வாதமே, குக்கி இன மக்கள் 'தனி மாநிலம், தனி அதிகார அமைப்பு' வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படைக் காரணமாகும்.

இந்த அதிகாரப் பிரிவு கோரிக்கையை - இன அடிப்படையில் மாநில எல்லைகளையும் ஆட்சி அமைப்பையும் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் மூல காரணமே பிரேத்திர சிங்



கின் மெய்தீ இன பெரும்பான்மை வாதம் தான்.

இதற்கு காரணமான மணிப்பூர் முதல்வரை நீக்குவது குறித்து வாய்திறக்காத மோடி, 'தான் யார் பக்கம் இருக்கிறேன்' என்பதை தெளிவாகவே உணர்த்தியுள்ளார்.

இந்த நிலையில் மணிப்பூர் சென்ற உள்துறை அமைச்சர் அமீத் ஷா பிரேந்திர சிங் கை ஒருங்கிணைந்த அதிகார பொறுப்பிலிருந்து (unified command) விடுவித்து, குக்கி இன மக்கள் மீது அவர்களது குடியிருப்புகள் மீது காவல் துறை 51 எம்.எம். குண்டுகளை வீசக்கூடாது என உத்தரவிட்டார்.

நாடாளுமன்றத்தில் பேசுகையில்,

"மணிப்பூரில், டி ஜி பி மாற்றப்பட்டுள்ளார், தலைமைச்செயலர் மாற்றப்பட்டுள்ளார், முதல்வர் ஒன்றிய அரசுடன் ஒத்துழைப்பதால் அவரை மாற்ற வேண்டிய அவசியமில்லை" என்று ஆகஸ்டு 9;2023ல் கூறினார்.

இதுகுறித்து இந்த டேப்பில் பேசும் மணிப்பூர் முதல்வர் பிரேந்திர சிங், அமீத் ஷாவை மிமிக்ரி நையாண்டி செய்வதை கேட்க முடிகிறது.

"அமீத் ஷா இங்கு வருகை தந்தபோது, அவர் கேட்டார்..

"பிரேன் ஜீ.."

"சொல்லுங்க சார்.."

"எல்லாம் கேள்வி பட்டேன்.. நீங்கள் குண்டுகளை உபயோகிக்கிறீர்கள்.. இனிமேல் அவ்வாறு உபயோகிக்கக்கூடாது" என்று அறிவுறுத்திய உடன் டி.ஜி.பி, மற்ற அதிகாரி களை வரவழைத்து "குண்டுகளை இனிமேல் பயன்படுத்தக் கூடாது" என்று உத்தரவிட்டார்.

அமித்ஷா அவ்வாறு கூறிவிட்டு வெளி யேறிய பின், நான் அதிகாரிகளிடம் கூறினேன்; வெளிப்படையாக யாரும் குண்டுகளை



vaigarai velicham official

உபயோகிக்க கூடாது, யாருக்கும் தெரியாமல் உபயோகிக்க வேண்டும்" என்றேன் என பிரேன்சிங் பேசியுள்ளது டேப்பில் உள்ளது!

அமீத் ஷாவுக்கே "அல்வா" கொடுக்கும் ஆணவம் பிரேன் சிங்குவிற்கு எப்படி வந்தது?

இதைப்போன்று, பிறிதோரிடத்தில், ஆயுதங்களை காவலர் ஆயுதக்கிடங்குகளில் இருந்து கொள்ளையடித்து சென்ற மெய்தீ இன கிராமக் குழுக்களை கைது செய்யப்படாமல் பாதுகாத்தது நான்தான் என முதல்வர் பிரேன் சிங் இந்த டேப்பில் குறிப்பிடுகிறார்.

"யார் இவர்களை கைது செய்ய முடியும்? 4000, 5000 ஆயுதங்கள் காணமல் போன தென்றால் அதற்கு யாரை அவர்கள் கைது செய்ய முடியும்? முதல்வரையா? முதல்வரை கைது செய்த பின்னரே உங்களை தொட முடியும்" என்று தனது "வீர தீரச் செயல்களை" பட்டியலிடுகிறார் முதல்வர்.

குக்கி இன ஒழிப்பை ஆரம்பாய் தெங்கோல், மெய்தீ லீப்புன் போன்ற ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளை பக்கபலமாக வைத்துக்கொண்டு மணிப்பூர் முதல்வர் நர வேட்டையாடியுள்ளது இன்று இந்த ஒலி நாடா ஆதாரங்களின் மூலம் "பிரம்மாணப் பத்திரமாக" உருவெடுத்துள்ளதை நாம் காண்கிறோம். இது அனைவரையும் திகைப்புக்குள்ளாக்கி உள்ளது.

இதுவரை, 22,707 ஆயுதங்கள் கொள்ளை யடிக்கப்பட்டன, பிடி பட்டதோ வெறும் 1,757 தான். அது போன்று 6,50,000 ரவுண்ட் துப்பாக்கி குண்டுகளை கொள்ளையடித்தனர், ஆனால் இதுவரை பிடிபட்ட குண்டுகளின் எண்ணிக்கை வெறும் 5600 தான் என்றால் மணிப்பூர் மாநிலம் சட்ட ஒழுங்கில் என்ன நிலைமையில் உள்ளது என்பதை நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது. இதனை அம்மாநில முதல்வரே ஊக்குவிக்கிறார் என்பது வெட்கக்கேடு!

**அகதிகளாக்கப்பட்ட பழங்குடிகள்**

சென்ற ஆண்டு ஜூலை 19 அன்று மணிப்பூர் சமூக ஊடகங்களில் இரண்டு இளம் குக்கி இன பெண்களை முழு நிர்வாணமாக நடு ரோட்டில் இழுத்து வரும் காணொலியை கண்டு இந்தியா மட்டுமல்ல, மனித குலமே கொதித்தது.

பிரதமர் அப்பொழுது வேண்டா வெறுப்பாக திருவாய் மலர்ந்தார், இன்று மேற்கு வங்க மருத்துவர் பாலியல் வன்கொலைக்கு பதறிய வர்கள் அன்று பாராமுகமாக இருந்தனர்.

ஆனால், பிரேந்திர சிங் நிர்வாண ஊர்வலத்தில் மெய்தீ இன இளைஞர்களின் பங்கு பற்றியும், மெய்தி சமூகம் இதை எப்படி எதிர் கொள்ள வேண்டும் என்றும் இந்த ஒலிநாடாக் களில் உளறியிருக்கிறார்.

"போட்டாக்கள் எல்லாம் சரிதான், கைகள் அங்கும் இங்கும் நகர்கிறது, தெரிகிறது. ஆனால், முழு உண்மை அந்த போட்டோக்களில் தெரிகிறதா?" என மெய்தி இன இளைஞர்கள் அந்த பெண்களின் நிர்வாண உடம்பில் கைகள் தாண்டவமாடுவதை குறிப்பிட்டு பேசும் பிரேந்திர சிங், மெய்தீ இன சமூகத்தை நோக்கி, "நீங்கள் பெருமையுடன் உலகிற்கு கூற வேண்டும், இவ்விரு பெண்மணிகளையும் சாகாவிடாமல் காப்பற்றியது மெய்தீ இன இளைஞர்கள் தான் என பெருமையாக நெஞ்சு நிமிர்த்தி கூறுங்கள்" என போலிப் பெருமை பேச மெய்தீ மக்களை அழைக்கிறார்.

**அரசு நிர்வாகத்தை சீர்குலைக்கும் பாஜக அரசு! திமுக- பாஜக கூட்டணிக்கு வாய்ப்புள்ளதா?**

அன்று 2002 குஜராத் கலவரத்தின் போது, அன்றைய குஜராத் முதல்வர் மோடி, "இந்துக்கள் தங்களது கோபத்தை காட்டுவதை (முஸ்லீம் மக்களை கொன்று குவிப்பதை) தடுக்காமல் தள்ளி நில்லுங்கள் என்று உயர் காவல் அதிகாரிகள் கூட்டத்தில் கூறியதாக சாட்சி சொல்லப்பட்டது,

அவ்வாறு கூறியவர்களில் ஒருவர் - பாரதீய ஜனதா கட்சி தலைவரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான திரு. ஹிரேன் பாண்டியா - சில நாட்களுக்குள் படுகொலை செய்யப்பட்டார்.

இன்னொருவர் - காவல்துறை உயரதிகாரி யான ஐ.ஏ.எஸ் அதிகாரி திரு. சஞ்சீவ் வர்மா இன்று பொய் வழக்குகள் புனையப்பட்டு சிறையில் இருக்கிறார்.

ஆனால், மோடியின் அடியொற்றிய பிரேந்திர சிங்கும் தன் பங்கிற்கு மணிப்பூர் கலவரம் தானாக முளைத்து வரவில்லை, திட்டமிட்டு நடைபெற்றது. என்பதை இந்த டேப்புகளின் மூலம் உலகிற்கு காட்டியுள்ளார்.

தோன்றிய இடங்கள் வேறாக இருந்தாலும், வார்ப்புகளும், வளர்ப்புகளும் ஒன்றாக இருப்பதை யாரும் மறுக்க இயலுமா?

**நன்றி - அறம் வலைதளம்**



# மந்திரியாய் வாழ்ந்த மனைவி

**"ஹிந்த்"** என்பது அவர்களின் அழகுப் பெயர். சுஹைல், ஆத்திகா தம்பதியின் அன்பு மகள். தந்தை சுஹைல் அவர்கள், தன் சமுதாயத்தின் தலைவர். கருத்து வேறுபாடுகள் இன்றி ஏகோபித்த முடிவில் அனைவரின் அங்கீகாரத்தையும் பெற்ற தலைவர். செல்வம் இவரிடம் குவிந்து கிடந்த போதிலும் பகட்டில், படாடோபத்தில் திளைத்து பாதை மாறிடவில்லை. எளிமையும் மகத்துவமிக்க ஈகையும் சுஹைல் அவர்களின் அணிகலன்கள். வெளியூர்வாசிகளுக்கும் கூட இவர் வாரி வழங்கிடத் தயங்கியதே இல்லை. அதனால் சுஹைல் அவர்களுக்கு பயணிகளின் பார்சல் என்றொரு பட்டப் பெயரே சூட்டப் பட்டுவிட்டது. இதன்பொருள் தன்னைச் சந்திக்க வரும் வெளியூர்காரர்களுக்கும்கூட அவர்களுக்குத் தேவையான பொருட்களை தந்து அனுப்புவார்.

தாய் ஆதிக்கா அவர்களும் புகழ்மேவிய குடும்பத்தின் குலக்கொழுந்தாய் வந்தவர்தான். இப்படி மக்காவின் மாட்சிமை மிக்கதோர் பாரம்பரியத்தில் பிறந்தவர் தான் 'ஹிந்த்' என்ற அந்த மாதரசி உம்மு சலமா என்ற வாய்மணக்கும் பெயரில் வரலாறு அவர்களை நமக்கு இனம் காட்டுகிறது.

வாள் என்ற பட்டத்தோடு சரித்திரத்தின் பக்கங்களில் இன்னும் வாழ்கின்ற ஹஜ்ரத் காலித் பின் வலீத் (ரழி) அவர்களுக்கும் அல்லாஹ்வின் எதிரி என்ற இழிவோடு இறப்பு எய்திய அபூ ஜஹ்லுக்கும் அன்னை உம்மு சலமா (ரழி) அவர்கள் சிறிய தந்தையின் மகள்.

நற்பண்புகள் நிலவும் நல்ல சூழலில் கண்ணியமான குடும்பத்தில் தர்மம், வீரம் ஆகிய மகத்தான் குணங்களால் புகழ்பெற்ற குலத்தில் வளர்ந்து சிறந்தார்கள் உம்மு சலமா (ரழி) அவர்கள். அந்தப் பாரம்பரியப் பெருமையைப் பேணுகின்ற, பாதுகாக்கின்ற வகையில் உன்னத மான வழியில் வாழ்ந்தார்கள்.

குழந்தைப் பருவத்தைத் தாண்டி இளம் பருவத்தை, வனப்புமிகு வாலிபப் பருவத்தை, திருமண வயதை உம்மு சலமா அவர்கள் அடைந்போது அவர்களை பெண் கேட்பதில் மற்றவர்களை முந்திக் கொண்டார் ஒரு இளைஞர். அவர் பெயர் அப்துல்லாஹ். குரைஷ் குல இளைஞர்களில் குறிப்பிடத்தக்கவர். புகழ்பெற்ற குதிரை வீரர். மிக்காரில்லாத மாவீரர். வரலாறு அவரை அபூசலமா என்றழைக்கிறது. மக்காவின் ஒப்பாரில்லாத பிரமுகர் அப்துல் முத்தலிப் அவர்களின் செல்வமகளும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மாமியுமான 'பர்ரா' தான் அபூசலமாவின் அன்புத்தாய். அபூலஹபுடைய அடிமைப் பெண் துவையா என்பவரிடம் அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அபூசலமாவும் பால் குடித்திருக்கின்றார்கள் என்பதால் அண்ண லாரின் பால் குடிச் சகோதரர் ஆனார் அபூசலமா.

மணமக்கள் அபூசலமா உம்மு சலமாவின் இன்பத் திருமணம் இனிதே நடந்தேறியது. வாழ்க்கைப் பாதையில் வாகாய் அடியெடுத்து வைத்தனர் புதுமணத் தம்பதிகள் இருவரும். சில காலத்திலேயே ஏகத்துவத்தின் பேரொளி மக்காவில் சுடர்விடத் தொடங்கியது. இஸ்லாம் தன் அருள் முகத்தை மக்கா நகரில் காட்ட


vaigarai velicham official

ஆரம்பித்தது. இஸ்லாத்தின் இனிய அழைப்பை ஏற்றுக்கொண்ட அப்துல்லாஹ் (அபூசலமா) முதல்நிலை முஸ்லிம்களின் அணியில் இடம் பிடித்தார். ஏகத்துவ அறநெறியை தன் அழகு மனைவி ஹிந்த் (உம்மு சலமா)விடமும் கூறிட தாமதம் காட்டவில்லை. இவரின் இதயக் கதவுகள் இஸ்லாத்திற்காகத் திறந்தே இருந்தன. பல்வேறு திருப்பங்கள் அடங்கிய இஸ்லாத்தி னுடைய நெடிய வரலாற்றின் முதல் அத்தியா யத்திலேயே தங்களின் பெயர்களைப் பதிவு செய்து பெருமை தேடிக் கொண்டனர் அந்தத் தம்பதியர். ஹிஜ்ரத் எனும் தியாகப் பயணத் தையும் ஆரம்பக் கட்டத்திலேயே மேற்கொண்டு எல்லாம்வல்ல அல்லாஹ்வின் அருள்நோக்கி விரைவதில் முனைப்புக் காட்டினர் அபூசலமா (ரழி).

ஒளி சிந்தும் மதீனா நகரில் எழிலார்ந்த இஸ்லாமிய அரசு அமைந்தது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தலைமையில் இஸ்லாம் என்ற அறநெறியை அதை இதயம் குளிர ஏற்றுள்ள முஸ்லிம்களை ஒழித்துக் கட்டிட முன் வருவோருக்கு எதிராக படை நடத்திப் போரிடுங்கள் என்ற அறிவிப்பும் ஏக இறைவனிடமிருந்து வந்தது. இறைத் தூதரின் கொடிக்குக் கீழே அணிதிரண்ட போராளிகளில் அபூசலமா (ரழி)யும் இடம் பிடித்தார். களத்தில் குதித்தார். பத்ருப் போரில் விழுப்புண்களையும் காயங்களையும் அல்லாஹ்வின் பாதையில் ஏற்றார். உஹது மலையின் அடிவாரத்தையும் இவரின் குருதி நனைத்தது. உஹதுப் போரில் இவர் ஏற்ற ரத்தக்காயங்கள் மரணத்தின் வாசல்வரை இவரை அழைத்துச் சென்றது. எனினும் அபூசலமா (ரழி)யை தன்னிடம் அழைத்துக் கொள்வதற்கு அருளாளன் அல்லாஹ் குறித்து வைத்திருந்த நாள் வேறொன்று.

இவரிடமிருந்து இன்னும் சில வேலைகளை வாங்கிட வேண்டும் என்பது அல்லாஹ்வின் ஏற்பாடு. ஆகவே அவர் நலம்பெற்று எழுந்தார்.

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் ஜமாதுல் அவ்வல் மாதம் 'ஃதுல் உஷய்ரா' என்ற போரில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பங்கேற்றார்கள். இது பத்ருப் போருக்கு முன்னர் நடைபெற்றது. 'ஃதுல் உஷய்ரா போர்' என்றே வரலாற்றில் பெயர் நிலைத்துவிட்டாலும் அங்கே போர் எதுவும் நடக்கவில்லை. பனூ மத்லஜ் பனூ ளம்ரா ஆகிய கிளையினருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பினார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள். இதற்காக அவர்கள் மதீனாவுக்கு வெளியே சில நாட்கள் செல்ல வேண்டியிருந்தது. அந்த நாட்களில் இஸ்லாமிய அரசின் இடைக்கால பொறுப்பாளராக அபூசலமா (ரழி) அவர்களையே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நியமித்துச் சென்றார்கள்.

உஹதுப் போர் நடந்து முடிந்திருந்த நேரம். முஸ்லிம்களின் நெஞ்சுறுதியைக் குலைத்திடும் நோக்கில் ஒரு வதந்தி ஊதி ஊதி பரப்பப்பட்டது. பனூ அஸத் கோத்திரத்தினர் அண்ணல் நபி (ஸல்) அவர்களையும் முஸ்லிம்களையும் தாக்கி வீழ்த்திட, மதீனாவுக்குள் புகுந்து அழிவுகளை அரங்கேற்றிட முடிவு செய்திருப்பதாக அண்ண லாருக்குத் தகவல் வந்திருந்தது. அபூ சலமா (ரழி)யை அழைத்தார்கள். அவர் கையில் கொடியைக் கொடுத்தார்கள். "பனூ அஸத் கோத்திரம் வாழ்கின்ற நிலப்பரப்புக்குச் சென்று அவர்களைத் தாக்கு. இதோ நூற்றி ஐம்பது பேர் கொண்ட படைக்கு தலைமையேற்றுச் செல்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அபூசலமா (ரழி)யை வழியனுப்பி வைத்தார்கள் அல்லாஹ்வின் பாதையில்.

அண்ணலாரின் கட்டளையை அகமகிழ் வோடு ஏற்றுச் சென்றது முஸ்லிம்களின் அணி. எதிரிகளின் நீர் நிலைகளையும் பொதுப் பாதை களையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு தக்கதோர் பாடத்தை எதிரிகளுக்கு கற்பித்துவிட்டு பத்து நாட்கள் கழித்து மதீனா வுக்குத் திரும்பியது அபூசலமா (ரழி) அவர்களின் தலைமையிலான அந்த அணி. அல்லாஹ்வின் பாதையில் அபூசலமா (ரழி) எடுத்து வைத்த ஒவ்வொரு அடிக்கும் உத்தமி உம்மு சலமா (ரழி) துணையாய் நின்றார். கலங்காமல் வழியனுப் பினார்.

பனூ அஸத் மீதான அந்தத் தாக்குதலை முடித்துக்கொண்டு மதீனா திரும்பியதிலிருந்தே அபூசலமா (ரழி) வேதனைக்குள்ளானார். உஹதுப் போரில் ஏற்பட்ட காயம் ஏற்கெனவே மரணத்தின் வாசல்வரை அவரை அழைத்துச் சென்ற அந்தக் காயம் மீண்டும் தன் வேலையைக் காட்டியது. அல்லாஹ்வின் பாதையில் பெற்ற

காயங்களை அதனால் அனுபவித்த வேதனை களை வழிந்த ரத்தத் துளிகளை சாட்சிகளாக சேகரித்து எடுத்துக்கொண்டு அல்லாஹ் வாக்களித்த சுவனபதியை அடைந்திட அவரிடமே திரும்பிச் சென்றார் அபூசலமா (ரழி) அவர்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இது நடந்தது ஹிஜ்ரி மூன்றாம் (அல்லது) நான்காம் ஆண்டு. ஜமாதுல் ஆகீர் மாதம் பிறை 27ல் நாளன்று.

அன்புக் கணவராய் ஒழுக்கச் சீலராய் நிகரில்லா வீரராய் வாழ்ந்த அபூசலமா (ரழி) வின் மரணம் உம்மு சலமா (ரழி)யை கவலையில் தள்ளியது. சந்தோஷமான வாழ்க்கை பறிபோன வேதனை இதயத்தைப் பிழிந்தாலும் அல்லாஹ் வின் கருணை மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கை குண்டுமணி அளவுகூட குறைந்திட வில்லை. தானும் தன்னுடைய நான்கு குழந்தை களும் நிர்க்கதியாய் நிராதரவாய் நின்ற போதிலும் உத்தமி உம்மு சலமா (ரழி)யின் வாயிலிருந்து நிராசையை வெளிப்படுத்தும் வார்த்தைகள் ஒன்றுகூட வெளிவிரவில்லை.

“நான் எந்த வார்த்தைகளைக் கூற வேண்டும்?” அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமே கேட்டார்கள். உம்மு சலமாவே... இப்படிச் சொல் “இறைவா எங்களையும் அவரையும் (அபூசலமா (ரழி)யையும்) மன்னிப்பாயாக! சோதனைகளிலிருந்து விடுதலையளிப்பாயாக! இனி எங்களுக்கு நல்லதை வழங்குவாயாக! என்று கற்றுக் கொடுத்தார்கள் கருணை நபி (ஸல்) அவர்கள். அதையே கூறிக்கொண்டிருந்தார் உம்மு சலமா (ரழி)

உம்மு சலமா (ரழி)யின் இத்தா (காத்திருப்பு) காலம் நிறைவடைந்தது. தன் குழந்தைகளோடு வாழ்க்கையை எதிர்கொள்ளத் தயாராகி இருந்தார்கள். அப்போது ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரழி) போன்ற மேன்மக்கள் ஒவ்வொரு வராக தன்னை திருமணம் செய்திட விரும்பி பெண் கேட்டபோதும் யாருக்குமே சாதகமான பதிலைச் சொல்லவில்லை உம்மு சலமா (ரழி) அவர்கள். மறுப்பையே அனைவருக்கும் பதிலாகத் தந்தார்கள்.

ஒருநாள் அல்லாஹ்வின் திருத்தூதர் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்கள் உம்மு சலமா (ரழி)யை பெண் கேட்டு ஆள் அனுப்பினார்கள். உம்மு சலமா (ரழி) அவர்களுக்கோ நெஞ்சம் நிறைய தயக்கம். எனினும் ஓரத்தில் ஒரு மகிழ்ச்சி. அல்லாஹ்வின் தூதருக்கு மனைவியாவதென்றால் சாதாரண பாக்கியமா அது?! பெற்கரிய பேறு அல்லவோ?! ஆயினும் எனக்கு அந்த பாக்கியத்தைப் பெறும் தகுதி இருக்கிறதா? தனது தயக்கங்களை யெல்லாம் நபி (ஸல்) அவர்களின் சார்பில் வந்திருந்த நபரிடம்மே கொட்டித் தீர்த்தார்கள்.

உம்மு சலமா (ரழி) சொன்னார்கள் :

“நான் வயது முதிர்ந்தவளாகி விட்டேன். என் அநாதைக் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கு கின்ற பொறுப்பும் எனக்கு உள்ளது. எனக்கென்று காப்பாளர் (வலீ) யாரும் இங்குஇல்லை. நான் கோபக்காரியாகவும் உள்ளேன். இத்தனை குறைகளையும் என்னுள் வைத்துக்கொண்டு உலகுக்கு வழிகாட்ட வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மனைவியாக வருவது சரிதானா?” என்று கூறினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பதில் சொல்லி அனுப்பினார்கள் :

“உன் குழந்தைகளின் எதிர்காலத்துக்கு அல்லாஹ் போதுமானவன். குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன். உன் காப்பாளர்கள் எங்கிருந் தாலும் நான் உன்னை மணமுடித்துக் கொள் வதில் திருப்தியே அடைவார்கள். உன் கோபத்தைப் போக்க அல்லாஹ்விடம் நான் துஆச் செய்கிறேன்” இப்படிக் கூறி உம்மு சலமா (ரழி) அவர்களின் தயக்கங்களைப் போக்கிய நபி (ஸல்) அவர்கள் முதுமை பற்றி அன்னையின் தயக்கத்தை கண்டுகொள்ளவே இல்லை. அன்னையின் தயக்கங்கள் நீங்கின. திருமணம் இனிதே நடந்தேறியது. அன்று முதல் உலக முஸ்லிம்கள் அனைவரின் அன்னையாக உயர்ந்தார்கள் உம்மு சலமா (ரழி) அவர்கள்.

இரண்டு திருகைகள், இரு பாத்திரங்கள், பேரீத்தமர ஓலைகளை உட்பொருளாகக் கொண்ட தோல் தலையணை ஒன்று இவை அண்ணலார் அன்னைக்கு அளித்த அன்பளிப்பு.

அன்னை உம்மு சலமா (ரழி) நெக்குருக


vaigarai velicham official

கூறுகிறார்கள் :

“அன்று நான் அல்லாஹ்விடம் எங்களுக்கு இனி நல்லதை வழங்கு, என்று கேட்ட வேண்டு தலை அங்கீகரித்து அண்ணல் நபி (ஸல்) அவர் களையே அல்லாஹ் எனக்குத் தந்துவிட்டான்” அநாதைக் குழந்தைகளுக்கு தந்தையைவிட சிறந்த தந்தையாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள்.

ஹஜ்ரத் உமர் (ரழி) கூறுகிறார்கள் :

“நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னை உம்மு சலமா (ரழி)யின் வீட்டில் (தங்க வேண்டிய நாளில்) வரும்போதெல்லாம் ‘ஸைனப்’ என்ற தன் கைக் குழந்தையை மடியில் வைத்து அதற்கு பாலூட்டிக் கொண்டிருப்பார்கள். அன்னை யவர்கள், சுபாவத்தில் வெட்க உணர்ச்சி மிகுந்த நபி (ஸல்) அவர்களும் அதைக் கண்டதும் திரும்பி விடுவார்கள். இதுபோல் பல தடவை நடந்துவிட்டதை அறிந்துகொண்ட அன்னை உம்மு சலமா (ரழி)யின் தாய்வழிச் சகோதர ரான அம்மார் பின் யாஸீர் (ரழி) அவர்கள் ஒருநாள் பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னையின் இல்லத்துக்கு வருகின்ற நேரத்தில் அன்னையிடமிருந்து குழந்தை ஸைனபை வாங்கிச் சென்றார்கள். வீட்டுக்குள் வந்ததும் குழந்தையைத்தான் நபி (ஸல்) அவர்கள் விசாரித்தார்கள். குழந்தை ஸைனபை சகோதரர் அம்மார் (ரழி) அவர்கள் தூக்கிச் சென்றிருக் கிறார் என்று அன்னை உம்மு சலமா (ரழி) கூறினார்கள். இருவருக்கும் அந்தப் பொழுது சந்தோஷமாய் கழிந்தது. குழந்தையின் மீது நபி (ஸல்) அவர்களுக்கும் அன்னை உம்மு சலமா (ரழி) அவர்களுக்கு இருந்த அக்கறை, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சந்தோஷத்தின் மீது நபித்தோழர்களுக்கு இருந்த அக்கறை; இவற்றுக்கு உதாரணமாகவே வரலாறு நமக்கு அச்செய்தியை நவிண்டுரைக்கின்றது.

இறை நம்பிக்கையாளர்களின் தாய்மார் களான அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மற்ற மனைவிமார்களுடன் நல்லுறைப் பேணிக்காத்த அன்னை உம்மு சலமா (ரழி) அவர்கள் மதிக்கூர்மைக்கும் புத்திசாலித்தனத்துக்கும் பேர் பெற்று விளங்கினார்கள்.

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு 1400 தோழர்களை அழைத்துக்கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறைவனை வணங்கிட பூமியின் மேல்பரப்பில் முதன்முதலில் எழுப்பப்பட்ட கஃபாவை நோக்கிப் புறப்பட்டார்கள் உம்ரா செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில். அந்தப் பயணத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவியரில் அவர்களுக்குத் துணையாச் சென்றார் அன்னை உம்மு சலமா (ரழி) அவர்கள். ஆனால் அந்தப் புனித நகருக்குள் நுழைந்திட அனுமதிக்கவில்லை குரைஷிகள். முடிவில் ஊருக்கு வெளியே ஒப்பந்தம் கையெழுத்தானது அண்ணல் நபி (ஸல்) அவர் களுக்கும் குரைஷிகளுக்குமிடையே. ‘ஹுதை பிய்யா’ என்ற இடத்தில் ஒரு மரத்தடியில் அவ்வொப்பந்தம் நிறைவேறியது சில நிபந்தனைகளின் அடிப்படையில். முஸ்லிம்கள் இணை வைப்பவர் ஆகிய இரு தரப்பும் பத்து வருடங்களுக்கு போர் நிறுத்தம் செய்வது என்பதே அடிப்படை நிபந்தனைகளை குரை ஷிகளே முன் வைத்தனர். அனைத்தும் முஸ்லிம் களுக்கு எதிரான நிபந்தனைகள். அவற்றை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

இவ்வருடம் நீங்கள் உம்ராவை நிவேற் றாமல் வந்த வழியே திரும்பிட வேண்டும் என்பதும் குரைஷிகள் விதித்த நிபந்தனை. எனவே மதீனாவுக்குத் திரும்பி விடுவதற்காக உம்ராவை முடித்திடும் அடையாளமாக தலைமுடியைக் களையும்படி தன் தோழர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். குரைஷிகள் வலிமை குன்றி இருக்கின்றனர். நாம் வலுவோடும் பலத்தோடும் இருக்கிறோம். இந்த கட்டத்தில் நாம் அவர்களின் நிபந்தனையை ஏற்று அல்லாஹ்வின் ஆலயத்தை தரிசிக்காமல் திரும்பிச் செல்வதா? என எல்லா நபித்தோழர் களுமே தயங்கினர். இதனால் மொட்டை யடித்துக் கொள்ளும்படி அல்லது முடியைக் குறைத்துக்கொள்ளும்படி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதை செயல்படுத்துவதில் அனைவருமே தாமதம் காட்டினர். அப்போது அண்ணல் நபியவர்கள் அன்னை உம்மு சலமா (ரழி)யிடம் வந்தார்கள். தமது கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போவதால் மக்களுக்கு சோதனை ஏதும் ஏற்பட்டுவிடுமோ என்ற கவலையை அன்னையிடம் கூறினார்கள்.


அன்னையவர்கள் அண்ணலாரை அமைதிப் படுத்தினார்கள். பின்னர் ஒரு யோசனையும் கூறினார்கள். 'நபியே... நாயகமே... நீங்கள் முதலில் சென்று மொட்டையடித்துக் கொள் ளுங்கள். அதை தோழர்களின் முன்னிலையில் செய்யுங்கள்' உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தலைமுடி களைபவரை அழைத்து முடியை சிரைத்து விடும்படி கூறினார்கள். இதனைக் கண்ணுற்ற தோழர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு தலைமுடி களைந்தனர். நபித்தோழர்களின் இயல்பையும் எண்ண ஓட்டங்களையும் துல்லியமாகக் கணித்து வைத்திருந்து சமயோஜிதமாக அன்னை உம்மு சலமா (ரழி) அவர்கள் வழங்கிய ஆலோசனை ஒரு பெரும் சோதனையிலிருந்து சமுதாயத்தைப் பாதுகாத்தது என்று சொன்னால் அது மிகை யல்ல. 'மனைவி ஒரு மந்திரி' என்பதற்கு சிறந்த உதாரணமாய் விளங்கினார் அன்னையவர்கள்.

ஏராளமான நிகழ்வுகளில் தன் பழுத்த ஞானத்தையும் ஆழ்ந்த சிந்தனையையும் அன்னையவர்கள் நிரூபித்துள்ளார்கள். 'இறை நம்பிக்கையாளர்களின் அன்னை' என்ற முறையில் சமுதாயத்தை அநீதியிலிருந்து காத்திட உண்மைகளை பழிப்போரின் பழிச் சொல்லுக்கு அஞ்சாமல் சொன்னார்கள். மார்க்க ஞானங்களை கற்றுத் தேர்ந்த ஞானியாக, தியாகியாக, வாக்குறுதி காப்பவராக, பொறுமை சாலியாக, உண்மை பேசுபவராக, சங்கைக்குரிய வராகத் திகழ்ந்தார் என்று வரலாற்றின் வரிகள் உம்மு சலமா (ரழி)யை உச்சி நுகர்ந்து வாழ்த்துகின்றன. வாழ்க்கையின் சம்பவங்கள் அவர்களை வதைத்த போதும் தியாகத்தையும் பொறுமையையும் கிஞ்சிற்றும் கைவிடவில்லை அவர்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களைவிட ஏறக்குறைய இருபத்து ஐந்து வயது இளைய வரான அன்னை உம்மு சலமா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின்னர் ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்தார்கள். தம் சொந்தப் பிள்ளைகள் போலவே முஸ்லிம்கள் அனைவர் மீதும் அன்பு காட்டிய அன்னையவர்கள் ஹிஜ்ரி அறுபத்து ஒன்றாம் ஆண்டில் ஏறக்குறைய தனது தொண்ணூறாவது வயதில் அல்லாஹ்விடம் சென்றார்கள். அல்லாஹ்விடமிருந்தே வந்தோம். அவனிடமே திரும்புவோம்.

- உதவிய நூல்கள் : புகாரி, முஸ்லிம், அஹ்மது, சியரு, அஃலாமின் நுபலா இப்னு சஅத்


இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




வேர்கள் வெளியீட்டகம்

- மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

- அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்.......

- இந்த நூலிலிருந்து

விலை ரூ.30/-

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் - பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887



# மூக்கிலிருந்து ரத்தம் வருகிறதா?

**டாக்டர் சுதா,**
காது, மூக்கு தொண்டை நிபுணர்

**மூக்கிலிருந்து ரத்தம் பொதுவாக எந்த வயதிலும் ஏற்படலாம். வயதானவர்களுக்கு ஏற்படுமானால், அவை எந்தக் காரணங்களால் ஏற்படுகிறது?**

*1.* வறண்ட காற்று மற்றும் வெப்பம் காரணமாக மூக்கு உலர்வதால் ரத்தம் வரலாம். இதை சலைன் ஸ்ப்ரே (Saline nasal spray) உபயோகிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

*2.* மூக்கில் சளிப்பிடித்து, மூக்கைச் சிந்தும் போது, மூக்கிலிருந்து சளியுடன் ரத்தம் கசிய நேரிடலாம். சளிக்கான மருந்துகள் எடுத்தால், இது சரியாகிவிடும்.

*3.* முகத்தில் அல்லது தலையில் அடிப் பட்டால், மூக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு ரத்தம் கசியலாம்.

*4.* வயதானவர்கள் பொதுவாக நிறைய மாத்திரைகள் உட்கொள்ளும்போது, சில மாத்திரைகளின் பக்கவிளைவாகவும் மூக்கிலிருந்து ரத்தம் வடியலாம். ஆஸ்பிரின், குளோபிட் போன்ற ரத்தத்தின் உறைதலைக் குறைக்கும் மருந்துகளினால் இது ஏற்படலாம்.

*5.* உயர் ரத்த அழுத்த மருந்துகளை ஒருவர் சரியாக உட்கொள்ளாவிட்டால், ரத்தத்தில் அழுத்தம் கூடினால், மூக்கிலுள்ள ரத்தக்குழாய் உடைந்து, அதிக ரத்தப்போக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. மூக்கில் நேசல் பேக்கிங் (Nasal Packing) எனப்படும் சிகிச்சை அளித்தும், உயர் ரத்த அழுத்த மருந்துகளைப் பரிந்துரைத்தும், மருத்துவர்கள் அதனைக் கட்டுப்படுத்துவர்.

*6.* ஏதேனும் ஒரு மூக்கிலிருந்து அல்லது தொண்டையிலிருந்து ரத்தம் வடிந்தால், கண்டிப்பாக காது, மூக்கு, தொண்டை மருத்துவரை அணுகி எண்டோஸ்கோபி பரிசோதனை செய்து, மூக்கில் ஏதேனும் கட்டிகள் உள்ளதா என்று பேரிசோதிக்க வேண்டும்.

*7.* சிலவகை ரசயானப் பொருட்களின் அலர்ஜி, மூக்கில் பொடி போடும் பழக்கம் ஆகியவற்றால் வரக்கூடிய ரத்தப் போக்கு. அந்தப் பழக்கம் மாறினால் சரியாகிவிடும்.

**மூக்கிலிருந்து ரத்தம் வடிந்தால் என்ன செய்ய வேண்டும்?**

✤ முதலில் பதற்றம் அடையக்கூடாது.

✤ உட்கார்ந்தபடியே, மூக்கை இரு விரல்களால் முழுவதும் அடைத்து, வாய் வழியாக மூச்சுவிட வேண்டும்.

✤ அவ்வாறு கொடுக்கும் அழுத்தத்தில், 5-7 நிமிடங்களில் ரத்தம் வருவது நின்றுவிடும்.

✤ மூக்கில் ஐஸ் வைப்பதன் மூலமும் ரத்தப்போக்குக் குறையும்.

✤ பின்பு ஒரு காது, மூக்கு, தொண்டை மருத்துவமனையை அணுகிச் சிகிச்சைப் பெற வேண்டும்.

**- நன்றி : முதுமை எனும் பூங்காற்று**

# கால்களில் வீக்கம் வருவது ஏன்?



**வயதான** காலத்தில் கால்களில் சிறிது வீக்கம் வந்தால் போதும், உடனே அது நல்லதில்லை, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்ற ஒரு தவறான எண்ணம் மக்களிடையே பொதுவாக உள்ளது. அது முற்றிலும் சரியல்ல. வீக்கம் என்பது இரண்டு கால்களில் வரலாம் அல்லது ஒரு காலில் மட்டும் வரலாம். அதைப் பற்றிச் சற்று விவரமாகத் தெரிந்துகொள்ளலாம்.

### இரண்டு கால்களிலும் வீக்கம்

- ரத்தசோகை - ஹீமோகுளோபின் அளவு - ஆண்களுக்கு 13-17 gm/dl, பெண்களுக்கு 12-15 gm/dl அளவும் இருக்க வேண்டும். 10 கிராமிற்கு குறைவாக இருந்தால் ரத்தசோகை இருப்பதாக எண்ணலாம்.
- உடலில் புரதச்சத்து மிகவும் குறைந்தாலும் (சரியான அளவு 7.0 g/dl) இரண்டு கால்களிலும் வீக்கம் வரலாம்.
- சிறுநீரகம் செயலிழத்தல் மற்றும் சிறுநீரகம் வழியாகப் புரதம் வெளியேறுதல். உ.ம்.: Nephrotic Syhndrome போன்ற காரணங் களினாலும் காலில் வீக்கம் வரலாம்.
- இரண்டு கால்களிலும் வீக்கம் வர இதயச் செயலிழப்பு ஒரு முக்கியக் காரணமாகும்.
- கல்லீரல் செயலிழந்தாலும் காலில் வீக்கம் வரலாம்.
- சில உயர்ரத்த அழுத்த மாத்திரைகளினால் கால்களில் வீக்கம் வரலாம். உ.ம். : அமிலோடிப்பின், ஸ்டீராய்டு.
- இரண்டு கால்களிலும் அழுத்த ரத்த நாளங்கள் சுருண்டு பெரிதாகி இருப்பதாலும் இரண்டு கால்களிலும் வீக்கம் வரலாம். (Vericose Veins)

மிகவும் அரிதாக தைராய்டு ஹார்மோன் குறைவாகச் சுரத்தல் (மிக்ஸ்சிடோமா) மற்றும் பைலோரியாசிஸ் நோயினாலும் இரண்டு கால்களில் வீக்கம் வரலாம். இந்த வீக்கம் மென்மையாக இருக்கிறது. அதற்குப் பதிலாகச் சற்றுக் கடினமாக இருக்கும்.

முதுமையின் விளைவாக, எந்த நோய் இல்லாமல் இருந்தாலும் கால்களை நெடுநேரம் தொங்கவிட்டு இருந்தாலும் வீக்கம் வரலாம்.


vaigarai velicham official

இவ்வீக்கம் கால்களை நீட்டிப் படுக்கும்போது குறைந்துவிடும். ஆகையால் இவ்வீக்கத்தைப் பற்றிக் கவலை வேண்டாம்.

**ஒரு காலில் மட்டும் வீக்கம்**

ஒரு காலில் மட்டும் ஏற்படும் வீக்கம் குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவத்திலும், ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாமலும் வரலாம்.

**காலில் ஏற்படும் நோய்த்தொற்று**

இது ஒருவித நோய்த் தொற்றினால் கால் வீக்கம் ஏற்படுவது, பாக்டீரியா அல்லது வைரஸ் போன்ற கிருமிகளினால் கால் வீக்கம் ஏற்படலாம். கால் சிவந்திருக்கும், வீங்கியிருக்கும், வலியும் காய்ச்சலும் கூடவே இருக்கும். இதற்கு மருத்துவரிடம் சென்று தகுந்த கிருமி நாசினியை எடுத்துக் கொண்டால் கால் வீக்கமும் வலியும் குறையும்.

**காலில் ஏற்படும் பைலோரியாசிஸ் (Filariasis)**

இது ஒருவகை கொசுக் கடியினால் ஏற்படுவது. கால் சிவந்துவிடும். குளிர்க் காய்ச்சல் ஏற்படும். கூடவே வலியும் வீக்கமும் உண்டாகும். இதற்கு ரத்தப் பரிசோதனை செய்த பின்னர் ஹட்ரசான் (Hetrazan) மாத்திரையை மருத்துவர் பரிந்துரைப்பார். அப்பொழுது அது சரியாகிவிடும். கால் வீக்கமும் குறைந்துவிடும்.

ஆனால் தொடர்ந்து அல்லது விட்டுவிட்டு இந்நோய்த்தொற்று ஏற்பட்டால் கால் வீக்கம் பெரிதாகிவிடும். அதைத்தான் யானைக்கால் வியாதி (Elephantiasis) என்பர். இவ்வீக்கம் மருந்தினால் குறையாது. தேவைப்பட்டால் அறுவை சிகிச்சை (Plasitc Surgery) மூலம் ஓரளவிற்கு வீக்கத்தைக் குறைக்கலாம்.

**ஒரு காலில் மட்டும் நோய்த்தொற்று இல்லாமல் ஏற்படும் வீக்கம்**

தொடர்ந்து படுக்கையில் படுத்திருப்பவர்களுக்கு காலில் உள்ள அசுத்த ரத்தக் குழயில் ரத்தம் உறைந்து காலில் வீக்கம் ஏற்படும். காலில் வலியோ, காய்ச்சலோ இருக்காது. இந்த ரத்தக் கட்டியிலிருந்து ஒரு சிறு கட்டி இடம் பெயர்ந்து நேராக நுரையீரல் உள்ள பெரிய ரத்தக்குழாயில் ஒரு அடைப்பை ஏற்படுத்திவிடும். இதனால் நெஞ்சு வலியும் மூச்சுத் திணறலும் ஏற்பட்டு மரணம்கூட ஏற்பட வாய்ப்பு உண்டாகும். அழுத்த ரத்த நாளத்தில் ஏற்படும் ரத்தக்கட்டி (Deep Vein Thrombosis)

**யாருக்கெல்லாம் வரலாம்**



அதிகம் நடக்காமல் தொடர்ந்து படுக்கையில் படுத்திருப்பவர்கள். உதாரணம், உதறுவாதம், பக்க வாதம், மூட்டு வாதம் அல்லது வேறு உறுப்புகளில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள். மேற்கண்ட தொல்லை உள்ளவர்கள் தினமும் இயன்முறைச் சிகிச்சை செய்து வந்தால் இத் தொல்லை வராமல் தடுக்க முடியும்.

**புற்று நோயினாலும் ஒரு காலில் வீக்கம் வரலாம்**

உடலில் புற்றுநோய் ஏற்பட்டு இடுப்புப் பகுதியில் உள்ள நிணநீர் கட்டியை (Lymp nodes) பாதித்தால் அந்தக் காலில் மட்டும் வீக்கம் வரலாம்.

**- நன்றி : முதுமை எனும் பூங்காற்று**

# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் நடத்திய மதுரை மாவட்டம், திருபுவனம், அங்காடி மங்கலம் பகுதியில் 18.08.2024 அன்று பக்ரீத் பெருநாள் விருந்து நிகழ்ச்சி











vaigarai velicham official










மதுரை மாவட்டம், திருபுவனம், அங்காடி மங்கலம் பகுதியில் 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணியளவில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சகோதர சமுதாயத்தை சேர்ந்த 120க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வில் இஸ்லாம் சொல்லும் விருந்தோம்பல் பற்றியும், இஸ்லாத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வும் நடந்தது. இறுதியாக கலந்துகொண்ட அனைவருக்கும் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு விருந்து உபசரிப்போடு நிகழ்வு முடிந்தது. (குறிப்பு : பங்கேற்பாளர்கள் இஸ்லாத்தை பற்றியான கேட்ட கேள்விக்கு விரிவாக பதிலளிக்கப்பட்டது.)

# 17.08.24 அன்று திருவாரூர் மாவட்டம் தாவா









vaigarai velicham official









*17.08.24* திருவாரூர் மாவட்டம், காரியாங்குடி, பல்லவபுரம், இலங்கைசேரி, தப்லாம் புலியூர் பகுதியில் தாஃவா நடைபெற்றது

# குர்ஆனின் ஈர்ப்பு சக்தி

குர்ஆன் மக்களை தன் பக்கம் ஈர்த்துவிடக் கூடாது, குர்ஆனை யாரும் படித்து ஆய்வு செய்யக்கூடாது என்பதற்காகவே குர்ஆன் இறங்கிய காலம் முதல் இன்றுவரை குர்ஆன் மீது பல அவதூறுகளை பரப்பி வருகின்றனர்.

குர்ஆனின் பக்கம் மக்கள் சென்றுவிடக் கூடாது என்பதற்காக திசைத் திருப்பும் வேலைகளை செய்து வருகின்றார்கள். இருந்தபோதும் குர்ஆன் அவர்களின் சூழ்ச்சியை தவிடுபொடியாக்கிவிட்டது.

"நிராகரிப்பவர்களை (மற்றவர்களை நோக்கி) நீங்கள் குர்ஆனை (உங்கள் காதாலும்) கேட்காதீர்கள். (எவர்கள் அதனை ஓதியபோதிலும் நீங்கள் அச்சமயம் சப்தமிட்டு) அதில் குழப்பம் உண்டுபண்ணினால் நீங்கள் வென்று விடுவீர்கள்" என்று கூறினார்கள். (ஹாமீம் ஸஜ்தா:26)

ஒருமுறை குறைஷிகள் கூடியிருநத இடத்தில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் குர்ஆன் வசனங்களை ஓத ஆரம்பித்தார்கள். இதனைக் கேட்க ஆரம்பித்த குறைஷிகளின் உணர்வுகளை அவ்வசனங்கள் முழுமையாக ஆட்கொண்டது. நபி (ஸல்) அவர்கள் ஓதுவதை மெய்மறந்து கேட்டனர். இறுதியாக அல்லாஹ்விற்கு தலைசாயுங்கள், அவனையே வணங்குங்கள் என்ற வசனத்தை ஓதி நபி (ஸல்) அவர்கள் சிரம்பணிந்தார்கள். ஆரம்பம் முதல் இறுதிவரை வசனங்களை கேட்டுக் கொண்டிருந்த குறைஷிகள் இறை வசனங்களால் ஈர்க்கப்பட்டு நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து குறைஷிகள் சிரம் பணிந்தார்கள்.

உமர் (ரழி) அவர்கள் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தின் மிகப்பெரிய எதிரியாக விளங்கினார்கள். அந்த சமயத்தில் ஒருமுறை உமர் (ரழி) அவர்கள் காஃபாவில் தூங்குவதற்காக சென்றபோது முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். தொழுகையில் அல்ஹாக்க என்ற அத்தியாயத்தை ஓதுவதைக் கேட்ட உமர் (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமாக இவர் கவிஞராக இருப்பாரோ என்று உள்ளத்தில் கூற,

இது நிச்சயமாக (நம்மால் அறிவிக்கப்பட்டபடி) மிக்க சங்கை பொருந்திய ஒரு தூதரால் கூறப்பட்டதாகும். இது ஒரு கவிஞனுடைய சொல்லல்ல. எனினும் (இதனை) நீங்கள் வெகு சொற்பமாகவே நம்பிக்கை கொள்கின்றீர்கள். (அல்ஹாக்க : 40,41)

அடுத்து இவர் ஜோசியக்காரராக இருப்பாரோ என்று என் உள்ளத்தில் கூற, (இது) ஒரு ஜோசியக்காரனுடைய சொல்லுமல்ல (எனினும் இதனைக் கொண்டு) வெகு சொற்பமாகவே நீங்கள் நல்லுபதேசம் அடைகின்றீர்கள். உலகத்தாரின் இறைவனால் இது இறக்கப்பட்டதாகும். (அல்ஹாக்:42.43)

இந்த நிகழ்வின்போது உமர் (ரழி) அவர்கள் உள்ளத்தில் இஸ்லாத்தை ஏற்க வேண்டும் என்கிற ஆசை ஏற்பட்டது.

உமர் (ரழி) அவர்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களை கொன்றே தீர வேண்டும் என்ற முடிவோடு நபியின் இருப்பிடத்தை நோக்கி

செல்லும்போது வழியில் ஒரு ஸஹாபி இடைமறித்து உமர் (ரழி) அவர்களின் தங்கை இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட விபரத்தை கூறியபோது கோபம் கொண்ட உமர் (ரழி) அவர்கள் முதலில் தங்கையிடம் செல்வோம் எனக்கூறி தங்கையின் வீட்டிற்குச் சென்றபோது குர்ஆன் ஓதும் சப்தத்தை கேட்ட உமர் (ரழி) அவர்கள் தங்கையை அடிக்கத் தொடங்கினார். ஆனால் அவர்களின் உறுதி உமர் (ரழி) அவர்கள் மனம் இறங்கச் செய்தது. தன் தங்கையிடம் நீங்கள் ஓதிக் கொண்டிருந்ததை எனக்கு காண்பியுங்கள் எனக் கெஞ்சினார்.

சூரா தாஹாவுடைய முதல் பதினான்கு வசனங்கள் ஓதிக்கேட்ட உமர் (ரழி) அவர்கள் குர்ஆன் வசனங்களால் ஈர்க்கப்பட்டு தான் வந்த நோக்கத்தை மறந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கட்டி அனைத்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ரிச்சார்ட் மெக்கின்னி. இவர் இராணுவத்தில் பணிபுரிந்தார். இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் அதிக வெறுப்பு கொண்டவர். அமெரிக்காவுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றால் இந்த முஸ்லிம்களை கொன்றுகுவிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் கொண்டவர். தன் கண்முன்னே இஸ்லாமிய பெண்கள் பர்தா அணிந்து வருவதை கண்டு அவர்களை சுக்குநூறாக கொல்ல வேண்டும், என்னால் முடியவில்லையே என்று ஆதங்கம் கொண்டவர்.

ஒருநாள் ஒரு முடிவை மேற்கொள்கிறார் அதாவது தன் வீட்டின் அருகே உள்ள பள்ளியில் வெடிகுண்டு வைப்பது, அதன் மூலம் இருநூறுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்படுவார்கள். இதன் காரணமாக நான் சிறை சென்றாலும் பரவாயில்லை என்ற எண்ணம் தோன்றி அதற்காக தானே குண்டு தயார் செய்ய ஆரம்பித்தார். இதற்கிடையில் இந்த முஸ்லிம்களுக்கு ஒரு வாய்ப்பு அளிப்போம்.

இஸ்லாம் என்னதான் சொல்கிறது என்று பார்ப்போம் என்று கூறியவாறு, தான் குண்டு வைத்து தவிர்க்க நினைத்த அதே பள்ளிக்கு சென்றார். அங்கு சென்றபோது அவரைப் பார்த்து தங்களுக்கு என்ன உதவி வேண்டும் என்று ஒரு முஸ்லிம் கேட்டார் அதற்கு இவர் இஸ்லாத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்றார். அந்த முஸ்லிம் ஒரு குர்ஆனை அவரிடம் கொடுத்து இதைப் படியுங்கள் சந்தேகம் இருந்தால் என்னை கேளுங்கள் என்றார்.

இவனும் படிக்கத் தொடங்கினார். சந்தேகங்களை கேட்கத் தொடங்கினார். தெளிவு பெற்றார். எட்டு வாரத்தில் இஸ்லாத்தை ஏற்றார். மூன்று வருடத்தில் எந்தப் பள்ளியை தகர்க்க நினைத்தாரோ அதே பள்ளிக்கு தலைவர் ஆனார்.

குர்ஆனை மக்களிடையே எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களிடையே உள்ளது. இதை சரிவர செய்யாததின் காரணமாக இஸ்லாத்தின் உண்மையை அறியாமல் பலர் நமக்கு எதிராக மாறிவிடுகிறார்கள். இந்த நிலை மாற அழைப்பு பணியை நாம் முழு மூச்சாக செய்யப்பட வேண்டும்.



# தஞ்சை மாவட்டம் ஆடுதுறை அப்துல் அஜீஸ் நினைவு தியாகிகள் மையத்தின் சார்பாக சுதந்திர தின விழா









சுதந்திர தின பொன்விழா ஆண்டு (1997) முதல் இன்று வரை தஞ்சை மாவட்டம் ஆடுதுறை அப்துல் அஜீஸ் நினைவு தியாகிகள் மையத்தின் சார்பாக சுதந்திர தின விழாவினை சிறப்பான முறையில் நடத்தி வருகிறோம். அமைச்சர் திரு சேகர்பாபு, அரசு கொறடா திரு.கோவி. செழியன் காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவர் திரு.பீட்டர் அல் ஃபோன்ஸ், கும்ப கோணம் வழக்கறிஞர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எனது Senior Advocate திரு.ஜெய ராமன், அரசு வழக்கறிஞர் திரு.உத்திராபதி உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகளை கொண்டு வருடா வருடம் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தில் இந்திய தேசிய கொடியை ஏற்றி நமது தேசத்தின் சுதந்திரத்தினுடைய பெருமையை பறைசாற்றி வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொகிறோம். வழக்கம்போல் இவ்வாண்டும் 78 வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு எளிய முறையில் ஆடுதுறை அப்துல் அஜீஸ் நினைவு தியாகிகள் மையத்தின் 28 ஆம் ஆண்டு கொடியேற்று விழா சிறப்பாக நடைபெற்றது. எங்களுடைய இந்த பணி சிறக்க தங்களுடைய பிரார்த்தனைகளையும், வாழ்த்துகளையும் அன்புடன் எதிர்நோக்கும்.

**அ. முகம்மது இக்பால்,** B.A., B.L.,

*நிர்வாக இயக்குனர், அல்-ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட் சென்னை.*



vaigarai velicham official

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | **26/11- விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,<br>அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்<br>லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,<br>காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |


vaigarai velicham official

| | | |
|---|---|---|
| 46. | **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**<br>எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 47. | **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி | - ரூ.150.00 |
| 48. | **இஸ்லாம் ஒன்றே வழி!**<br>அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.120.00 |
| 49. | **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு**<br>ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 50. | **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?**<br>ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ | - ரூ.300.00 |
| 51. | **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** | - ரூ.20.00 |
| 52. | **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** | - ரூ.100.00 |
| 53. | **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி**<br>கரன் ஆம்ஸ்ட்ராங் | - ரூ.20.00 |
| 54. | **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** | - ரூ.50.00 |
| 55. | **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** | - ரூ.50.00 |
| 56. | **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** | - ரூ.40.00 |
| 57. | **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** | - ரூ.60.00 |
| 58. | **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** | - ரூ.60.00 |
| 59. | **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** | - ரூ.25.00 |
| 60. | **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** | - ரூ.20.00 |
| 61. | **அயா சோபியா உருவான வரலாறு** | - ரூ.50.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 01. | **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்**<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | - ரூ.100.00 |
| 02. | **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்**<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | - ரூ.100.00 |
| 03. | **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்**<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, | - ரூ.170.00 |
| 04. | **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?**<br>தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.140.00 |
| 05. | **பலி கடாக்கள்** | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | - Rs.50.00 |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | - Rs.695.00 |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | - Rs.325.00 |
| 4. | **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | - Rs.350.00 |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | - Rs.300.00 |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | - Rs.275.00 |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | - Rs.60.00 |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | - Rs.280.00 |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | - Rs.25.00 |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | - Rs.150.00 |
| 11. | **Innocent Prisoners** | - Rs.495.00 |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | - Rs.350.00 |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | - Rs.300.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் | - ரூ.60.00 |
| 02. | **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி**<br>கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் | - ரூ.30.00 |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002